மு.தயாளன்



# இதிகா

நெடுங்கதை

பாகம் 2

மகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதிகா

## இரண்டாம் பாகம்

A. KUGAN
72. 2nd LANE
ANANDAPURI
TRINCO
0771960160

மு. தயாளன்

மகுடம்
இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகுடம் பதிப்பக வெளியீடு - 72**

ISBN : 978-624-5849-34-5

● நூல் - இதிகா - இரண்டாம் பாகம் ● ஆசிரியர் - மு. தயாளன் ● உரிமை - ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு - மே - 2023 ● பக்கங்கள் - 150 ● வெளியீடு - மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● தொ.பே. இல. 0774338878 ● வடிவமைப்பு - மு. தயாளன் ● அச்சு - வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு. ● விலை - 800/=

● Book - ITHIKA Part 2 ● Author - M.Thayalan ● © Author ● First Edition - May-2023 ● Size - 1/8 ● Pages - 150 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Ph.No. 0774338878 ● Book & Cover Design M.Thayalan ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa ● Price - 800/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எமது மகுடம் பதிப்பகத்தின் 72வது வெளியீடாக மு.தயாளனின் இதிகா நாவலின் இரண்டாம் பாகத்தினை வெளியிடுவதில் பெரு மகிழ்வடைகின்றேன். மகுடத்தின் 48வது வெளியீடாக 2021ல் இதிகா முதலாம் பாகம் வெளிவந்த வேளை அதுபரவலாக பலராலும் பேசப்பட்ட நாவலாக அமைந்தது.

முப்பது வருட காலத்திற்கு மேலாக தொடர்ந்த தமிழ் விடுதலைப் போராட்ட காலகட்டத்தில் எழுந்த நாவலாக போராட்ட காலத்தில் ரத்தமும் சதையுமாக வாழ்ந்த மாந்தர்களின் கதையாக இதிகா காணப்பட்டாள்.

தமிழ் சமூகத்தின் வாழ்வியலை பேசிய நாவலாகவும் அதே வேளை சமகால அரசியல் வரலாற்றுடன் தொடர்பு பட்டதான ஒரு வரலாற்று நாவலுக்குரிய பகைப் புலத்தையும் கொண்டதாக காணப்பட்ட இதிகா முதல் பாகம் வெளிவந்த வேளை, அதன் இரண்டாம் பாகத்தின் தேவையும் இதிகாவின் நிலை என்ன என்பதை அறியும் ஆவலும் வாசகர்கள் மத்தியில் எழுந்தது உண்மை.

இன்று அந்த ஆவல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதிகாவின் இரண்டாம் பாகம் மேலும் துல்லியமாக விடுதலை போராட்டத்தின் இன்னுமொரு பக்கத்தினை தரிசிக்க உதவும்.

**- மகுடம் வி.மைக்கல் கொலின்**
(ஆசிரியர் - மகுடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இதிகாவின் இரண்டாம் பாகமிது.

இதன் பாத்திரங்கள் யாராலும் பேசப்படாதவை. இவர்கள் வாழ்ந்தவர்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். தெளிவாகச் சொன்னால் இவர்கள் யாராலும் கவனிக்கப்படாதவர்கள். முப்பது வருடங்களாக நடந்த யுத்தத்தில் நேரடியாகப் பாதிக்கப்படாமல் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டவர்கள். இதிகா, சாந்தா, சிவகுமார், சுவந்திகா, சந்திரன், கனகம், சுந்தரம் வாத்தியார் ஆகியோரில் சிலர் மறைந்தவர்கள் சிலர் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இவர்கள் ஈழ வரலாற்றோடு அசைந்து கொண்டிருப்பவர்கள். போர்க்கால இலக்கியங்கள் இது வரை யாழ் குடா நாட்டுக்குள் நடந்த நிகழ்வுகளின் தொகுப்பாகவே வெளிவந்துள்ளன. யுத்தத்தைச் சாடியவையும் இயக்கங்களை தாம் போன போக்கில் விமர்சித்தவையுமாகவே இருந்ததை அவதானிக்கலாம். வரலாற்றோடு அசையும் பாத்திரங்கள் களத்திற்கு வெளியேதான் இருந்தன. இதிகாவில் கூடுமானவரை பிரச்சினைகளையும் பாத்திரங்களையும் இயங்கவிட்டு வரலாற்றை அசைய வைக்க முயற்சித்திருக்கிறேன். இந்த நாவலில் தனிப்பட்ட மனிதர்கள் மீதோ அல்லது இயக்கங்கள் மீதோ காழ்ப்புணர்ச்சியோடு கருத்துக்கள் வைக்கப்படவில்லை. பல தவறுகள் காரணங்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது எனது எண்ணம் அல்ல. கருத்துக்களையும் எண்ணங்களையும் பதிவது எழுதுபவனின் கடமை என்பதை ஏற்றுக் கொண்டு பதிந்துள்ளேன். உங்களுக்கு ஒவ்வாததாக ஏதும் இருந்தால் எனக்கு தாராளமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்கள் தோழன்

**மு. தயாளன்**

luxmi2128@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்று

இதிகாவின் முடிவினால் சுந்தரம் வாத்தியார் கலங்கிப் போயிருந்தார். அவளைத் திரும்பவும் கொண்டுவர எல்லா இயக்கங்களின் இடங்களையும் அணுகி விசாரித்தார். எங்குமே அவருக்குச் சரியான பதில் கிடைக்கவில்லை. சிவகுமாரும் முயற்சித்துப் பார்த்தான் முடியவில்லை.

இதிகா எந்த இயக்கத்திற்குச் சென்றாள் என்பதும் தெரியவில்லை. சுந்தரம் வாத்தியாரை ஆறுதல்படுத்த சிவகுமாரும் சுவந்திகாவும் தங்களால் ஆனமட்டும் முயற்சித்தார்கள். அவர் எதையோ பறிகொடுத்தவர்போல்தான் நடந்து கொண்டார். மூத்த மகனை கலவரத்தில் பறிகொடுத்த வேதனையோடு இதிகாவின் இந்த முடிவும் சேர்ந்து அவரைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது.

இதிகா போன செய்தி காற்றாகப் பரவிக் கொண்டிருந்தது.

இராணுவத்தினர் நிச்சயமாக அடிக்கடி இங்கு வரலாம் என்று சிவகுமார் நினைத்தான்.

இதுபற்றி அவன் சுவந்திகாவுடன் கதைத்தான். சுவந்திகா இலங்கை அரசைப் பொறுத்தவரை ஒரு கொலையாளி. இராணுவத்தினர் அவளை இங்கு கண்டால் அது மிகப் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையாகிவிடும். சிவகுமாருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தான் ஒரு பத்திரிகையாளன் என்பதால் தன்னையும் அவர்கள் விடப்போவதில்லை.

இந்தப் பிரச்சினைக்கு ஒரே வழி, தானும் சுவந்திகாவும் சிறிது காலத்திற்கு இந்த வீட்டை விட்டுச் செல்லவேண்டும் என்று நினைத்தான். ஆனால் வாத்தியாரை எப்படித் தனித்து விட்டுச் செல்வது என்று குழம்பினான். சிவகுமாரும் சுவந்தி காவும் மாஸ்டரோடு இது பற்றிக் கதைப்பதென்று முடிவு செய்து கொண்டனர்.

அன்று மாலை வாத்தியார் முற்றத்தில் இருந்து எதையோ பற்றி யோசித்துக் கொண்டிருந்தார். அவர் அருகில் சென்ற இருவரும்

“வாத்தியார் உங்களோடை கொஞ்சம் கதைக்கவேணும்” என்றனர்.

“வாருங்கோ நானும் உங்களோடை கதைக்கவேணும் என்டுதான் இருந்தனான்.” என்றார் சுந்தரம் மாஸ்டர்.

இருவரும் ஆளையாள் பார்த்துக் கொண்டனர்.

வாத்தியார்தொடர்ந்தார்.

“நீங்கள் இருவரும் இண்டைக்கே வீட்டைவிட்டுக் கிளம்ப வேணும். இதிகா போன செய்தி கேள்விப்பட்டதும் ஆமிக்காரர் இஞ்சை வருவாங்கள். உங்கள் இருவரையும் சும்மா விடமாட் டாங்கள். என்னைப் பற்றி யோசிக்க வேண்டாம் . நான் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரிச் சமாளிப்பன்."

அவர்கள் மாஸ்டரிடமிருந்து இதை எதிர்பார்க்கவே யில்லை.

எங்கு போவது?

"உங்களைத் தனியவிட்டிட்டு என்னண்டு வாத்தியார் போறது?" எனச் சிவகுமார் கூறத் "தம்பி, எனக்கு வயது வந்திட்டுது, நீங்கள் வாழிற வயது. காலத்தைக் கடத்தாமல் புறப்படுங்கோ" என்றார். தொடர்ந்து " பெற்ற மகளே என்னைப் பற்றிச் சிந்திக்காமல் போயிட்டாள்" என்று சொல்லி விட்டுச் சிரித்தார்.

"தம்பி, இப்ப இருக்கிற நிலைமையிலை கொழும்புக் குத்தான் போங்கோ" என்று போகும் இடத்தையும் கூறி விட் டார்.

அன்று மாலை மெயில் வண்டியிலை போறதெனத் தீர்மானித்து அதற்கான அடுக்குகளைச் செய்யத் தொடங் கினோம்.

கொழும்பிலை போய் எங்கு தங்குவது?

சுவந்திகா தன் நண்பியோடு தொடர்பு கொள்வதாகக் கூறினாள்.

மாலை நான்கு மணிக்கு இருவரும் வெளிக்கிட்டு நெல்லியடிக்குச் சென்று அங்கிருந்து கொடிகாமம் செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருந்தில் ஏறினர்.

அவர்கள் பேருந்தில் ஏறிய அதே நேரம் சுந்தரம் வாத்தியார்வீட்டுக்கு இராணுவம் வந்தது. எவ்வித மதிப்புமில்லாமல் அவரை அடித்து மகள் எந்த இயக்கத்திற்குப் போனவள் என்று திருப்பித் திருப்பிக் கேட்டனர். அவர் தனக்குத் தெரியாதென்று கூறியும் அவர்கள் விடுவதாயில்லை.

பின்பு சுவந்திகாவைப்பற்றியும் விசாரித்து அடித்தார்கள். அவரால் தாங்க முடியவில்லை. பலத்துச் சத்தமிட்டு அழுதார். அவரைத் தூக்கி மூலையில் எறிந்துவிட்டு திரும்பவும் வருவம் என்று கூறிவிட்டுப் போய் விட்டார்கள்.

கவனிப்பதற்கு யாருமின்றி ஒரு மூலையில் சுருண்டு அனுங்கிக் கொண்டிருந்தார் சுந்தரத்தார்.

கொழும்புக்குப் போக கொடிகாம பேருந்தில் சென்று கொண்டிருந்த இருவரும் தங்களைக் காட்டிக் கொள்ளாமல் பேருந்தின் பின் சீற்றில் இருந்தனர்.

பேருந்து கொடிகாமத்தைச் சென்றடைந்ததும் அவசர அவசரமாக புகையிரத நிலையத்துள் புகுந்து ரிக்கெற்றைப் பெற்றுக் கொண்டு புகையிரதத்தின் வரவுக்காக ஒரு மூலையில் ஒதுங்கி நின்றனர்.

பத்து நிமிடத்தில் புகையிரதம் வந்தது.

மெயில் வண்டி என்பது தபால்களை கொழும்புக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திற்கும் எடுத்துச் செல்லும் வண்டி. இந்த வண்டி எப்பொழுதும் சனக்கூட்டம் நிறைந்ததாகவே வரும். ஒரு வகையாக இடிச்சுப் பிடிச்சு உள்ளே ஏறிவிட்டார்கள். இந்த மெயில் வண்டிகள் எப்போதும் இப்படித்தான். கொழும் பிலிருந்து வேலை முடிந்து வருபவர்கள் திரும்பவும் வேலைக் குப் போக இந்த வண்டியைப் பயன்படுத்துவதால் கூட்டம் எப்பொழுதும் அதிகமாகவிருக்கும்.

சிவகுமாருக்கும் சுவந்திகாவுக்கும் இருக்க இடம் இருக்க வில்லை. ஒரு ஓரமாக நின்று கொண்டனர். நீண்ட ஒரு இடைவெளிக்குப் பின் கொழும்பு செல்வதால் மனதளவில் பதட்டமாக இருந்தனர்.

புகையிரதம் ஆடிஆடிச் சென்று காலை ஆறு மணிய ளவில் கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்தைச் சென்றடைந்தது.

வெளியே வந்த இருவருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. இருவருக்கும் கொழும்பு ஏற்கனவே அறிமு கமான பழக்கமான இடம்தான். ஆனால் இப்போ வந்திருக்கும் சூழ்நிலை புதியது. யாழ்ப்பாணத்திற்கு இருவரும் வெவ்வேறு நோக்கங்களோடு போனவர்கள். நோக்கங்கள் எதுவும் பூர்த்தி யாகாமல் திரும்பவும் கொழும்பிற்கு வந்திருக்கிறார்கள்.

சுவந்திகாவிற்கு நண்பி இருக்கிறாள். அவளுக்கு அறிவித்து அவளோடு போய்விடலாம். அதேபோல்தான் சிவகுமாருக்கும் ஒரு நண்பன் இருக்கிறான். இருவரும் தொலைபேசி மையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள் . போகும் போது " சிவகுமார், நீங்கள் வேலை தேடப் போகிறீர்களா?" என்று சுவந்திகா கேட்டாள். " தேடித்தானே ஆக வேண்டும்" என்று சொன்னபோது சுவந்திகாவுக்கு சிவகுமார் ஒரு ஆசிரியன் என்பது நினைவுக்கு வந்தது.

" சிவகுமார் நீங்கள் கல்வி அமைச்சிற்கு நேராகச் சென்று விடயத்தைக் கூறி அங்கு இனிப் போகமுடியாதென்றும் கூறுங்கள். அப்போ அவர்கள் கொழும்பில் ஒரு பாட சாலையைத் தற்காலிகமாகத் தருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நான் என்ரை நண்பியோடை போறன். இதுதான் அவளின்ரை தொலைபேசி இலக்கம். பிறகு என்னோடை தொடர்பு கொள் ளுங்கோ" என்று கூறிவிட்டுத் தொலைபேசி மையத்திற்குச் சென்று சுவந்திகா தன் நண்பியோடு கதைத்தாள். அந்த நண்பியும் "அங்கேயே நில் இன்னும் அரைமணியில் வருகிறேன்" என்று கூறினாள்.

விடயத்தை சிவகுமாரிடம் கூறிவிட்டு யாரின் கண்ணிலும் படாமல் ஒதுங்கி நின்றனர். சுவந்திகாவுக்குத் தன் பழைய வேலைத்தளத்து நண்பர்கள் கண்டு விடுவார்களோ அல்லது தனது உறவினர்கள் யாராவது கண்டு விடுவார்களோ என்ற பயமிருந்தது. சிவகுமாரும் தன் நண்பனோடு கதைத்துவிட்டு அவளோடு வந்து நின்று கொண்டான்.

சுவந்திகா தன் நண்பிக்கு சிவகுமார்பற்றி எதுவும் கூற வில்லை. பதினைந்து நிமிடங்களில் அவள் வந்து விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தபின் சிவகுமாரைக் கேள்விக் குறியோடு பார்த்த நண்பிக்குத் தெளிவாக சிவகுமார் யார் என்பதை விளக்கிக் கூறினாள்.

"கொழும்பிலும் நிலைமை முன்புபோலில்லை" என்று அவள் கூறினாள். சுவந்திகாவை அவள் நண்பியோடு செல்லும் படி அனுப்பி வைத்தான். சுவந்திகாவும் நண்பியும் ஓட்டோ ஒன்றில் புறப்பட்டனர்.

அவன் நண்பன் அரைமணியில் வர இருவருமாக ஓட்டோ ஒன்றில் ஏறிப் புறப்பட்டனர்.

இவர்கள் இப்படியிருக்கக் கரவெட்டியில் சுந்தரம் வாத்தியார் வீட்டில் ஆமி வந்ததை அவதானித்த கனகம் , அவர்கள் போனதும் பாய்ந்து விழுந்து அங்கே போனாள். சுந்தரம் வாத்தியார்ஒரு மூலையில் சுருண்டு படுத்திருந்தார். அவரைத் தூக்கிக் கதிரை ஒன்றில் இருத்திவிட்டு வைத்தியரிடம் ஓடினாள். மூன்று பிள்ளைகளைப் பெற்றும் அநாதையாக அவர் படும்பாட்டைப் பார்க்கக் கனகத்துக்குக் கவலையாக இருந்தது. வைத்தியரோடு வந்த கனகம் வாத்தியாரை நிமிர்த்தி வைத்தியர் பார்ப்பதற்கேற்றவாறு வசதி பண்ணிக் கொடுத்தாள்.

அவரைப் பார்த்த வைத்தியர் "வெளிக்காயம் ஒன்றும் இல்லை. உட்காயம்தான். இந்த எண்ணெயைப் பூசினால் எல்லாம் சரிவரும்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டுவிட்டார். கனகம் அவருக்குத் தேனீர் போட்டுக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு

கொழும்பில் தன் நண்பனோடு தங்கச் சென்ற சிவகுமார் சுந்தரம் மாஸ்டரின் பக்கத்து வீட்டாருக்குத் தொலைபேசி எடுத்து கனகமக்காவுடன் கதைத்தான். கனகமக்காவும் நடந்த விடய்ஙகளைத் தெளிவாகக் கூறினாள். சிவகுமார் பதட்டப்பட்டதோடு தன்னைத் தானே குற்றவாளி யாக்கிக் கவலைப்பட்டான்.

'நான் நின்றிருக்கலாம்' என்று கனகமக்காவுக்குச் சொன் னான்.

"இல்லைத் தம்பி. நீங்கள் நின்றிருந்தால் நிலைமை மோசமாகியிருக்கும். நல்ல வேளை நீங்கள் போனது. ஒண்டுக் கும் கவலைப்படாதையுங்கோ நான் வாத்தியாரைப் பார்த்துக் கொள்ளுவன்" என்று கூறிய பின்பே அவன் அமைதியடைந்தான்.

"சரியக்கா நான் பிறகு எடுக்கிறன்." என்று கூறிவிட்டு இந்த விடயத்தைச் சுவந்திகாவுக்குச் சொல்லவேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டு சுவந்திகாவின் நண்பியைத் தொடர்பு கொண்டு சுவந்திகாவைத் தன்னோடை தொடர்பு கொள்ளும்படி கூறிவிட்டு வெளியில் நீண்ட நேரம் உலாவாமல் அறைக்குப் போய்விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவந்திகாவைத் தொடர்பு கொள்ளும்படி கூறினானே யொழிய எந்த எண்ணுக்குத் தொடர்பு கொள்வதென்று கூறவில்லை. ஏனென்றால் அவனிடம் தற்சமயம் எந்த இலக்கமும் இல்லாததுதான் காரணம்.

அவனுடைய நண்பன் ஒரு அறையிலேயே தங்கி இருந் தான். அதனால் அவன் அறையில் தொலைபேசி இருக்கவில்லை. அந்த வீட்டில் தொலைபேசிஇருந்தது. ஆனால் அதனை இவர்கள் உபயோகிக்க முடியாது. அதுவும் சிவகுமார் இன்று தான் வந்திருந்தான். என்ன செய்வது எனச் சிவகுமாருக்குப் புரியவில்லை. சிறிது நேரம்விட்டு அதே தொலைபேசி மையத்திற்குப் போனான்.

சிவகுமார் தொலைபேசி மூலம் சொன்ன செய்தியை சுவந்திகாவுக்குக் கூறிய அவள் நண்பி எந்த எண்ணுக்குப் போன் பண்ணுவது என்று கேட்காமல் விட்டதற்காக கவலைப் பட்டாள். சுவந்திகாவும் நண்பியும் செய்வறியாது இருந்தனர். ஆனாலும் சிவகுமார் திரும்பவும் எடுப்பான் என்ற நம்பிக் கையில் காத்திருந்தனர்.

சொல்லி வைத்தாற்போல் சிவகுமார் திரும்பவும் தொடர்பு கொண்டான். சுவந்திகாவிடம் சுந்தரம் மாஸ்டருக்கு நடந்த விடயங்களைத் தெளிவாகச் சொன்னான். சுவந்திகாவுக்கும் கவலையாகத்தான் இருந்தது. ஆனால் என்ன செய்வது.? தற்போது இருக்கும் சூழ்நிலையில் இருவராலும் கவலைப்படத் தான் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்ப நாங்கள் ஒன்டும் செய்யேலாது. நீங்கள் கவனமாக இருங்கோ. அடிக்கடி இங்கை தொலைபேசி எடாதையுங்கோ. நீங்கள் இருக்கிற இடத்தின்ரை விலாசத்தைச் சொல்லுங்கோ நான் வருவன்." என்று கூறி அவனின் விலாசத்தை வாங்கிக் கொண்டாள்.

சிவகுமாருக்குத் தமிழ்ப் போராளிகள் மீது கோபம் கோப மாக வந்தது. எவ்வளவு முட்டாள்தனமாகப் பெரியதொரு விடயத்தை விளையாட்டுப் பிள்ளைகள் போல் செய்கிறார்கள் எனத் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். இந்த விட யத்தில்தான் இதிகாவுக்கும் சிவகுமாருக்கும் இடையில் விவாதங்கள் பல நாட்கள் நடந்திருக்கின்றன.

விடுதலைப் போராட்டம் என்றால் இழப்புகள் தவிர்க்க முடியாததுதான் என்று இதிகா கூறும்போது சிவகுமாருக்குக் கோபம் கோபமாக வரும்.

இழப்புகள் என்பது அப்பாவிப் பொதுமக்களை இழப்பது அல்ல. போராட்டத்தில் போராளிகளை இழக்கலாம். பொது மக்களை அல்ல. பொது மக்களைப் போராட்டத்திற்குத் தயார் பண்ணாமல் ஆயுதங்களைத் தூக்கியது தவறு என்பது சிவகுமாரின் வாதம். எதற்காக இந்த யுத்தம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது? இதன் விளைவுகளின் சாதக பாதகங்களை பொது மக்களுக்குத் தெரிவிக்காமல் எழுந்தமானத்திற்கு எதிரியைச் சீண்டும்போது எதிரி, பொதுமக்கள் மீதுதான் தன் வன்மத்தைக் காட்டுவான் என்பது ஏன் இவர்களுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாமல் போனது. பொது மக்களை யுத்தத்திற்குத் தயாரிப்பது என்பது அவர்களையும் ஆயுதம் ஏந்தச் சொல்வதென்பதல்ல. பொதுமக்கள் ஒரு கட்டத்தில் தாமாகவே ஆயுதம் தூக்குவார்கள் என்பதே நியதி. ஆனால் அதற்கு முன் எதிரி தங்களை அழிக்கவரும்போது அவர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள ஏதுவாக முன்பே அது சம்பந்தமாக விளக்கம் கொடுத்திருக்க வேண்டுமல்லவா? அதைவிடுத்து நாங்கள் எதிரியை அழிக்கும்போது நீங்கள் சாகத்தான் வேண்டும் என்று கூறுவதுபோல் நடந்து கொள்வது எவ்வளவு அபத்தம். இப்படித்தான் சிவகுமார் தன் வாதங்களை முன்வைத்தான். அவனுடைய எண்ணங்கள் எப்போதும் இப்படித்தான் இருந்தன.

அறைக்குள் அவன் நுழையும்போது அவன் நண்பன் வேலையால் வந்துவிட்டிருந்தான்.

சிவகுமார் வந்ததும் " மச்சான் புதிசாய் ஆரும் வந்தால் காவல்நிலையத்திலை பதிவு செய்ய வேணுமாம் எண்டு வீட்டுக்கார மனிசி சொல்லுது" என்றான். சிவகுமாருக்குப் பயமாகவிருந்தது.

" பயப்பிடாதை மச்சான் வெளிக்கிடு இப்பவே போய்ச் செய்வம். பிறகு திடீரென்று சோதினை எண்டு வந்தானென்றால் என்னையும் உன்னையும் வீட்டுக்காற மனிசியையும் உள்ளுக்குப் போட்டுவிடுவான்."

சிவகுமார் எதுவும் சொல்லவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருமாக வெள்ளவத்தைக் காவல்நிலையத்துக்குச் சென்றார்கள். அங்கு சிவகுமாரைப் பல கேள்விகள் கேட்டார்கள். அவனுடைய பழைய வேலை பற்றியும் திரும்பவும் இங்கு வந்தது பற்றியும் நுணுகி நுணுகிக் கேட்டார்கள். சிவகுமார் எல்லாவற்றுக்கும் சரியான பதிலைக் கூறவே அவர்கள் அவனைப் பதிந்து பற்றுச் சீட்டொன்றையும் கொடுத்தார்கள். வெளியில் வந்தபின்புதான், இருவருக்கும் நிம்மதியாக இருந்தது. அப்படியே அறைக்கு வந்து வீட்டுக்கார அம்மாவிடம் அதைக் காட்டினார்கள். வீட்டுக்காரியும் ஒரு பெரிய குண்டைப் போட்டாள். இரண்டு பேர் தங்குவதாக இருந்தால் கூடுதலாக 100 ரூபா மாதம் தரவேண்டும் என்று கூறினாள். தருவதாகத் தலையாட்டிவிட்டு அறைக்குள் வந்தார்கள்.

எப்படி இதனைச் சமாளிப்பது எனச் சிவகுமார் குழப்பமாக இருந்தான். ஆசிரிய வேலை கிடைத்துவிட்டால் பரவாயில்லை. நண்பனுக்குத்தான் கரவெட்டியில் ஆசிரிய வேலை பார்த்ததையும் இப்போ அங்கே போக முடியாத சூழ்நிலை இருப்பதால் தனக்குத் தற்காலிகமாக வேலை தரவேண்டும் என்று கல்வி அமைச்சில் கேட்கவுள்ளதாகக் கூறினான். அடுத்த நாள் இருவருமாகப் கல்வி அமைச்சிற்குப் போவதென்றும் தீர்மானித்தார்கள்.

தற்செயலாகக் கல்வி அமைச்சு அவனுக்கு இங்கு ஆசிரிய வேலை கொடுக்கத் தயங்கினால் சிவகுமாரின் நண்பன் தான் வேலை செய்யும் ஸ்தாபனத்தில் கேட்டுப் பார்ப்பதாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினான். பிரச்சினை என்னவென்றால் சிவகுமாருக்குத் தெரிந்த ஒரே தொழில் பத்திரிகைத் தொழிலும் ஆசிரியத் தொழிலும் தான். பார்ப்போம் என்று தம்மை ஆறுதல் படுத்திக் கொண்டு தூங்கச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று

சிவகுமாரும் அவனது நண்பனும் கல்வி அமைச்சுக்குச் செல்கிற பேருந்தில் ஏறிச் சென்றனர். அமைச்சிற்குச் சென்று முன்னே இருந்த வரவேற்புப் பெண்ணிடம் தன் நிலையைக் கூறி இதற்குப் பொறுப்பான அதிகாரியோடை கதைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அவளும் அவர்களை அங்கு இருக்கச் சொல்லிவிட்டு, உள்ளே சென்றாள். மூன்றாவது அறையிலிருந்த அதிகாரி 'எல்லாவெல'விடம் இவர்கள் விடயத்தைக் கூறினாள். அவரும் அவர்களை அனுப்பி வைக்கும்படி சொல்ல அவள் வந்து இவர்கள் இருவரையும் அங்கு அனுப்பி வைத்தாள்.

அங்கு சென்றதும் அவர் இவர்களை அமரச் சொல்லிவிட்டு " நீங்கள் இரண்டுபேரும் யாழ்ப்பாணத்திலையிருந்து வாறியளோ?" என்று எல்லாவெல கேட்டார். 'எல்லாவெல' சிங்களவராக இருந்தாலும் நன்றாகத் தமிழ் பேசுவார்.

"இல்லை, நான் இஞ்சை பத்து வருசமாய் றப்பர் கூட்டுத்தாபனத்திலை வேலை செய்யிறன்... இவர்தான் நேற்று வந்தவர்" என்று சிவகுமாரைச் சுட்டிக்காட்டிக் கூறினான் அவனின் நண்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமார் தன்னுடைய நிலைமையை விளக்கினான்.

"இப்ப அங்கை கட்டாயமாக இயக்கத்திலை சேர்க்கினம். எனக்கு விருப்பமில்லை . அதுதான் வெளிக்கிட்டு வந்திட்டன். எனக்குத் தற்காலிகமாகவேனும் இங்கை இருக்கிற பள்ளிக் கூடத்திலை ஒரு வேலை போட்டுத் தாங்கோ" என்று கூறினான்.

" அங்கை நீர் எங்கை படிப்பிச்சனீர்?" என்று எல்லாவெல கேட்டார்.

" நான் கன்பொல்லை என்ற சிறு கிராமத்திலை உள்ள வித்தியாலயத்திலைதான் படிப்பிச்சனான்." என்று சிவகுமார் கூறினான். அவன் கூறியதும் ஏதோ ஒரு கோப்பினை எடுத்து, அவதானமாகப் பார்த்தார். அதன்பின் தனக்குள் சில முடிவுகளைச் செய்துவிட்டு

" நான் மந்திரியோடை கதைச்சுப்போட்டு அறிவிக்கிறன். உங்களுக்குச் சாதகமாகவோ அல்லாமலோ, இந்தக் கிழமை கடிதம் வரும்"

அவருடைய பதில் இருவருக்கும் நிம்மதியைத் தந்தது.

" மச்சான் நீ அறைக்குப் போ, நான் வேலைக்குப் போயிட்டு வாறன்" என்று கூறிவிட்டு அவன் நண்பன் தன் வழியில் புறப்பட சிவகுமாரும் பேருந்துநிலையத்தை நோக்கி நடந்தான்.

அறைக்குச் சென்று சிறிது நேரம் ஓய்வெடுத்துவிட்டு மாலையானதும் வெளியே வந்து சுவந்திகாவின் நண்பிக்குத் தொலைபேசி எடுத்துக் கதைத்தான். சுவந்திகாஅறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாகக் கூறிய அவள் சுவந்திகாவைக் கூப்பிட்டு சிவ குமாருடன் கதைக்கச் சொன்னாள். இந்தத் தொடர்புகளுக்கு சுவந்திகாவின் நண்பி வீட்டில் சிறிது எதிர்ப்பு கிளம்பத்தான் செய்தது. இதனால் மிகமிக அவசரமாக இருந்தால் ஒழிய, தனக்கு இங்கே தொலைபேசி எடுக்க வேண்டாமென்று சொன்னாள். சிவகுமாரும் உடனே தொலைபேசியை வைத்துவிட்டான்.

அதன்பின் தன்பாட்டில் நடக்கத் தொடங்கினான்.

சுந்தரம் வாத்தியார் பற்றிய சிந்தனை வர அவரைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டு நடந்து கொண்டிருந்தபோது அவன் முன்பு வேலை செய்த பத்திரிகைக் காரியாலயத்தின் பக்கமாகவே நடந்து கொண்டிருந்தான். “உள்ளே சென்று பார்ப்போமா” என்று மனம் உந்தியது. நுழைந்துவிட்டான். வாசலில் நின்ற காவல்கார மனிதன் அவனை அடையாளம் கண்டு கொண்டு விட்டான். அவனோடு சில நிமிடங்கள் நின்று குசலம் விசாரித்து விட்டு உள்ளே சென்றான்.

அங்கு வேலை செய்பவர்கள் அவனை மறக்காமல் வந்து விசாரித்தார்கள். இதனைப் பார்க்கும்போது சிவகுமாருக்குப் பெருமையாக இருந்தது.

“என்ன சிவா திரும்பவும் வேலைக்கு வாறியளோ?” என்று ஒருதர் கேட்டார்.

“இல்லையில்லை. சும்மா இந்தப் பக்கம் வந்தபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களையும் பார்த்துச் செல்லலாமென்று வந்தன்" என்று சிவகுமார் கூறினான்.

"சரி நான் ஒருக்கா ஆசிரியரைப் பார்த்திட்டு வாறன்" என்று கூறிவிட்டு ஆசிரியர் அறையை நோக்கிப் போனான்.

அதே அறை. அதே பெயர்ப்பலகை. மாற்றமேதுமின்றி அத்தனையும் அப்படியே இருந்தன.

அறைக் கதவைத் தட்டினான்.

"உள்ளே வாரும்" என்ற குரல் உள்ளிருந்து வந்தது. அதே குரல்.

சிவகுமார் உள்ளே போனான்.

"அடடே சிவகுமாரா, எப்படி இருக்கிறீர்.? கனகாலம் பார்த்து"

அவருடைய அந்த அன்பான வரவேற்பு சிவகுமாரை மகிழ்வித்தது. அவருக்கு முன்னே உள்ள கதிரையில் அமர்ந்து யாழ்ப்பாணத்து நிலைமைகளை விளக்கிவிட்டு ஆசிரியர் வேலையையும் விட்டுவிட்டு வந்துவிட்டதாகக் கூறினான். இப்போ கல்வி அமைச்சிற்குச் சென்று இங்கு படிப்பிப்பது சம்பந்தமாகக் கதைத்துவிட்டு வந்ததையும் கூறினான். அவர் அவனைத் "திரும்பவும் வேலைக்குச் சேர விருப்பமோ?" என்று கேட்டார்.

அவன் அவர்கேட்டதற்காக நன்றி கூறிவிட்டுத் தன்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை அவருக்கு விளக்கினான். பத்திரிகைத் தொழிலை நிரம்ப மதிப்பதாகவும் நிலைமை தான் விட்டுவிட்டுப் போன போது எப்படி இருந்ததோ இப்பவும் அப்படித்தானே இருக்கிறது என்றும் ஆதலால் மீண்டும் இந்தத் தொழிலுக்குள் வர விரும்ப வில்லை என்றும் தெளிவாக விளக்கிக் கூறினான்.

"நீர் இன்னும் மாறவேயில்லை" என்று அந்த ஆசிரியர் கூற ஒரு புன்முறுவலை அவரை நோக்கி வீசிவிட்டு அவரிட மிருந்து விடைபெற்றுப் புறப்பட்டான்.

வெளியில் வந்த அவனுக்குச் சோர்வாக இருந்தது. நேரே அறைக்குப் போய்விட்டான்.

அவனுடைய சிந்தனை முழுவதும் கரவெட்டியிலேயே இருந்தது. கரவெட்டியில் அவன் பத்திரிகை நடத்திய காலத்தையும் தமிழ்ப் பூங்கா அச்சகத்தில் அச்சுச் செய்தமையும் இதிகாவோடு மணிக்கணக்காகக் கதைத்த காட்சிகளும் சாந்தாவோடு உயர் அறிவு நிலையில் உரையாடியதும் அவன் நினைவுகளில் வந்து கவலை கொள்ள வைத்தது. பாவம் வாத்தியார் என்று மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

காலத்தோடு மனிதன் நகர்வதும் காலத்தை நிறுத்து வதற்காக மனிதன் முயன்று ஒவ்வொரு தடவையும் தோற்றுப் போவதும் அதை ஏற்றுக் கொள்ளாமல், தவறான முடிவுகள் எடுப்பதும் மனிதனின் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. சிவகுமார் ஓரளவுக்கு எதையும் நுண்ணறிவைக் கொண்டு சிந்திப்பவனாக இருந்தும் பல தடவைகளில் பல விடயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தோல்வியையே தழுவிக் கொண்டான். எந்தக் கொழும்பு நகருக்கு இனி வரக் கூடாது என நினைத்துப் போனானோ மீண்டும் அதே கொழும்பு நகருக்குக் காலம் கொண்டு வந்துவிட்டது.

ஒவ்வொரு நாளும் கடிதத்திற்காகக் காத்திருந்து களைத்துப் போனான் என்றே சொல்லவேண்டும். இன்றோடு நான்கு நாட்களாகிவிட்டன. இன்று வெள்ளிக்கிழமை, வாரத்தின் கடைசி நாள். காலை பதினொரு மணியளவில் தபால்காரன் பக்கத்து வீட்டுக்குக் கடிதம் கொடுக்கும்போது எட்டிப் பார்த்துத் தனக்கு வருகிறதா என்று நோட்டம் விட்டான். தபால்காரன் இவனை நோக்கி வந்தபோது இவனது இதயம் திக் திக் என்று அடித்துக் கொண்டது. கடிதத்தை வாங்கிக் கொண்டு அறைக்குள் ஓடினான். மெதுவாகவும் அவதானமாகவும் கடிதத்தை உடைத்த போது, அதில் கல்விக் கந்தோருக்கு வரும்படி எழுதியிருந்தார்கள்.

அடுத்தநாள் காலை விடிந்ததும் முதல் வேலையாகப் பேருந்து எடுத்து அங்கு சென்றான். நல்ல செய்திதான் கிடைத்தது. தற்காலிகமாக ஒரு வருசத்திற்குப் பம்பலப்பிட்டியிலுள்ள ஒரு பாடசாலையில் வேலை கொடுக்கப்பட்டிருந்தது. சிவகுமாருக்கு நல்ல சந்தோசம்.

அங்கிருந்து நடந்து சென்று நண்பனின் காரியாலயத்திற்குச் சென்றான். அங்கு அவனிடம் விடயத்தைச் சொல்லிவிட்டு அவனையும் அழைத்துக் கொண்டு அவனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியாலயத்திற்கு முன்னாலிருந்த தேனீர்க் கடையில் தேனீர் அருந்திவிட்டு நண்பனிடம் விடைபெற்றுக் கொண்டு அப்ப டியே கோல்பேர்ஸ் கடற்கரைக்குச் சென்று சிறிது நேரம் நிழல் உள்ள இடத்தில் அமர்ந்தான்.

அவனுடைய மனம் முழுவதும் இதிகா பற்றியதாகவே இருந்தது. இயக்கங்கள் பற்றிப் பத்திரிகைகளில் வரும் செய் திகள் நல்லதாகவே இருக்கவில்லை. இதிகா இருக்கிறாளா? இல்லையா? என்று எதுவும் தெரியாமல் குழப்பநிலையி லிருந்தான்.

மனதிற்குள் அவன் இதிகாவை விரும்பியிருந்தது என்னவோ உண்மைதான். அவளும் விரும்பித்தான் இருந்தாள். அவளின் அவசரப் புத்தியும் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத இயல் பும் தவறான ஒரு முடிவை எடுக்க வைத்துவிட்டது என்றே சிவகுமார் நினைத்தான்.

பிரச்சினைகள் இல்லை என்று அவன் நினைத்தது இல்லை. சிங்கள பௌத்தவாதிகளின் இனரீதியான சிந்தனைகள்தான் இன்றைய பிரச்சினைகளுக்குக் காரணம் என்பதை சிவகுமார் என்றைக்கும் மறுத்தவனில்லை. ஆனால் அவற்றுக்கெதிராகத் தோற்றிய போராட்டம் சரியான முறையில் நெறிப்படுத்தப் படாமல் வெறுமனே ஆயுதத்தை நம்பிய ஒரு போராட்டமாக மாறிவிட்டது என்பதே அவனது வாதமாக இருந்தது.

கடற்கரையிலிருந்து எழும்பி அறைக்குச் செல்வதற்காக பேருந்துத் தரிப்பிடத்தை நோக்கிச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் தனக்குக் கொடுக்கப்பட்ட பாடசாலைக்குச் சென்று வேலையைப் பொறுப்பேற்றுக் கொண்டான். அவனுக்குப் பிடித்தமான தொழில் ஆதலால் சந்தோசமாக தனக்குத் தரப்பட்ட நேரசூசியின்படி வகுப்பறைக்குச் சென்றான். அவனுக்கு கூடுதலான பாடங்கள் உயர்தர வகுப்பிற்கே கொடுக்கப்பட்டிருந்தது.

அவன் வேலையை ஆரம்பித்ததுபோல், சுவந்திகாவும் தனது நண்பியின் உதவியோடு வேலையொன்றைத் தேடிக் கொண்டாள். சுவந்திகா தன் தாயோடும் தொடர்பு கொண்டிருந்தாள்.

இவர்கள் இருவரும் கொழும்பில் தங்களை நிலைப்படுத்திக் கொண்டனர். காலம் என்றைக்கும் யாரோடும் தங்கிவிடுவதில்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து வருடங்களின் பின்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்கு

காலத்தின் நகர்வை யாராலும் நிறுத்த முடியாது. அது தன்பாட்டுக்கு நகர்ந்து கொண்டேயிருக்கும்.

தமிழ்ப் பகுதிகளில் விடுதலை இயக்கங்கள் பல தொடங்கி ஐந்து வருடங்களாகிவிட்டன. பத்திரிகைச் செய்திகளின்படி ஒவ்வொரு நாளும் இயக்கங்கள் பலமடைந்து வருகின்றன என்றே அறியக் கூடியதாகவிருந்தது.

அவற்றின் வளர்ச்சி வேறு பிரச்சினைகளையும் தோற்ற ஆரம்பித்துவிட்டது. பொது எதிரிக்கான போராட்டம் நாளடைவில் சகோதரர்களுக்கிடையிலான போராட்டமாக மாற ஆரம்பித்தது.இதற்குப் பல காரணங்கள் பொது வெளியில் வைக்கப்பட்டாலும் இந்தச் செயற்பாடுகள் எதிரிக்குச் சாதகமாகவும் சர்வதேச அளவில் அவர்களுக்கு ஆதரவுபெருகவும் காரணமாகிவிட்டது.

போராட்டத்தில் இறப்பவர்களின் பெயர்களை மாவீரர் எனக் குறிப்பிட்டு வெளிப்படுத்துவார்கள். இதுவரை இதிகாவின் பெயர் அந்தப்பட்டியலில் வராததால் அவள் உயிருடன் இருக்கிறாள் என்ற செய்தியை சிவகுமாருக்குத் தெரியப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமாரும் பம்பலப்பிட்டியில் உள்ள பாடசாலைக்கு வேலைக்குப் போய் ஐந்து வருடங்களாகின்றன. ஒரு வருடத்திற்கு எனக் கொடுக்கப்பட்ட வேலை நாட்டு நிலைமையின் காரணமாக காலவரையின்றி அவனுக்கு நீடிக்கப்பட்டுவிட்டது.

விடுதலை யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அண்ணளவாக பத்துக்கு மேற்பட்ட இயக்கங்கள் வெவ்வேறு தலைமைகளின் கீழ் தோன்றியிருந்தன. பின்பு பத்து ஐந்தாகியது. கடைசியில் ஐந்து ஒன்றாகிவிட்டது. எல்லோரும் ஒன்றாவது சந்தோசமான ஒன்றாக இருந்தபோதும் ,அந்தப் பத்தில் ஒன்பதும் அழிக்கப்பட்டு ஒன்று ஆக மாறியமைதான் கவலைக்குரியதாக இருந்தது. தமிழரின் விடுதலைப் போராட்டத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லப்போவதும் இதுதான்.

இவ்வாறான சகோதரக் கொலைகள் நடைபெறுவதனைப் பத்திரிகைகள் பெரிதுபடுத்திப் போடத் தொடங்கிவிட்டன.

இதனால் விடுதலைப் போராட்டம் எதிரிகளால் பயங்க ரவாதப் போராக மாற்றப்பட்டுவிட்டது. இதனால் அரசிற்குப் பல நாடுகள் மறைமுகமாக உதவி செய்ய ஆரம்பித்துவிட்டன.

கொழும்பிலும் கெடுபிடிகள் கூடிவிட்டன. சிவகுமாரும் பாடசாலையும் தன் வாழ்க்கையும் என்றளவில் முடங்கிக் கொண்டான். சுவந்திகாவோடு அப்பப்போ தொடர்பு கொள்வான்.

அன்று சுவந்திகாவுக்குப் போன் எடுத்தபோதுதான் அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் செய்தியைச் சொன்னாள். சுவந்திகா பற்றிய செய்தியை யாரோ பொலிசாருக்குத் தெரியப்படுத்திவிட்டார்கள் என்றும் தகப்பனைக் கொலை செய்தமைக்காகத் தன்னைக் கைது செய்து விடுவார்களோ என்று பயப்பிடுவதாகவும் கூறினாள். இதனால் தான் இருப்பிடம் மாறப் போவதாகவும் இப் போதைக்கு தொடர்பு கொள்ள வேண்டாமென்றும் கூறிவைத் தாள்.

சிவகுமாருக்கு அதிர்ச்சியாக இருந்தது. இனிமேல் தானும் கவனமாக இருக்கவேண்டுமென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

யாழ்ப்பாணத்தில் இயக்க அரசியலின் வளர்ச்சி வேகத் தினால் அரசாங்கம் திணறிக் கொண்டிருந்தது. மக்கள் வீட்டை விட்டு வெளியேறுவதில்லை. வெளியேறிச் சென்றால் திரும்ப வீட்டுக்கு வருவதற்கான சாத்தியம் மிகமிகக் குறைவு.

கரவெட்டியில் கடந்த தடவை நடந்த களேபரத்தில் பட்ட காயங்கள் எல்லாம் மாறி ஓரளவு நடமாடத் தொடங்கியி ருந்தார் சுந்தரத்தார். வீட்டைப் பார்க்க அவருக்கு வேதனையாக இருந்தது. எவ்வளவு கலகலப்பாக இருந்த வீடு. இனி எப்பதான் பழைய நிலைக்கு வீடு வரப்போகுதோ என்று பெருமூச்சு விட்டார்.

அன்று, திடீரென்று கதவையும் தள்ளிக்கொண்டு யாரோ வருவது போல் இருக்க எட்டிப் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலு தமிழ்ப் பொடியன்கள் வந்திருந்தனர். அவர்களிலை ஒரு பொடியன் அவருடைய மாணவன். மற்றவர்களைத் தெரிய வில்லை. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பது புரிந்தது.

அவரிடம் படித்த அந்தப் பொடியன் அவரை நோக்கிவர ஒருவன் வாசலடியில் காவல் நிற்க மற்ற இருவரும் வீட்டிற்குள் போய் யாரையோ தேடினார்கள்.

மாஸ்டருக்கு அருகில் வந்தவன் "நாங்கள் வாத்தியார் இதிகாவைத் தேடி வந்தனாங்கள். இதிகாவைக் கைது செய்து கூட்டி வரும்படி எங்களுக்கு உத்தரவு." என்றான்.

சுந்தரத்தாருக்கு வியப்பாக இருந்தது. அதே நேரம் இதிகா இவங்களைவிட்டு ஓடியிட்டாள் என்ற சந்தோசமும் இருந்தது.

"அவளையேன் இஞ்சை தேடிறியள். அவள்தான் என்னைத் தூக்கி எறிஞ்சுபோட்டு உங்களிட்டை வந்திட்டாளே. அது சரி தம்பி, நீங்கள் எந்த இயக்கம் ?"

"அதெல்லாம் நாங்கள் சொல்லேலாது மாஸ்டர். அப்ப இதிகா இஞ்சை வரேல்லை."

"ஓம் தம்பி.. போனவள் போனவள்தான். அதுக்குப்பிறகு நான் காணவேயில்லை."

"சரி மாஸ்டர். நாங்கள் இப்ப போறம். மறுபடியும் வருவம்" என்று சொல்லிவிட்டு அவர்கள் புறப்பட்டுவிட்டார்கள்.

"சரி..தம்பி" என்று சொல்லி ஒருவாறு அவர்களை அனுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிவிட்டு பெருமூச்சொன்றைவிட்டுத் தன்னை ஆசுவாசப்ப டுத்திக் கொண்டார். அவர்கள் போனபின் சுந்தரத்தாரின்ரை மனதில் பல கேள்விகள் எழுந்தன. இதிகா வேறு இயக்கத்திற்குப் போய்விட்டாளா? அல்லது இயக்க அரசியலையே விட்டு விலகிவிட்டாளா? என்று பலவிதமாகச் சிந்தித்தார்.

அவள் இயக்க அரசியலைவிட்டு விலகியிருந்தால் நிச்சய மாக யாழ்ப்பாணத்தில் இருக்க மாட்டாள். அது அவளின் உயிருக்கே ஆபத்து என அவளுக்கே தெரியும். ஆகவே நிச்சயமாக கொழும்புக்கு ஏதோ ஒரு வழியில் சென்றிருப்பாள் என்று ஒரு அனுமானத்திற்கு வந்திருந்தார்.

ஆனால் கொழும்பில் எங்கே தங்க முடியும்? அங்குதான் யாரும் இல்லையே!. சிவகுமார் தம்பி அங்கே தானே இருக்கிறார். ஆனால் சிவகுமார் இருக்கிற இடம் அவளுக்குத் தெரியாதே! ஆக எப்பிடியாவது சிவகுமாருக்கு இதிகாவைப்பற்றிய விடயத்தைத் தெரியப்படுத்தவேண்டும்.

அப்போது அங்கே வந்த கனகம் 'வாத்தியார் பொடியன்கள் ஏன் வந்திட்டுப் போறாங்கள்' என்று கேட்டாள்.

"கனகம் எங்கடை இதிகா இயக்கத்தைவிட்டு ஓடியிட் டாளாம். அவளைத் தேடித்தான் வந்தவை. இயக்கத்தைவிட்டு வந்திருந்தால் நிச்சயம் கொழும்புக்குத்தான் போயிருப்பாள். எப்பிடியாவது சிவகுமார் தம்பிக்குச் சொல்ல வேணும். எப்பிடி எண்டுதான் புரியேல்லை." என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் கவலைப்படாதையுங்கோ நான் எப்படியும் அந்தத் தம்பிக்குச் சொல்லிவிடிறன். கவனமாய் இருங்கோ. சிவகுமார்த் தம்பி அநேகமாக நாளைக்கு உங்களைப்பற்றி விசாரிக்க எடுப்பார்." என்று சொல்லிவிட்டு கனகம்மா தன் வீட்டுக்குப் போய்விட்டாள்.

கனகம் போனதும் சுந்தரம் வாத்தியார் ஜெர்மனிக்குப் போன மகன் சந்திரனுக்குக் கடிதம் எழுத உட்கார்ந்தார்.

**அன்புள்ள மகன் சந்திரனுக்கு,**

**இப்போ நாட்டின் நிலைமை மோசமாக உள்ளது. அக்கா வெளியே வந்திட்டா. எங்கை போனாவெண்டு தெரியேல்லை. வீட்டையும் வரவில்லை. சிவகுமாரோடை கதைக்கிறனியே? கதைத்தால் அக்காவைப்பற்றிச் சொல்லு. நிரம்ப எழுத முடியாது. உன்னுடைய உடல் நலத்தைக் கவனித்துக் கொள்.**

**இப்படிக்கு**

**அப்பா**

என்று எழுதிவிட்டு உறையில்போட்டு மூடிவிட்டு கனகம் நாளைக்கு வரேக்கை குடுக்கலாம் என நினைத்துக் கொண்டு சாய்மனைக் கதிரையில் போயிருந்தவர் சிறிது நேரத்தில் தூங்கிவிட்டார்.

கொழும்பில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் சிவகுமார் ஒரு தொலைபேசிநிலையத்திற்குச் சென்று கனகமக்காவிற்கு தொலைபேசி எடுத்தான்.

அவ சொன்ன செய்தி அவனைத் திடுக்கிட வைத்துவிட்டது.

இயக்கங்களிலிருந்து வெளியே வருவதென்பது தற்கொலை செய்வதற்குச் சமமென்பது அவனுக்குத் தெரியும். இதிகா வெளியே வந்துவிட்டாள் என்பதை அவனால் நம்ப முடிய வில்லை. சிலவேளை அவளைக் கொலை செய்துவிட்டு இப்படி ஒரு கதையைக் கட்டி விட்டார்களோ என்னவோ என்று குழம்பினான்.

எதற்கும் கொழும்பில் தேடிப் பார்க்கவேணும். சுவந்திகா விற்கு அறிவிக்கவேணும் என்றெல்லாம் நினைத்துக்கொண்டு அறைக்குப் போய்விட்டான்.

இயக்கத்தைவிட்டு வெளியே வருவதென்பது அவ்வளவு எளிதல்ல. உள்ளே போவதும் கடினம், வெளியே வருவதும் கடினம். வெளியே வந்த எவரும் உயிரோடிருந்ததுமில்லை. எப்படியாவது கண்டுபிடித்துப் போட்டுத் தள்ளிவிடுவார்கள்.

இதிகா எப்படி வெளியே வந்தாள்? ஏன் வந்தாள்? வெளியில் வந்து, எங்கே போய்விட்டாள்? வீட்டிற்குப் போயிருக்க முடி யாது. வீட்டிற்குப்போனால் அவளைப் பிடித்து முடித்து விடுவார்கள். ஆகவே நிச்சயமாகப் போயிருக்க மாட்டாள். கொழும்பு ஒன்றுதான் ஓரளவுக்குத் தப்பும் வழி. ஆனால் எப்படி கொழும்பிற்கு வருவாள்?. கொழும்பிற்கு வந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் தானறிந்த வரையில் ஒருவரும் இல்லையே ! அப்படியானால்....

அவனால் எதையும் ஊகிக்க முடியவில்லை.

அப்படியே அவளைப்பற்றி நினைத்தபடியே உறங்கி விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து

இதிகா தப்பிவிட்டாள் என்ற செய்தி கிடைத்த நாட் தொடக்கம் அவளைத் தேடித் திரியத் தொடங்கினான் சிவகுமார். ஒரு பக்கம் சுவந்திகாவின் பிரச்சினை. இப்போ இதிகாவின் பிரச்சினை.

இதிகாவுக்கு இப்போ இரண்டு பக்கத்தாலும் பிரச்சினை. யாரிடம் பிடிபட்டாலும் முடித்துவிடுவார்கள்.

இதிகா நிச்சயமாக கொழும்புக்குத்தான் வந்திருப்பாள். ஆனால் கொழும்பில் அவளுக்குத் தெரிந்த யாருமே இல்லை.

அதே நேரம் இதிகாவைக் கொலை செய்துவிட்டு இப்படி ஒரு கதையைக் கட்டிவிட்டார்களோ என்ற ஐயமும் அவனுக்கு எழுந்தது. இவை எல்லாவற்றிற்கும் விடை வேண்டுமென்றால் இதிகா அவன் கண்ணில்பட வேண்டும்.

காலை பாடசாலைக்குப் போன சிவகுமாருக்கு மனம் பாடங்களில் செல்ல மறுத்தது. படிப்பிக்க முடியாமல் தடுமாறினான். தலையிடித்தது. ஏதோவிதமாகப் பாடசாலை நேரத்தை சமாளித்துப் பாடசாலை முடிந்ததும் பேருந்து எடுத்துப் 'பெற்றா'வுக்குப் போனான். 'பெற்றா' வின் வீதிகளில் நடந்து கொண்டிருந்த அவன் கண்களில் தற்செயலாக அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்திசையிலுள்ள வீதியில் போன பெண் சாந்தா போல் இருக்கவே சிவகுமார் உசாரானான்.

வீதியின் மறுகரையில் சிவகுமார்.அந்தப் பெண் எதிர் வீதியில் சென்று கொண்டிருந்தாள். வீதி நிரம்பின வாகனங்கள். உடனே சிவகுமாரால் வீதிக்குக் குறுக்கே ஓடி வரமுடியவில்லை.

அவன் வந்தபோது, அவளைக் காணவில்லை. சுற்றும் முற்றும் தேடினான். தூரத்தில் அவள் போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. ஓடி ஓடிப் போனான். இறுதியில் அவளுக்கு அருகே போவதற்குமுன் சாந்தா என்று கூப்பிட்டான். சாந்தாதானா என்ற சந்தேகம். அவன் கூப்பிட்டதும் அவள் சடுதியாகத் திரும்பினாள். சாந்தாவேதான். அவளைக் கண்டது சிவ குமாருக்கும் சிவகுமாரைக் கண்டது அவளுக்கும் நிரம்பின சந்தோசம்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி சில நிமிடங்கள் மௌனமாக நின்றிருந்தனர்.

" இஞ்சை நீங்கள் ....." என்று இழுத்தான்.

சாந்தா சிரித்தபடி " ஏன் நாங்கள் கொழும்புக்கு வரப்ப டாதோ?" என்றாள். அதே சாந்தா! அதே குறும்பு! அதே குரல்!

" அப்பிடியென்றில்லை. சும்மா கேட்டன்.." என்று சிவ குமார் சொல்ல, இருவரும் தம் சுகங்களை விசாரித்துக் கொண்டனர். வீதியால் போகும் வாகனங்களின் இரைச்சலும் 'கோர்ண்' சத்தங்களும் இவர்களின் உரையாடலையும் தடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தன.

சாந்தா தனது தாத்தா இறந்து போனதும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் நடந்த விடயங்களையும் விபரமாகக் கூறினாள்.

" நீங்கள் நல்ல முடிவு எடுத்திருக்கிறியள்." என்று சிவகுமார் கூறினான்.

" இன்னுமொரு நல்ல விடயம் இருக்குது" என்றாள் அவள்.

" என்ன அது?" என்று அவசரப்பட்டான் சிவகுமார்.

" உங்கடை நண்பி, இதிகாவும் இயக்கத்தைவிட்டு வெளியிலை வந்திட்டா" என்றாள்.

" அது எனக்குத் தெரியும். அவள் எப்படியும் கொழும்புக்குத்தான் வந்திருப்பாள். அதுதான் றோட்டு றோட்டாய் தேடித் திரியிறன்" என்றான் சிவகுமார்.

இதற்குப் பதில் ஏதும் கூறாது சிரித்தாள் சாந்தா.

" இதிகா எப்படி வெளியே வந்தாள் என்ற விபரம் ஏதும் உங்களுக்குத் தெரியுமே.." என்று சிவகுமார் கேட்டான்.

" இன்னும் எனக்கு ஒண்டும் சொல்லேல்லை. முறுகண்டியிலை திடீரெண்டு வந்து பேருந்துசிலை ஏறேக்கை நான் பயந்து போயிட்டன். எல்லா விபரமும் சொல்லிறன் எண்டு சொல்லியிருக்கா." என்றாள் சாந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு சிவகுமாரை நோக்கி " கவலைப்படாதையும். நான் அவவைக் கவனமாகப் பார்ப்பன்." என்று கூறிவிட்டுத் தொடர்ந்து

" அவவை இப்போதைக்கு நீங்கள் பார்க்க முடியாது. கொழும்பு நிலைமை சரியாயில்லை. கொஞ்சம் சரியாய் வர ஒரு நாளைக்குத் தொலைபேசியிலை கதையுங்கோ" என்றும் கூறிவைத்தாள்.

சிவகுமாருக்கு உலகத்திலே கிடைக்கமுடியாத ஒன்று கிடைத்தது போன்ற உணர்வு. அவன் சந்தோசத்தில் மிதந்தான்.

" உங்களோடை அவள் இருக்கிறாள் என்டதே பெரிய விடயம்.உங்களை எப்பிடி நான் தொடர்பு கொள்ளுறது."

என்று கேட்டான் சிவகுமார்.

" உங்கடை தொடர்பு இலக்கம் ஏதாவது தாங்கோ. நான் தொடர்பு கொள்ளிறன்." என்றாள் சாந்தா.

சிவகுமார் தன்னுடைய பாடசாலை தொடர்பு இலக்கத்தைக் கொடுத்தான்.

" நீங்கள் இப்ப என்ன செய்யிறியள்?" சாந்தா கேட்டாள்.

" இதிகா போனபிறகு நாங்கள் அங்கை இருந்தால் பிரச்சினைவரும் எண்டு இதிகாவின்ரை அப்பா எங்களை கொழும்புக்கு அனுப்பியிட்டார். கொழும்புக்கு வந்த பிறகு கல்விக் கந்தோருக்குச் சென்று ஒரு மாதிரி ஆசிரியத் தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிகமாக இஞ்சை கிடைச்சிட்டுது. அது தொடருது." என்றான் சிவகுமார்.

"இதிகாவோடை அப்பாவோடை தொடர்பு வைச்சிருக்கிறியளே?"

சாந்தா கேட்டாள்.

" ஓம்.. அவருக்கும் சரியான பிரச்சினை. எல்லாம் இதிகாவாலைதான் வந்தது. இப்ப இன்னும் பிரச்சினை யாயிருக்கும். போன் பண்ணிப்பார்க்கவேணும்." - சிவகுமார்.

" நாங்கள் இப்ப என்ரை சித்தப்பாவின்ரை கடைக்குப் பின்னால் உள்ள அறையிலைதான் இருக்கிறம். அறை பார்த்துக் கொண்டிருக்கிறன். அங்கை இருக்கிறது அவ்வளவு பாது காப்பாயில்லை." என்றாள் சாந்தா. தொடர்ந்து

" சரி சிவகுமார் நேரமாயிட்டுது. நான் போயிட்டு வாறன். பிறகு தொடர்பு கொள்ளிறன்." என்று கூறிவிட்டு சாந்தா புறப்பட்டுவிட்டாள்.

சிறிது அவ்விடத்தில் நின்றவாறு யோசித்த சிவகுமார் சந்தோசத்தோடு பேருந்து நிலையத்தை நோக்கி நடந்தான்.

இவ்வளவு சந்தோசம் தனக்கு ஏன் வருகிறது என அவன் வியந்தான். அவனது உள்மனது ' நீ அவளைக் காதலிக்கிறாயா?' என்று கேட்டது. அதே உள்மனது ' இல்லையே' என்று பதில் வழங்கியது. ஆனால் இந்த உள்மனமும் வெளி மனமும் குதூ கலப்பட்டுக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் செல்ல வேண்டிய பேருந்திலும் வந்தது. ஏறி ஒரு மூலையில் இடத்தைப் பிடித்து இருந்தான். அவனுடைய இருக்கைக்கு முன்னால் இருந்த இரு சிங்களவர்கள் யாழ்ப் பாணத்தில் நடக்கும் பிரச்சினைகள் பற்றியே கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

பின்னால் இருந்த சிவகுமாருக்குப் பயமாகவிருந்தது. தன்னுடைய இடம் வந்ததும் மெதுவாக இறங்கித் தான் தங்கும் இடத்தை நோக்கி விரைவாக நடந்தான்.

போகும் அவனுடைய மனதில் சாந்தாவின் முடிவும் அவளின் தூரப்பார்வையும் அவனுள் சந்தோசத்தை ஏற்படுத் தியது. அவள் கூறிய நிகழ்வுகள் இயக்கங்களைப்பற்றி ஒரு வெறுப்பை இன்னும் அதிகரித்தன.

சாந்தா எவ்வளவு புத்திசாலித்தனமாக முடிவெடுத்தி ருக்கிறாள். அவளைப்போல இதிகாவும் முடிவு எடுத்திருந்தால் இப்போ ஒரு பிரச்சினையும் வந்திருக்காதே என்று மனதிற்குள் கவலைப்பட்டான்.

சாந்தாவின் குடும்பத்தில் நடந்தவைபற்றிய அவளின் கதையும் இதிகா அவளிடம் வந்து சேர்ந்த கதையும் ஏதோ சினிமாப்படத்தைப் பார்த்தது போலிருந்தது.

பேருந்தை விட்டு இறங்கி அறைக்குப்போய் கட்டிலில் படுத்திருந்தபடியே அவள் கூறிய கதையை அப்படியே இரை மீட்டான் சிவகுமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு

*சாந்தாவின் வீட்டில்.......*

சாந்தாவின் நிலையும் கஸ்டமாகிவிட்டது. சாந்தாவின் தாத்தாவும் இறந்து விட்டார். சாந்தா தனியே வீட்டில் இருப் பது பாதுகாப்பாகவில்லை. சாந்தா ஒரு துணிச்சலான பெண் ணாதலால் பயமின்றி இருந்தாள். சாந்தாவின் அரசியல் பின்புலம் இயக்கத்திற்குத் தெரிய வந்துவிட்டது. சாந்தாவைப் போன்றவர்களை இயக்கத்திற்குள் எடுத்தால் இயக்கத்தின் வலு கூடுமென்று நினைத்தார்கள். இடதுசாரிக் கருத்துக் கொண்டவர்களை உள்வாங்குவதும் மறுப்பவர்களுக்கு மரண தண்டனை விதிப்பதும் இயக்கங்களின் வரலாறாக இருந்தது. தாத்தாவின் மரணத்தின் பின்பு இது நிகழக்கூடும் என்றே சாந்தா ஊகித்திருந்தாள்.

அன்று காலை எட்டு மணியிருக்கும். சாந்தாவின் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. யாராக இருக்கும் என்ற சந்தேகத்தோடு போய் கதவைத் திறந்தாள். இரண்டு இளைஞர்கள் நின்றி ருந்தனர்.

“அக்கா நாங்கள் இயக்கத்திலையிருந்து வந்திருக்கிறம். உங்களைத் தலைமை கூட்டி வரச்சொன்னார்கள்” என்றனர்.

“ஏன்?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெரியாதக்கா. நாங்கள் சொன்னதைச் செய்யிறம்"

"எங்கை வரவேணும்?"

" அதை நாங்கள் சொல்லேலாதக்கா. உண்மையிலை அது எங்களுக்குத் தெரியாதக்கா." வந்தவர்களில் ஒரு பையன் சாந்தாவுக்குத் தெரிந்த பையன்.

"இப்ப வந்தியளெண்டால் நாங்கள் கூட்டிப் போவம்"

"இப்ப வரேலாது. நாளைக்குப் பின்னேரம் வாங்கோ. வாறன்" என்றாள். வந்த இருவருக்கும் கட்டாயப்படுத்தக் கூடாது என உத்தரவு இருந்ததால்,

"சரியக்கா நாளைக்கு வாறம்" என்று கூறிவிட்டுப் போய் விட்டார்கள்.

சாந்தாவுக்கு என்ன செய்வதெனப் புரியவில்லை. இப்போ இயக்கத்திற்குப் பெண்களை எடுக்கிறார்கள் என்ற விடயம் கொஞ்ச நாட்களாக மக்கள் மத்தியில் உலவி வருவது சாந்தா வுக்குத் தெரியும். சாந்தாவுக்குத் தெரிந்த பல பெண்கள் அப்படிப் போயிருப்பதும் சாந்தாவுக்குத் தெரியும். சில பெண் கள் வலுக்கட்டாயமாக இயக்கங்களின் அரசியற் பிரிவினால் பிடித்துச் செல்லப்பட்டதும் சாந்தாவுக்குத் தெரியும். சிவகுமார் வீட்டில் இதிகா இயக்கத்திற்குப்போனதும் அவளுக்குத் தெரியும்.

சாந்தாவுக்கு இயக்க அரசியல் அவ்வளவாகப் பிடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. அவளின் சித்தாந்தப்படி தமிழர்களின் விடுதலைப் போராட்டம் திசைமாறிச் செல்கிறது என்பதுதான் முடிவு. சிவகுமாரைப் போன்ற கருத்துக் கொண்டவள்தான் சாந்தா.

எந்தக் காரணங்கொண்டும் இயக்கத்தோடு இணைவ தில்லை என்று மனதிற்குள் தீர்மானம் எடுத்துக் கொண்டாள். இன்றைய சூழ்நிலையில் அவர்கள் விடப்போவதில்லை.

இவ்விடத்தைவிட்டு இன்றே புறப்பட்டுவிடுவது என்று தீர்மானித்து ஒரு சிறிய சூட்கேசில் தன் உடுப்புகளை எடுத்து அடுக்கினாள். இருளமுன்னம் பேருந்துநிலையத்திற்குச் சென்று விட வேண்டும் என அவள் மனம் தவித்தது.

ஏனென்றால் இரவானதும் இயக்கத்தினர் வெளியில் கூடுதலாக உலவுவார்கள். அவர்கள் கண்ணில்பட்டுவிட்டால் உடனே கொண்டுபோய் விடுவார்கள்.

வீட்டைப் பூட்டிவிட்டு வேகமாக பேருந்துநிலையத்தை நோக்கி நடந்தாள். யாரும் கண்டுவிடக் கூடாதே என்று மனம் பதை பதைத்துக் கொண்டிருந்தது. அவள் இப்படிப் போய்க் கொண்டிருக்கும்போது அவள் அருகில் யாரோ “அக்கா” என்று கூப்பிடுவது கேட்டது. திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த் தாள். அருகில் நின்றவன் நேற்று வந்தவர்களில் சாந்தாவுக்குத் தெரிந்த பையன். சாந்தாவுக்கு இதயமே நின்றுவிடும் போலிருந்தது. ஆனால் அவள் பயந்ததுபோல் ஒன்றும் நடக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அருகில் வந்து "அக்கா எனக்குத் தெரியும் .. கெதி யாய்ப் போய்க் கொழும்பு பேருந்துவிலை ஏறுங்கோ. ஆரும் பார்க்கப் போகிறாங்கள்." சாந்தா இதை எதிர்பார்க்கவில்லை. அவனைக் கண்களால் கும்பிட்டுவிட்டு ஓடிப்போய் பேருந்தில் ஏறிக் கொண்டாள்.

பேருந்துவும் நகரத் தொடங்கியது. பேருந்துவின் யன்னலூ டாக அவனைத் தேடினாள். அவன் தூரத்தில் நின்று கை அசைத்துக் கொண்டு நின்றிருந்தான்.

கொழும்பு பேருந்துவில் ஏறிக் கொண்டாலும் கொழும் பில் எங்கு போவது? யாரிடம் போவது?. அப்பாவின் சகோதரர் ஒருவர் இருப்பது தெரியும். ஆனால் அவர் எங்கிருக்கிறார் என்ற விடயமும் பெரிதாய்த் தெரியாது. பெற்றாவில் கடை வைத்திருக்கிறார் என்பதுவும் கடையின் பெயரும் அவள் தாத்தா சொல்லக் கேட்டிருக்கிறாள். வருவது வரட்டும் போய்ப் பார்ப்போம் என்று மனதுள் முடிவெடுத்துக் கொண்டாள்.

பேருந்து முறுகண்டியில் நின்றபோது இறங்கிப் பிள்ளை யாரைக் கும்பிட்டாள். பிள்ளையாரைக் கும்பிட்டுவிட்டுப் பேருந்துவை நோக்கி வரும்போது யாரோ தன்னைக் கூப்பிடுவது கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். ஒரு பெண் அவளை நோக்கி ஓடிவருவது தெரிந்தது. அவளை எங்கோ பார்த்தமாதிரி இருந்தது. ஞாபகம் வரவில்லை.

"சாந்தாதானே நீங்கள்?" வந்தவள் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம்... நீங்கள்"

"நான் இதிகா..நீங்கள் ஒரு நாள் எங்கடை வீட்டுக்கு வந்தனீங்கள் ஞாபகமிருக்கா?"

சாந்தாவுக்கு ஞாபகம் வந்தது.

"ஆனால் இதிகா.... நீங்கள் .." என்று இழுத்தாள் சாந்தா.

"பிறகு எல்லாம் சொல்லிறன்.. நீங்கள் எந்தப் பேருந்து விலை வந்தனீங்கள்.." என்று இதிகா கேட்டாள்.

"அதோ அதிலை நிற்கிற பேருந்து தான்..."

"அப்ப நானும் அதிலை ஏறிறன்" என்றாள் இதிகா.

இருவரும் ஆளை ஆள் பார்த்துச் சிரித்தனர்.

இருவரும் பேருந்துவை நோக்கி நடந்தனர்.

சாந்தாவின் மனதிற்குள் பயமாகவிருந்தது. சிவகுமார் கடைசியாகத் தனக்கு எழுதிய கடிதத்தில் இதிகா இயக்கத் திற்குப் போனதுபற்றி எழுதிய வசனங்கள் ஞாபகத்திற்கு வந்தன.

இவள் ஏதும் இயக்க அலுவலாகக் கொழும்புக்கு வாறாளோ என்று மனதிற்குள் பயங்கொள்ள ஆரம்பித்தாள்.

இவளின் பயத்தை ஊகித்துக் கொண்ட இதிகா

"நீங்கள் என்ன யோசிக்கிறியள் எண்டு எனக்குப் புரியுது. அப்படியெல்லாம் ஒண்டும் இல்லை. கொழும்பிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கினாப்போலை எல்லாம் சொல்லிறன்"

என்று சொல்லிவிட்டு இருவரும் தங்கள் தங்கள் சீற்றில் போய் இருந்து கொண்டனர். பேருந்து புறப்பட்டு அரை மணி நேரத்தில் ஓரிடத்தில் நின்றது. அது ஒரு இராணுவ சோதனை செய்யும் இடம்..

பேருந்துவைவிட்டு எல்லாரையும் இறங்கச் சொன்னார்கள்.

அவரவர் பெட்டிகளை எடுத்துக் கொண்டு வரிசையாக வரும்படி கூறினார்கள். ஒவ்வொருவரின் பெட்டியையும் அக்குவேறு ஆணிவேறாகக் கிண்டி எதையோ தேடினார்கள். சாந்தாவின் முறை வந்தது. சாந்தாவின் அடையாள அட்டையைப் பார்த்தார்கள். பின்பு பெட்டியைச் சல்லடைபோட்டுத் தேடினார்கள். பின்பு சாந்தா எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு அப்பால் சென்று இதிகாவைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

இதிகாவின் முறையும் வந்தது. சாந்தாவைப் போல் பரிசோதித்தார்கள். விட்டுவிட்டார்கள். சாந்தாவுக்கு இப்போதான் நிம்மதியாக இருந்தது.

இருவரும் விரைவாக நடந்து சென்று பேருந்துவினுள் ஏறி விட்டார்கள்.

பேருந்துவினுள் ஏறி இருக்கும்போது தான் இதிகா பேருந்துவின் முன் வரிசையில் இருந்த பெண்ணை அவதானித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் இவளைப் பார்க்கவில்லை. அந்தப் பெண்தான் அமீனா.

யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லீம்களை வெளியேறும்படி இயக்கம் கூறியபோது இவளின் அண்ணன்தான் எதிர்த்துக் கதைத்தவன். அவனை இயக்கம் செய்த சித்திரவதை இப் போதும் அவளின் கண்முன் படமாக வந்தது.

அந்த நிகழ்வுகளை எப்படி மறக்க முடியும்.

எல்லாம் திரையில் படம் ஓடுவதுபோல் கண்ணில் தெரிந் தது. அந்தப் பெண்ணின் பெயர் அமீனா என்பதும் இதிகா வுக்குத் தெரியும். அவள் தன்னைப் பார்த்தால் நிச்சயமாகக் காட்டிக் கொடுத்துவிடுவாள் என்பது இதிகாவுக்குப் புரிந்தது.

ஆனால் ஒரு விடயம் அவளுக்குப் புரியவில்லை. இயக்கம் அவர்களுக்கு 24 மணி நேர கெடு விதித்து ஒரு கிழமையாகி விட்டது. ஆனால் இன்று இந்த பேருந்துவில் வருகிறாள். எப்படி இது சாத்தியமானது? யாரும் தெரிந்தவர்கள் வீட்டில் போய் இருந்துவிட்டு வருகிறாளோ என்றெல்லாம் யோசித்தாள். இந்த முடிச்சுக்கான விடை இனி அவளோடு கதைத்தாலன்றி அவிழப் போவதில்லை. அவளோடு கதைப்பதும் சாத்திய மில்லை என்று பெருமூச்சு விட்டுக் கொண்டாள் இதிகா.

தன் தலையைக் குனிந்து கொண்டு அமீனாவுக்கு நடந்த அந்தக் கொடுமையை நினைத்துப் பார்த்தாள்.அந்த நிகழ்வுகள் அவள் மனத்திரையில் சினிமாப் படம்போல் ஓட ஆரம்பித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியை அண்டிய பிரதேசங்கள் பதட்டமான நிலைமையில் இருந்தன. கடைகள் பூட்டப்படுவதும் மக்கள் அங்குமிங்கும் பயந்த முகங்களோடு ஓடிக் கொண்டும் இருந்தனர். அமீனா தன் பெற்றாரின் உடுதுணிகளை ஒரு பையில் வைத்துக் கொண்டிருந்தாள். வெளியில் ஒரு வாகனத்தில் ' எந்தப் பொருட்களும் எவரும் கொண்டு போகக் கூடாது. உங்கள் கைகளில் ஆகக் கூடியது நூற்றி ஐம்பது ருபாய் மட்டுமே வைத்திருக்க வேண்டும். உங்கள் உடு துணிகளைமட்டும் கொண்டு செல்லலாம்.' எனக் கூறிக்கொண்டு சென்றார்கள்.

அங்கு வாழும் முஸ்லிம் மக்கள் பல கடைகளும் நடாத்தி வந்தார்கள். அவர்களின் வாழ்வாதாரமே அந்தக் கடைகள் தான்.

இந்தப் பிரதேசம் காலங்காலமாக இஸ்லாமியர்கள் வாழ்ந்துவரும் பிரதேசம். அவர்கள் பிறந்தது, வளர்ந்தது, இறந்தது எல்லாமே இந்தப் பிரதேசத்தில்தான். அவர்கள் ஓடித்திரிந்து விளையாடியதும் இங்குதான். அவர்கள் பேசித் திரிகின்ற மொழியும் தமிழ்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பிரதேசத்தைவிட்டு இருபத்து நான்கு மணித்தியா லத்தில் புறப்படவேண்டும். எங்கே போவதென்பது இந்த அப்பாவி முஸ்லிம்களுக்கும் தெரியாது அதே நேரம் இவர்களை வெளியே போகச் சொன்னவர்களுக்கும் தெரியாது.

அமீனா அவசரஅவசரமாக இயங்கிக்கொண்டிருந்தாள். இவளின் வயது பதினேழு. அவளும் அவளின் இரு அண்ணாக் களும் பெற்றாரும்தான் அவர்களின் குடும்பம். இரு அண்ணாக் களில் மூத்தவர் கொழும்பில் இருக்கிறார். மற்றவர் இவர்களோடு யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்.

அவர்களின் அறிவித்தலின்படி நகைகளைக் கொண்டு செல்ல முடியாது. அவற்றை என்ன செய்வது என அமீனாவுக்கும் அவள் அண்ணன் மொகமட்டிற்கும் புரியவில்லை. சிறிது நேரம் யோசித்த அவர்கள் நகைகளை ஒரு பொட்டலமாகக் கட்டி வீட்டின் பின்பக்கவளவில் கிழக்கு மூலையில் ஒரு கிடங்கை வெட்டி அதற்குள் வைத்து மண்ணால் மூடினர்.

அதன்பின்பு வீட்டிலிருந்து வெளியேறி அவர்கள் வரச் சொன்ன ஒஸ்மானியாக் கல்லூரியை நோக்கிச் சென்றனர். அந்தப் பாடசாலையினுள் செல்ல முன்பு ஒவ்வொருவரையும் அக்குவேறு ஆணிவேறாகப் பரிசோதித்தார்கள்.

அமீனா குடும்பத்தின் முறை வந்தது. அவர்களைப் பரிசோதித்தவன் "எங்கே உன் நகைகள்?" என்று கேட்டான். அமீனா தன்னிடம் எந்த நகைகளும் இல்லை என்று கூறினாள். "காலை நான் உங்கள் பகுதிக்கு வந்தபோது நீ சங்கிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிருந்தாய். அது எங்கை இப்ப?" என்று அவன் கேட்டான். அவள் எங்களிடம் நகை இருக்கவில்லை என்று மறுத்துக் கொண்டே இருந்தாள்.

அவளை நம்ப மறுத்த அவன் பளாரென்று அவள் கன்னத்தில் அறைந்தான். அமீனா இதனை எதிர்பார்க்கவில்லை. அருகில் நின்ற அமீனாவின் அண்ணன் அவனைத் திரும்ப அடிக்க விடாமல் அந்த இயக்கப் பொடியனின் கையைப் பிடித்தான். அவ்வளவுதான் இயக்க வீரர்கள் தங்கள் மானம் போய்விட்டதென்று அந்த முஸ்லிம் இளைஞனைக் கொற கொறவென்று இழுத்துச் சென்றனர். அமீனா எவ்வளவோ தடுக்க முயன்றாள். அவளால் முடியவேயில்லை.

அப்போது ஒரு வாகனத்தில் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் அட்டகாசமாக நுழைந்து கொண்டிருந்தார். இவர்தான் இயக்கத்தின் மத்திய குழுவில் பிரதானமானவர் என்று கூறிக் கொண்டார்கள். வந்தவரைச் சுற்றி பத்துபேர் அளவில் அவரைக் காக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு நின்றிருந்தனர்.

அவர் வாகனத்திலிருந்து இறங்கி அங்கு நின்ற சனங்களை ஒருதரம் மேலோட்டமாகப் பார்த்தார். பின்பு குரலைச் செருமிக் கொண்டு எந்தவித மரியாதையும் இல்லாமல்

"ஏய்.. எல்லாரும் கேளுங்கள். எங்களுடைய பாதுகாப்பிற்காகவும் உங்களுடைய பாதுகாப்பிற்காகவும் இந்த நிமிடத்திலிருந்து இருபத்து நான்கு மணித்தியாலத்திற்குள் வடமாகாணத்தைவிட்டு வெளியேறிவிட வேண்டும். மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் எப்போ நீங்கள் வரவேண்டுமென அறிவிக்கிறோமோ அப்போது வந்தால் போதும். அதற்கு முன் எவராவது வந்தால் அவர்கள் உயிருக்கு நாங்கள் உத்தரம் தரமுடியாது." என்று கூறிவிட்டு வந்த வாகனத்தில் ஏறிப்போய்விட்டார்.

அவரோடு வந்தவர்களில் இதிகாவும் ஒருத்தி . அவளது முகம் என்னவோ இறுகிக் கறுத்திருந்தது. முன்வரிசையில் நின்ற அமீனாவை இதிகாவின் கண்கள் உற்றுப் பார்த்தன. அமீனாவும் அவளைப் பார்க்கவே செய்தாள்.

முன்பு இதிகாவின் முகத்தில் இருந்த கனிவும் அன்பும் இப்போ இருக்கவில்லை. ஆயுதம் ஏந்திய ஈவு இரக்கமற்ற ஒரு போராளியாகவே இருந்தாள்.

முஸ்லிம் மக்கள் தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டனர். எதிர்த்துக் கதைக்கவும் முடியாது. எங்கே போவதென்றும் புரியவில்லை. தங்களை வழி நடத்த இங்கு யாருமே இல்லையே என்று மிகக் கவலைப்பட்டார்கள். தங்களின் தலைவர்கள் எல்லாம் கோழைகளாகி விட்டனர் என்று தமக்குள் முணுமுணுத்துக் கொண்டனர்.

அமீனா தனக்குள் கொழும்புக்குப் போவதுதான் நல்லது என நினைத்துக் கொண்டாள். இப்படி இவர்கள் யோசித்துக் கொண்டிருக்கும்போது இழுத்துக் கொண்டுபோன அமீனாவின் அண்ணனை கொண்டுவந்து தூக்கி எறிந்துவிட்டுப் போய் விட்டார்கள். அவனை நன்றாக நையப் புடைத்திருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் முகம் கைகால்களெல்லாம் காயம். மற்றவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவே இதனைச் செய்திருந்தார்கள்.

அவனையும் சேர்த்துக் கொண்டு அமீனா குடும்பத்துடன் பிரதான வீதிக்கு வந்து நடையாகவே பேருந்து நிலையத்திற்கு வந்தார்கள். அமீனாவின் பெற்றார் களைத்திருந்தார்கள். குடிப்பதற்கு ஏதும் வாங்கக் கடைக்குப்போனபோது கடை காரர் இயக்கத்திற்குப் பயந்து எதுவும் கொடுக்க மறுத்து விட்டார்கள்.

எல்லாக் கடைகளுக்கும் இஸ்லாமியர்களுக்கு எதுவும் கொடுக்கக் கூடாது என கட்டளை இட்டிருந்தார்கள். ஆனாலும் சில கடைக்காரர்கள் அவர்களின் பரிதாப நிலையைப் பார்த்து இரகசியமாகக் குடுக்கவே செய்தார்கள்.

அமீனா புத்தளம் செல்லும் பேருந்தில் தன் குடும்பத்தை ஏற்றி விட்டுத் தான் மூதூர் போவதற்காகத் திருகோணமலை செல்லும் பேருந்து நிற்கும் இடத்திற்குச் சென்றாள். மூதூர் செல்வதென்றால் முதலில் திருகோணமலை சென்றுதான் மூதூ ருக்குப் போகலாம். மூதூரில் அவளின் நண்பி ஒருத்தி இருந்தாள். அவளோடு போய் ஒரு கிழமை நின்றுவிட்டு கொழும்பு செல்வதே அவளின் எண்ணம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர்களுக்கும் இது பிடிக்க வில்லை. முஸ்லீம் மக்கள் எங்கள் சகோதரரைப் போன்றவர்கள். அவர்களை ஏன் இடத்தைவிட்டு அகற்ற வேண்டும். ஆனால் அவர்களால் மனதிற்குள்தான் இப்படிக் கேட்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே கதைத்தால் அவர்களுக்கும் தண்டனை கிடைக்கும். அதனால் வருத்தப்படுவதோடு அவர்கள் நிறுத்திக் கொண் டார்கள்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடமாகாணம் முழுவதும் உள்ள முஸ்லிம்களுக்கு இந்த வெளியேற்ற அறிவித்தல் வழங் கப்பட்டிருந்தது. கிளிநொச்சி முல்லைத்தீவு மன்னார் என எல்லா இடங்களிலும் முஸ்லிம் மக்கள் வாழ்வு கேள்விக் குறியாகிவிட்டது. ஏன் இதனைச் செய்தார்கள் என்பது யாருக் குமே புரியவில்லை.

அமீனாவால் இந்த நிலையை ஜீரணிக்க முடியவில்லை.

பேருந்து வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

இதிகா நினைவலையிலிருந்து மீண்டு அமீனா நின்ற இடத்தைப் பார்த்தாள். அவள் இன்னும் அதே இடத்தில்தான் இருந்தாள்.

இதிகாவின் இந்தப் பதட்டத்தை அவதானித்த சாந்தா " ஏன் ஒரு மாதிரிப் பதட்டமா இருக்கிறியள் ?" என்று கேட்டாள். "ஒண்டுமில்லை இறங்கினாப்போலை சொல்லிறன்" என்று கதையைக் குறைத்துக் கொண்டாள்.

சாந்தாவும் அதற்குப் பின் எதுவும் கேட்கவில்லை.

பேருந்து வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

சாந்தா தூங்கி வழிந்து கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிகாவின் மனதில் பழைய இயக்க நினைவுகள் சூறா வழியாக வந்து கொண்டிருந்தன.

..... இதிகா அப்போது இயக்கத்தில் இடை நிலைப் பதவியில் இருந்தாள். இன்று முஸ்லீம்களை வெளியேற்றும் நிகழ்வுக்குப் போய் வந்ததிலிருந்து அவள் மனநிலை சரியாக இல்லை. யோசித்துக் கொண்டிருந்தாள்.

அவளுடைய மனதில் போராட்டம் திசைமாறிச் செல் கின்றதென்ற எண்ணம் வளரத் தொடங்கியிருந்தது. தான் பிழையான முடிவு எடுத்து வந்துவிட்டேனோ என்று சிந்திக்கத் தொடங்கி இருந்தாள். சிவகுமார் கூறியது சரிதான் என்று சிந்திக்க ஆரம்பித்திருந்தாள். சக இயக்கங்களின் போராளிகள் சிலர் தண்டிக்கப்பட்ட விதமும் அவளால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. அவர்களும் தமிழ் மக்களின் விடுதலைக்குப் போராடத்தானே வந்தவர்கள். அவர்கள் என்ன எதிரிகளா? ஏன் அவர்களிடத்தில் எமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் சகோதரத்துவத்தைப் பேண முடியவில்லை. அவர்களுக்கு ஏன் எதிரிக்குக் கொடுக்கிற தண்டனையைவிட கொடூரமான தண்டனையைக் கொடுக்க வேண்டும்? இப்படித் தனக்குத்தானே கேள்விகள் எழுப்பிக் கொண்டு மனதுக்குள் மறுவிக் கொர்ண்டிருந்தாள்.

இயக்கத்திற்குள் இதிகாவுக்குப் பூரணி என்ற ஒரு நண்பி இருந்தாள். அவளோடு தன் ஆதங்கங்களையெல்லாம் கதைத்துக் கொள்வாள். அன்றும் அப்பிடித்தான் இதிகா கவலையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதைப் பார்த்து பூரணி அருகில் வந்திருந்தாள்.

"என்ன இதிகா கவலையாக இருக்கிறீர்?"

இதிகா நடந்த விடயங்களைக் கூறியபோது

"நானும் கேள்விப்பட்டனான். அது முஸ்லிம்கள் கிழக்குமாகாணத்தில் அரச படைகளோடு சேர்ந்து நம்மவர்களைக் கொன்றார்களாம். அவர்கள் பெரும்பாலும் அரசுக்கு ஆதரவாகவே நிற்கிறார்களாம். அதனால்தான் இந்த முடிவாம்." என்றாள் பூரணி.

"அதுக்காக காலம் காலமாக வாழ்ந்தவர்களை உப்பிடிச் செய்வது எனக்குப் பிடிக்கவேயில்லை. ஏன் இஞ்சை வந்தனெண்டு இருக்கு. நாங்களே இப்பிடிச் செய்து கொண்டு சிங்களவர்களுக்கு எதிராகப் போராடிறது சரியே?" என்றாள் இதிகா.

பூரணி சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு "அமைதியாய்க் கதையடி.. ஆருக்கும் கேட்டுதென்றால் உன் பாடு அதோ கெதிதான்." என்றாள் பூரணி.

"பூரணி.. நான் விட்டிட்டுப் போகலாமென்று பார்க்கிறன்" என்றாள் இதிகா.

"உனக்கென்ன விசரே.. இஞ்சை இருக்கிற கட்டுப்பாட்டுக்குள்ளை உதெல்லாம் சாத்தியமே.. இது ஒருவழிப் பாதை மட்டுமே. விசர்த்தனமாய் ஏதும் செய்யப்போய் உன்னை நீயே அழிச்சுப்போடாதை" என்று கூறிவிட்டுப் பூரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்ந்துவிட்டாள்.

இதிகாவின் மனதில் இயக்கத்தை விட்டுப் போக வேண்டு மென்ற எண்ணம் வந்துவிட்டது. அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

அவளுடைய நினைவுகளில் சிவகுமார் ,சுவந்திகா தகப்பனார் ஆகியவர்களது முகங்கள் வந்து போயின. எப்ப டியாவது இங்கிருந்து தப்பி வெளியே போய்விட வேண்டு மென்று நினைத்தாள்.

அவள் எதற்காக எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு வந்தாளோ அது நடக்கக் கூடிய சூழல் அருகி வருவதாகவே அவளுக்குப்பட்டது. இங்கு வந்தவர்கள் யாரும் தப்பிச் செல்லவும் முடிவதில்லை.

அவள் அண்ணா என்று அழைக்கும் ஒருவர் தப்பிச் செல்ல முயற்சித்து கொடூரமான தண்டனை கொடுத்திருந்தார்கள். அதை நினைக்கும் போது அவளுக்குப் பயமாகவிருந்தது.

தகப்பனை நினைக்கும் போதெல்லாம் அவளுக்கு அழுகையாக வந்தது. அவருடைய வயதுபோன இந்த நேரத்தில் அவரோடு கூட இருக்காமல் வந்தது மகாபெரிய குற்றமாக அவளுக்குப்பட்டது.

சுவந்திகாவும் சிவகுமாரும் கரவெட்டியைவிட்டு கொழும்புக்குச் சென்றுவிட்டார்கள் என்ற செய்தியும் அவ ளுக்குக் கிடைத்திருந்தது. “அப்பா இப்போ தனியாக இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன பாடுபடுகிறாரோ' என்று மனதுக்குள் அழுது கொண்டி ருந்தாள்.

அப்போது அங்கு வந்த அவளின் நண்பி பூரணி காதுக்குள் எதையோ கூறிவிட்டு மறைந்துவிட்டாள்.

அவள் நண்பி இதிகாவைவிட உயர்ந்த பதவியில் இருக்கிறாள். அவளுக்கு இதிகாவை நன்கு பிடிக்கும். இதிகாவோடு மனந்திறந்து பல விடயங்களைக் கதைத்தி ருக்கிறாள். அவளும் இதிகா போல் விட்டுப்போக விரும்பி னாலும் முடியாது. அப்படிப் போனாலும் அவளைக் கொன்று விடுவார்கள் என்பது நன்கு புரியும் .

அவளுக்கு மேலிடத்திலிருந்து ஒரு உத்தரவு வந்திருந்தது. அந்த உத்தரவின் பிரகாரம் ஆறு பெண்போராளிகளைக் கூட்டிக் கொண்டு முறுகண்டிக்குச் செல்லவேண்டும். அங்கு எதிரிகளின் உளவுப் படையினர் மாறுவேடத்தில் உலவுவதாக தலைமைக்குத் தகவல் வந்துள்ளது. அந்த உளவாளிகளைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு இவளிடம் கொடுக்கப்பட்டிருந்தது.

இவள் தன்னோடு அழைத்துச் செல்ல உள்ள போராளிகளில் இதிகாவையும் தெரிவு செய்துள்ளாள் என்ற செய்தியையே காதுக்குள் சொல்லிவிட்டுச் சென்றிருந்தாள்.

அன்று மாலையே ஆறுபேரைக் கொண்ட பெண்கள் அணியொன்று முறுகண்டிக்குச் சென்றது. சாதாரண பெண்கள் போல் வேடமிட்டுச் சென்று உளவாளிகளைக் கண்டு பிடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமெனத் தலைவியாக வந்த இதிகாவின் நண்பி பூரணி கூறினாள்.

எல்லோரும் கவனமாகக் கேட்டனர். காடுகளுக்குள்ளால் சென்று முறுகண்டியை அடைந்து ஒரு இடத்தில் நிலைகொண்டு தங்கள் போராளி உடுப்புகளை மாற்றிக் கொண்டனர்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இடம் ஒதுக்கப்பட்டது. இதிகாவுக்கு பேருந்து தங்குமிடம் கொடுத்தாள். அதனைக் கொடுக்கும்போது அவள் பார்வையால் சொன்னதை தெளிவாகப் புரிந்து கொண்டாள் இதிகா. புறப்படும்போது கலங்கிய கண்களோடு அவளைப் பார்த்து விடைபெற்றுக் கொண்டாள் இதிகா.

அப்படியே வந்து கொழும்பு போகும் பேருந்தில் ஏறிக் கொண்டாள் இதிகா.

பேருந்து குலுங்கியபோது நினைவுகளில் இருந்து விடுபட்ட இதிகா முன் வரிசையில் இருக்கும் அமீனாவைப் பார்த்தாள். அமீனா திரும்பியே பார்க்கவில்லை. அமீனா பார்த்திருந்தால் அவள் காட்டிக் கொடுத்தேயிருப்பாள்.

பக்கத்தில் இருந்த சாந்தா ஜன்னலோடு தலையைச் சாத்தித் தூங்கிக் கொண்டிருந்தாள்.

இன்னும் அரை மணித்தியாலத்தில் பேருந்து பெற்றா பேருந்து நிலையத்திற்குச் சென்றுவிடும்.

அங்கு இறங்கி என்ன செய்வது? எங்கே போவது? எதுவுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியவில்லை இதிகாவுக்கு. சிவகுமாரும் சுவந்திகாவும் கொழும்புக்கு வந்துவிட்டார்கள் என்பது இதிகாவுக்குத் தெரியும். ஆனால் அவர்களை எங்கு சென்று தேடுவது. தான் இயக்கத்தைவிட்டு ஓடி வந்துவிட்ட விடயம் நிச்சயமாகத் தகப்பனுக்குப் போயிருக்கும் ஏனென்றால் முதலில் அவளைத் தேடிப்போகும் இடம் இதிகாவின் வீடாகத்தான் இருக்கும்.

இப்படி அவள் யோசித்துக் கொண்டிருக்கும்போது சாந்தா எழும்பிவிட்டாள்.

"நீர் முழிச்சே இருக்கிறீர்?" என்றாள் சாந்தா.

"ஓம்.. எப்பிடிக் கண்மூடிறது. பயம்தான்" என்றாள் இதிகா.

"ஏன் என்ன நடந்தது? ஏதும் இயக்க அலுவலாய் வந்தனீரோ?" என்று மிகமிக மெதுவாகக் கேட்டாள் சாந்தா.

"இல்லை. விட்டிட்டே வந்திட்டன். எனக்கு அங்கையிருக்கப் பிடிக்கேல்லை. நான் நினைச்ச மாதிரி எதுவும் அங்கை இல்லை" என்று இதிகா சொன்னபோது அவளை வியப்போடு பார்த்தாள் சாந்தா.

"நீர் என்ன கொழும்புக்கு? ஏதும் வேலை கிடைச்சு வாறீரோ?" என்று இதிகா கேட்டாள்.

"இல்லை. தாத்தா இறந்திட்டார். தனியத்தான் இருந்தனான். கிட்டத்தட்ட உம்மடை நிலைதான் எனக்கும். நீர் உள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிட்டு ஓடி வந்திட்டீர். நான் போக முந்தி ஓடி வந்திட்டன்." என்று சாந்தா சொன்னபோது அவளது நிலையை இதிகா புரிந்து கொண்டுவிட்டாள்.

"இஞ்சை ஆரும் உமக்கு இருக்கினமே?" என்று இதிகா கேட்க

"ஓம் சித்தப்பா ஒருவர் கடை வைச்சிருக்கிறார். அவரிட்டைத்தான் போறன். அவரை நான் கண்டதில்லை.சின்ன வயதிலை ஒருக்காக் கண்டிருக்கிறன்." என்றாள் சாந்தா. தொடர்ந்து சாந்தா "அப்ப நீர் எங்கை போறீர்?" என்று கேட்க இதிகா கண்கலங்கியபடி "எனக்கு ஒருவரும் இல்லை. தப்ப நினைச்சனே ஒழிய தப்பியபின் என்ன செய்யிறதெண்டு எதுவும் நினைக்கவேயில்லை" என்றாள் இதிகா.

"கவலைப்படாதையும் , உம்மைப் பார்க்கக் கவலையாக இருக்குது. என்ரை சித்தப்பா வீட்டை தங்கலாம். எந்தக் காரணம் கொண்டும் இயக்கத்திலை இருந்ததெண்டு சொல்லிப் போடாதையும்" என்றாள் சாந்தா. சாந்தாவை நன்றியோடு பார்த்தாள் இதிகா.

பேருந்தும் அதன் கடைசித் தரிப்பிடத்தில் குலுக்கிக் கொண்டு நின்றது. இதிகா நிமிர்ந்தபோது அமீனாவின் கண்களும் அவளைப் பார்த்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டு

வீட்டுக்குச் சென்ற அமீனாவுக்குப் பேருந்துநிலையத்தில் சந்தித்த அந்த இரண்டு கண்களும் மிகப் பரீட்சயமானதாகத் தோன்றியது. ஆறுதலாக இருந்து யோசித்துப் பார்க்கப் பார்க்க அவளின் நினைவில் மங்கலாக இயக்கம் தங்களது பகுதிக்குள் வாகனத்தில் வந்ததும், அந்த வாகனத்தில் உயரமான ஒரு பெண் துப்பாக்கியோடு இருந்ததும் தெரிந்தது.

அவள் ஏன் இங்கு வந்தாள்? அமீனாவுக்குக் குழப்பமாக இருந்தது. அது அவளாக இருந்தால் நிச்சயம் ஏதோ நாச வேலை செய்யத்தான் வந்திருப்பாள். இதனை உடனே தடுத்து நிறுத்தவேண்டும். இல்லாவிட்டால் பல நூற்றுக் கணக்கான மக்கள் உயிரிழக்க நேரிடும் என்று அவளது உள் மனது எச்சரித்தது.

அவளை எங்கே தேடுவது?

பொலிசாரிடம் தெரிவிப்பதுதான் சரியான வழி என்று நினைத்துத் தன்னுடைய அண்ணாவையும் கூட்டிக் கொண்டு போவதற்காக அவனைத் தேடினாள்.

அவனின் பெயர் ரகீம்.

ரகீம், அமீனாவின் கூடப்பிறந்த மூத்த சகோதரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில்தான் இவர்களோடு இருந்தவன் திடீரென்று ஒரு நாள் கொழும்புக்கு வேலை அலுவலாகச் செல்வதாகக் கூறி வந்துவிட்டான். அவன் வந்து ஒரு வருடம் இருக்கும். ஒரு கடையில் வேலை செய்வதாகவும் அறிவித்திருந்தான். யாழ்ப்பாணத்தில் இயக்கத்தால் முஸ்லீம்களுக்குப் பிரச்சினை வந்தபோது அமீனாவும் அவள் குடும்பத்தினரும் கொழும்பு வரவே புறப்பட்டனர். ஆனால் புத்தளத்திலுள்ள அவர்களின் நெருங்கிய உறவினர்கள், அங்கே வரும்படி கேட்டபோது மறுக்க முடியாது அமீனாவைத்தவிர மற்ற எல்லாரும் சென்றுவிட்டனர். அமீனா ரகீம் வீட்டைத் தேடி வந்துவிட்டாள்.

வெளியில் போயிருந்த ரகீம் உள்ளே வந்தபோது இதிகா பற்றிய விடயத்தைக் கூறி பொலிசாரிடம் செல்வோம் வா என்று கேட்டபோது ரகீம் மறுத்துவிட்டான்.

"அமீனா, இது நம்மளுக்குத் தேவையில்லாத வேலை. பேசாமல் இருக்கியா?" என்றான் ரகீம்.

" நீ என்ன லூசா..பயங்கரவாதி வந்திருக்கிறாள். தேவை யில்லாத வேலைங்கிறாய்.." என்று சத்தமிட்டாள் அமீனா.

ரகீம் அவளைக் கோபமாகப் பார்த்து அவங்களை " பயங்கரவாதின்னு சொல்லாத..எனக்குப் பொல்லாத கோபம் வரும்" என்றான் ரகீம்.

அமீனா வியப்போடு அவனைப் பார்த்தாள்.

இயக்கத்தினர் தங்களுடைய இடத்திற்கு வந்து நடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட முறைபற்றியும் தங்கள் இனத்தவர் எல்லாரையும் உடனடியாக வெளியேற்றியது பற்றியும் அவள் தெளிவாகக் கூறியபோது... எவ்வித பதட்டமுமில்லாமல் அது தனக்குத் தெரியும் என்றான். அமீனா திடுக்கிட்டுவிட்டாள்.

இவனும் அவர்களில் ஒருவனோ என்ற கோணத்தில் சிந்திக்க ஆரம்பித்தாள்.

அவள் சந்தேகப்படத் தொடங்கிவிட்டாள் என்பது ரகீமுக்கு நன்கு புரிந்தது. அவசரமாக வெளியே செல்வதாகவும் பின்பு வந்து கதைப்பதாகவும் கூறிவிட்டு ரகீம் புறப்பட்டு விட்டான்.

வெளியே வந்த ரகீம் குழப்ப நிலையில் இருந்தான்.

ரகீம் பற்றித் தெரிந்து கொள்வது மிக முக்கியம். ரகீம் ஒரு இயக்கத்தைச் சார்ந்தவனே. தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்த ஒரு இளைஞனே.

தமிழர்களின் போராட்டக் களத்தில் முஸ்லீம்களின் பங்களிப்புப் பெரிதாக இருக்கவில்லை என்பதே உண்மை. ஆனாலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சில முஸ்லீம் இளை ஞர்களும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லீம் இளை ஞர்களும் தாமாகவே முன்வந்து இயக்கங்களில் சேர்ந்தார்கள். அப்படிச் சேர்ந்தவர்களில் ஒருவன்தான் ரகீம். அவனது இயக்கப் பெயர் வல்லவன்.

இனி இவனை வல்லவன் என்றே அழைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் வந்த வல்லவன் நேராகப் பெண்கள் தங்குகின்ற ஒரு விடுதிக்குச் சென்று அமீனாவுக்குத் தங்குவதற்கான வசதிகளைச் செய்தான். வல்லவனுக்கு இயக்கத்திலிருந்து அமீனாவை வேறு இடத்தில் இருக்கச் செய்யுமாறு கட்டளை வந்து விட்டது.

வல்லவன் இயக்கத்திற்கான உளவுப் பிரிவிலேயே இருந்தான். ஏற்கனவே இதிகா இயக்கத்திலிருந்து தப்பிய விடயம் வல்லவனுக்கு வந்துவிட்டது. அமீனா கூறிய பெண் இதிகாதான் என்பதும் அவனுக்குப் புரிந்துவிட்டது. ஆனால் அதை வெளிப்படையாகக் கூறி அவளிடம் கேட்டால் தன்னைப் பற்றிய விடயம் தெரிந்தால் அமீனா சும்மா இருக்கமாட்டாள் என்பதும் அவனுக்குப் புரிந்தது. இருந்தும் அமீனாவுக்கு அவன்மேல் சந்தேகம் வந்துவிட்டது.

அமீனாவை வேறு இடத்தில் விட்டதும் வல்லவனுடைய இருப்பிடத்தையும் மாற்றும்படி அவனுக்குச் செய்தி வந்துவிட்டது.

நேரே அறைக்கு வந்த வல்லவன் அமீனாவை வெளிக்கிடத் தயாராகும்படி கூறினான். அவள் எங்கே என்று கேட்டதற்கு இருப்பதற்கு வேறு இடம் பார்த்து விட்டதாகவும் இங்கே இருப்பதற்கு வீட்டுக்காரர் சம்மதிக்க மாட்டார்களென்றும் உடனே புறப்படச் சொல்லி அவசரப்படுத்தினான்.

அமீனாவும் தன் பெட்டிகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமீனாவை விட்டுவிட்டு வந்த வல்லவன் தன்னுடைய பொருட்களையும் எடுத்துக் கொண்டு இயக்கம் அறிவித்த தன்னுடைய இடத்திற்குப் புறப்பட்டான்.

மனதிற்குள் பல வினாக்கள் எழுந்து கொண்டிருந்தன. அவனைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம் களை வெளியேற்றிய செய்கை சரியல்ல என்பதுதான். ஆனால் அதனை வெளியில் சொல்வதோ இயக்கத்தை விட்டு ஒதுங்குவதோ சாத்தியமில்லை என்பதும் அவனுக்குப் புரிந்தது.

எதற்கும் பார்ப்போம் என்ற மனநிலையில் நடந்து கொண்டிருந்தவன் அமீனா தன்னிடம் சொன்ன பெண் பற்றிய விடயத்தை இயக்கத்திடம் சொல்வதைத் தவிர்த்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பது

சிவகுமாரைச் சந்தித்துவிட்டு சந்தோசத்தோடு அறைக்குச் சென்ற சாந்தா , இதிகாவிடம் ஒன்று விடாமல் எல்லாவற்றையும் ஒப்புவித்தாள். இதிகாவுக்கும் நல்ல சந்தோசமாகவிருந்தது. ஆனாலும் தகப்பனைப்பற்றிய செய்தி அவளை வருத்தியது.

எப்படியாவது சிவகுமாரைச் சந்திக்க வேண்டும் என்று சாந்தாவிடம் கூறினாள்.

சாந்தா உடனேயே அந்த எண்ணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து இப்போது நீ சிவகுமாரைச் சந்திப்பது உனக்கும் நல்லதல்ல அவருக்கும் நல்லதல்ல என்று எடுத்துக் கூறினாள்.

“ தொலைபேசி இலக்கம் ஏதும் தந்தவரே?” என்று இதிகா கேட் டாள்.

“ அவர் வேலை செய்யிற இடத்து பள்ளிக்கூட இலக்கம் தான் தந்தவர்.” என்றாள் சாந்தா.

“ இப்ப கொழும்பிலை உள்ளவங்கள் என்னைத் தேடித் திரிவாங்கள்.” என்றாள் இதிகா.

“ கொழும்பிலையும் அவங்கடை ஆக்கள் இருக்கினமே?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சாந்தா கேட்க " ஓம் கனபேர் இருக்கினம்." என்றாள் இதிகா.

" நாங்கள் இஞ்சை கனநாள் இருக்கேலாது எண்டு சித் தப்பா சொன்னவர். வேறை இடமும் பார்க்கவேணும். இதுக்கு நான் சிவகுமாரிட்டைதான் உதவி கேட்க வேணும்." என்று சாந்தா கூறினாள்.

" ஓம்.. முந்தியும் கனகாலம் இங்கை இருந்தவர்தானே.. அவருக்குப் பலபேரைத் தெரிந்திருக்கும். கட்டாயம் உதவுவார்." என்று இதிகா கூறினாள்.

" இதிகா நீர் ஏன் இயக்கத்திற்குப் போனனீர்?" என்று சாந்தா கேட்டாள்.

" ஒரு அவசர முடிவுதான் ஆனால் அந்த நேரம் எதுவும் புரியேல்லை. ஆமிக்காரன் தான் நினைச்சபடி எல்லாரையும் கைது செய்யேக்கை.. அவனிட்டைப் பிடிபட்டு சித்திரவதைப்படிறதை விட இனத்திற்காக உயிரைக் கொடுப்பம் என்று மனசு நினைச்சுது. எங்கடை மக்கள் ஏன் கோழைகளாகவும் பணிந்து போகும் இயல்பைக் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள் என்று என் மனம் பதட்டப்பட்டது. இது குறித்து எப்போதுமே நான் ஆத்திரப்பட்டிருக்கிறேன். பெரும்பான்மை இனம் மட்டுமே அதிகாரத்தையும் செல்வத்தையும் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க மற்றவர்கள் அனைவரும் அவர்களுக்கு அடிமையாக ஏன் இருக்கவேண்டும் என்கின்ற ஆதங்கம் ஆத்திரம் இவைகள் தான் இயக்கத்தை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியெடுக்க வைத்தது. பணம், சாதி, சடங்குகள், சம்பிர தாயங்கள், நம்பிக்கைகள், மூட நம்பிக்கைகள் இவற்றுக் கெல்லாம் ஏன் எங்கள் மக்கள் அடிமைகளாக இருக்கிறார்கள். எனக்குப் புரியவேயில்லை." என்று ஆத்திரத்தோடு கூறிவிட்டு எதுவும் பேசாமல் சோகமாக கூரையைப் பார்த்துக் கொண்டி ருந்தாள் இதிகா.

தொடர்ந்து..

"..ஆனால் அங்கை போனாப்போலைதான் எல்லாமே புரிஞ்சுது..நான் நினைத்துக் கொண்டு போனமாதிரி அங்கை எதுவும் இல்லை. எல்லாமே போலியாகத்தான் இருந்தது சாந்தா. விடுதலையைவிட அங்கு அவரவர் பதவியைக் காப்பாற்றுவதற்கான யுத்தம்தான் நடந்து கொண்டிருந் தது.இராணுவம் கொன்றவர்களைவிட இயக்கங்கள் உள் மோதலால் கொன்ற எம்மவர்தான் கூட" என்றாள் இதிகா.

" ஏன் இதிகா நீ எந்த இயக்கத்திலை சேர்ந்த நீ " என்று கேட்டாள் சாந்தா.

" ஆரம்பத்திலை எனக்கே தெரியாது. பிறகுதான் தெரிஞ்சுது. ஆனால் அதை இப்ப சொல்ல விரும்பேல்லை. பிறகு சொல்லிறன். சிவகுமார் நான் போகமுன்னமே விளங்கப்படுத்தினவர். நான்தான் கேட்கயில்லை." என்று கூறிவிட்டு சிறிது நேரம் அமைதியாக இருந்தாள்.

இப்படி அவர்கள் கதைத்துக் கொண்டிருந்தபோது கதவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிச் சத்தம் கேட்டது. சாந்தா போய்க் கதவைத் திறந்தாள்.

அங்கு சாந்தாவின் சித்தப்பா நின்றிருந்தார்.

அவரைச் சிறிதும் எதிர்பார்க்காத சாந்தாவும் இதிகாவும் திடுக்கிட்டுவிட்டனர். பயத்தோடு சட்டென்று இதிகா எழும்பிவிட்டாள்.

உள்ளே வந்த அவர் கதவைப் பூட்டிவிட்டு வந்து அமர்ந்தார். அவருடைய முகம் கடுகடுப்பாக இருந்தது. நல்லாக உறைப்புச் சாப்பிட்டுவிட்டு வந்தவர்போல் இருந்தார். சாந்தாவும் இதிகாவும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

" என்ன சித்தப்பா இந்த நேரம் வந்திருக்கிறியள்" என்று சாந்தா கேட்டாள். அவர் எந்தக் கதையும் கதைக்காமல் இவர்களை முறாய்த்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சாந்தா ஏதோ கேட்க முற்பட்டபோது அவர் சைகையால் அவளைக் கதைக்கவேண்டாமென்று காட்டினார்.

பிறகு தொண்டையைச் செருமி " உங்களிலை ஆர் இயக்கத்திலை இருந்தது?" என்று அவர் கேட்டபோது இருவருமே திடுக்கிட்டுவிட்டார்கள்.

சிறிதுநேரம் எந்தவித சத்தமுமில்லாமல் சூழல் மௌனமாக நகர்ந்து கொண்டிருந்தது.

" எனக்கு எப்படித் தெரியும் எண்டுதானே யோசிக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றியள். நீங்கள் இரண்டுபேரும் கதைக்கேக்கை கடையிலை வேலை செய்யிற பொடியன் கேட்டவன்." என்று கூறி நிறுத்தினார். சாந்தாவும் இதிகாவும் ஆளை ஆள் பார்த்துக் கொண்டனர்.

அடுத்தது என்ன நடக்கப்போகிறது?

அவர்கள் எதிர்பாராத குண்டொன்றைத் தூக்கிப் போட்டார்.

" நான் உங்களைக் காட்டிக் கொடுக்கமாட்டன். ஆனால் இனிமல் இங்கை இருக்கிறது உங்களுக்குப் பாதுகாப்பில்லை. ஏனென்றால் உங்களைப்பற்றின விவரம் இப்ப அந்தப் பொடியனுக்குத் தெரிஞ்சு போய்ச்சுது. அவன் காட்டிக் கொடுக்க மாட்டானென்பது என்ன நிச்சயம். அதனாலை..."

என்று அவர் முடிக்கமுன் இருவரும் " அதனாலை..." என்றனர்.

" ஏன் அவசரப்படுகிறியள்.." என்ற அவர், " இப்ப அவசரமாக நீங்கள் இடம் மாற வேண்டும்.. எங்கடை வீட்டையும் வர ஏலாது....நான் வேறை ஒரு இடம் பார்த்திருக்கிறன் உடனே வெளிக்கிடுங்கோ என்றார். இருவரும் அவரை நன்றி யோடு பார்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்து

சாந்தாவைச் சந்தித்துவிட்டு அறைக்கு வந்த சிவகுமாருக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை. கட்டிலில் படுத்துக் கொண்டே சிரித்துக் கொண்டிருந்தான். இந்த செய்தியை எப்படியும் சுவந்திகாவுக்குச் சொல்லவேண்டும் என்று அவன் மனம் ஆசைப்பட்டது.

சுவந்திகாவும் இப்போ பிரச்சினையிலிருக்கிறாள். தன்னைச் சுற்றியுள்ள மூன்று பெண்களுமே பிரச்சினையிலுள்ளதை நினைத்து மனதிற்குள் கவலைப்பட்டான்.

நேரத்தைப் பார்த்தான். இரவு ஏழு மணியாகவிருந்தது.

அவனுடைய நண்பனும் இன்னும் அறைக்கு வரவில்லை. இப்படி அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போது அறை திறக்கும் சத்தம் கேட்டது. ஆம்! அவன் நண்பன்தான் வந்திருந்தான்.

"என்ன மச்சான் இண்டைக்கு லேற்றாய் வாறாய்?" என்று சிவகுமார் கேட்டான்.

அவன் உடுப்பைக் கழற்றியபடியே " இண்டைக்குச் சரியான வேலை மச்சான்." என்று கூறிவிட்டு " சிவா இண்டைக்கு எங்கடை கந்தோருக்கு உன்னைக் கேட்டு சுவந்திகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஒரு பொம்பிளை வந்தவ" என்றான். இதைக் கேட்டதும் படுத்திருந்த சிவகுமார் திடுதிப்பென்று எழும்பினான்.

" யார் சுவந்திகாவோ?" சிவகுமார் கேட்டான்.

" ஓம் மச்சான்..வந்தவ உன்னைக்கேட்டா..பிறகு கடிதம் ஒன்றைத் தந்துவிட்டுப் போயிட்டா" என்றான் நண்பன்.

கடிதத்தை ஆர்வத்தோடு வாங்கினான்." ஏன் மச்சான் இந்த சுவந்திகா பற்றி ஒன்றும் சொல்லேல்லை.. என்ரை விலாசமும் குடுத்திருக்கிறாய்.. நீ சரியான மர்மமாயிருக்கிறாய்... ஆர் மச்சான் இது.. அதுவும் சிங்களப் பெட்டையாய்க் கிடக்குது" என்று அவன் நண்பன் கூறினான்.

" எல்லாம் சொல்லிறன்.. முதலிலை இந்தக் கடிதத்தை வாசிச்சுப்போட்டு வாறன்" என்று சிவகுமார் கூறினான்.

அமைதியாகக் கடிதத்தை வாசித்தான்.

கடிதம் அவசர அவசரமாக எழுதப்பட்டிருந்தது.

".... நான் ஆபத்திலிருக்கிறேன். என்னைப் காவல் துறையினர் தேடத் தொடங்கியுள்ளனர். அப்பாவின் கொலை சம்பந்தமாக என்னைத் தேடுகிறார்கள். அந்தக் கொலையையும் தமிழ் இளைஞர்களின் இயக்கங்களோடு தொடர்புபடுத்தி இப்போ அரசியலில் இருக்கும் அப்பாவின் தம்பியொருவர் என்னைப் பயங்கரவாதப் பெண்ணாகக் கூறி என்னைப் பழி வாங்குவதற்காக பொலிசாரோடு சேர்ந்து தேடுகிறார். அவருக்கு எப்படியோ நான் கொழும்புக்கு வந்தது தெரிந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னோடு தொடர்பு கொள்ள முயற்சிக்க வேண்டாம். நான் அவ்வப்போது உங்களோடு தொடர்பு கொள்வேன்" என்று இருந்தது.

நிலைமையின் தீவிரம் சிவகுமாருக்குப் புரிந் தது. அவர்கள் மட்டுமல்ல தானும் இப்போ அந்த ஆபத்து வளையத்துள் வந்துவிட்டதாக அவன் மனதுக்குப் புரிந்தது.

அவனது நண்பன் சுவந்திகா யார் என்று கேட்டுத் துளைத்துக் கொண்டிருந்தான்.

சுவந்திகா யார் என்பதையும் இதிகாவைத் தான் சந்தித்த விபரத்தையும் இதிகா இயக்கத்திற்கு சென்றதையும் ஒன்று விடாமல் கூறிமுடித்தான். அவன் சொல்லும்போது சுவையான ஒரு நாவலைக் கேட்டுக் கொண்டிருப்பதுபோல் அவனின் நண்பன் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால் இதிகா இப்போ கொழும்புக்கு வந்துவிட்டாள் என்ற விடயத்தைமட்டும் சொல்லாமல் மறைத்துவிட்டான்.

இதற்குப்பின் இருவரும் எதுவும் கதைக்கவில்லை. உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினொன்று

காலையில் எழும்பிய சிவகுமார் காலைக்கடன்களை முடித்து விட்டுப் பள்ளிக்கூடம் செல்லத் தயாரானான். மனதிற்குள் இன்று எப்படியாவது இதிகாவுக்குச் சுவந்திகா பற்றிய செய்தியைச் சொல்லியாக வேண்டுமென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

பாடசாலைக்குச் சென்றதும் அன்றைய வகுப்புக்களோடு மனம் ஒன்றிக் கொண்டது. அன்று உயர்தர வகுப்புக்கு கணித பாடம் இருந்தது. உயர்தர வகுப்புக்குப் படிப்பிப்பதென்றால் அவன் மனம் சந்தோசமாகிவிடும். இதனால் அவன் மற்றைய தன் பிரச்சினைகளை எல்லாம் மறந்துவிடுவான்.

எட்டாம் வகுப்பிற்குப் பாடம் எடுத்துவிட்டு வெளியில் வந்தபோது எதிரே தமிழ்ப்பாட ஆசிரியர் சுகவனம் வந்து கொண்டிருந்தார். அவரைக் கடந்து போய்விட வேண்டுமென்று அவசர அவசரமாக நடந்தான் சிவகுமார். அவரோடு கதைப்பதில் அவனுக்கு விருப்பமேயில்லை. சுகவனம் ஒரு தமிழ்ப் பக்தர். யாழ்ப்பாணத்தில் நடக்கும் விடயங்களை ஒன்றுக்குப் பத்தாகச் சொல்லி மகிழ்பவர்.

சிவகுமார் வேகமாக நடந்து வருவதை அவதானித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இன்றையான் செய்தியை சிவகுமாருக்குச் சொல்லிவிடவேண்டுமென்ற வேகத்தில் அவனை நோக்கியே நடந்தார். அதனைச் சொல்லாவிட்டால் அவரின் தலை சுக்கு நூறாக வெடித்துவிடும். "சிவகுமார் சேர் இண்டைக்கு ஒரே அடியிலை முப்பத்தி ரண்டாம்" என்றார் சுகவனம். சிவகுமார் அவரை எரிச்சலோடு பார்த்தார்.

"ஓ .. பின்னேரம் பாருங்கோ அந்த ஏரியாவிலை பொது சனங்கள் முந்நூறு முடிஞ்சிருக்கும்" என்றான் சிவகுமார்.

'இரண்டு பக்கங்களிலும் மனித உயிர்களுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டது. துயரம் நிறைந்த இறப்புகள் இன்பம் நிறைந்ததாக மாற்றப்பட்டுவிட்டது. சமூகத்தின் அடிப்படைக் கட்டுமானங்கள் காரணமில்லாமலே உடைக்கப்பட்டன. இராணுவம் இறக்கும்போது தமிழர்கள் சந்தோசப்படுவதும் போராளிகள் இறக்கும்போது சிங்களவர்கள் சந்தோசப்படுவதுவும் எந்த வகையில் நியாயமாக இருக்க முடியும்.' இப்படித் தன் மனதிற்குள்ளே நினைத்தபடி வகுப்ப றையை நோக்கி நடந்து கொண்டிருந்தான் சிவகுமார்.

அவனுடைய பதிலால் எரிச்சலடைந்த சுகவனம் வாத்தியார் ஒன்றும் கூறாமல் அவனை விலத்தி நகர்ந்தார்.

அப்போது இவர்களைத் தாண்டிப்போன இன்னொரு ஆசிரியர் " வாயைக் குடுத்து வாங்கிக் கட்டிக்கொண்டு போகிறார்" என்று கூறிக் கொண்டு போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமார் அதனைச் செவிமடுக்காமல் தன் வகுப்பை நோக்கி நடந்தான்.

அடுத்தது அவனது வகுப்பு பன்னிரண்டாம் வகுப்பு. பதின்மூன்று பேர்தான் . ஒரு ஆண் மற்றவர்களெல்லாம் பெண் பிள்ளைகள். இது ஆண்பாடசாலையாக இருந்தாலும் உயர்தர வகுப்புக்கு பெண் பிள்ளைகளுக்கும் அனுமதி உண்டு.

வகுப்புக்குள் நுழைந்தபோது சிரித்தபடி வரவேற்றார்கள். சிவகுமாரோடு இவர்கள் எல்லாமே கதைப்பார்கள். சிவகுமாரும் அப்பிடித்தான்.

செல்வி, தேவி, சங்கர் மூவரும் படு சுட்டிகள். படிப்பிலும் கெட்டிக்காரர்கள்.

சிவகுமார் கதிரையில் இருந்ததும் " சேர், உங்களிட்டை ஒரு கேள்வி கேட்கவா?" என்றாள் செல்வி.

" சரி கேள்" என்று சிவகுமார் கூற,

" சேர், நீங்கள் காதலிச்சிருக்கிறீங்களா?" என்று கேட்டாள்.

சிவகுமாருக்கு இந்தக் கேள்விக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. 'மண்டையிலை நிரம்பி இருக்கிற பிரச்சினைகளுக்கு என்ன தீர்வென்றே தெரியவில்லை. அதற்குள் காதல் ஒரு கேடு' தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே சிரித்தபடி " இன்றைக்கு எந்தப் பகுதி படிக்கப் போகிறோம்?" என்று கதையை மாற்றினான். செல்வி விடவேயில்லை " சேர் முதலிலை என்ரை கேள்விக்குப் பதில் சொல்லுங்கோ" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாப்பிடியாக நின்றாள்.

என்ன சொல்வது என யோசித்தான். பிறகு ஏதோ முடிவெடுத்துவிட்டு " இதுவரையில்லை" என்று முழுப் பூசிணிக்காயைச் சோற்றுள் புதைத்தான்.

அதற்குப் பிறகு அவர்கள் எதுவும் கதைக்கவில்லை. ஆனால் செல்வி சாந்தியை தன் ஓரக் கண்ணால் பார்த்தாள். இதனைச் சிவகுமாரும் கவனிக்கத் தவறவில்லை.

சிவகுமார் மெதுவாகப் பாடத்தை ஆரம்பித்தான்.

அவன் படிப்பித்துக் கொண்டிருக்கும்போது காரியாலயப் பையன் வந்து " சேர், உங்களுக்குத் தொலைபேசி வந்திருக்கு" என்றான். பாடம் தொடங்கிவிட்டால் அவன் வகுப்பைவிட்டுப் போகவே மாட்டான். " அரை மணித்தியாலம் கழிச்சு எடுக்கச் சொல்லு" என்று கூறிவிட்டு படிப்பித்தலில் கவனம் செலுத்தினான்.

பாடம் முடிந்ததும் காரியாலயத்தை நோக்கி நடந்தான். யாராக இருக்கும் என்று மனதிற்குள் கேள்வி எழுப்பியபடியே நடந்து கொண்டிருந்தான். பாடசாலைத் தொலைபேசி இலக்கத்தைச் சாந்தாவிடம் மட்டும்தான் கொடுத்திருந்தான். அப்படியானால் தொலைபேசி செய்தது நிச்சயம் சாந்தாதான் என்று நடையை விரைவுபடுத்தினான்.

மனம் கற்பனை செய்யத் தொடங்கிவிட்டது. பதற்றமாகவிருந்தது. அவன் காரியாலயத்தை அடையத் திரும்பவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பு வந்தது. அதனை அவசரஅவசரமாக எடுத்தான். மறுமுனையில் சாந்தாதான்.

சாந்தா நேற்று தனது சித்தப்பா வந்ததாகவும் இதிகா பற்றிய விடயத்தை அவர் தெரிந்து கொண்டதாகவும் அங்கு இருப்பது ஆபத்து என்றும் அவரின் உதவியுடன் தாங்கள் இருவரும் வேறு இடத்திற்குச் சென்றுவிட்டதாகவும் கூறி னாள்.

அது எந்த இடம் என்று சிவகுமார் திரும்பத் திரும்பக் கேட்டும் சாந்தா சொல்ல மறுத்துவிட்டாள். தேவையாயின் திரும்பவும் இதே எண்ணுக்குத் தொடர்பு கொள்கிறேன் என்று கூறிவிட்டு வைத்துவிட்டாள்.

பாடசாலையின் மணி அடித்தது.

சிவகுமார் சிறிது நேரம் ஆசிரியர் தங்குமறையில் இருந்து விட்டு வீட்டுக்குப் புறப்பட்டான். அறைக்கு வந்த சிவகுமாருக்குத் தலையிடிப்பதுபோல் இருந்தது. தேனீர் வைத்துக் குடித்துவிட்டு இரண்டு பனடோல் எடுத்துப் போட்டு விட்டுப் படுத்துவிட்டான். அப்போதான் அவனுக்கு நினைவுக்கு வந்தது தான் சுவந்திகாவின் நெருக்கடியை சாந்தா விற்குச் சொல்லவில்லையென்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரண்டு

கொழும்பு நகரம் பதட்டமாகவே இருந்தது. எத்தனையோ விதமான வதந்திகள் ஒவ்வொரு நாளும் பரவிக் கொண்டிருந்தன. எந்த நேரமும் எதுவும் நடக்கலாமென்ற பயத்தினால் தமிழர்கள் இருளமுன் வீட்டுக்குப் போய்விடவேண்டுமென்ற தவிப்பினால் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தனர். தமிழர்களின் இந்த அவசரத்தை புரிந்து கொண்ட சிங்கள மரக்கறி வியாபாரிகள் விலைகளை தாம் விரும்பியவாறு கூட்டி விற்றுக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு நாள் காலையும் சிங்களப் பத்திரிகைகளில் வடக்கிலும் கிழக்கிலும் இறந்த ராணுவத்தினரின் எண்ணிக்கைதான் தலைப்புச் செய்திகளாக இருந்தன. இவற்றையெல்லாம் அவதானித்த தமிழர்கள் மீண்டும் ஒரு 83 வந்துவிடுமோவென மனதிற்குள் பயந்து கொண்டிருந்தனர்.

அன்று ஆகஸ்ட் 12.

கொழும்பில் இராணுவ வாகனங்களும் காவல் வண்டிகளும் பெருவாரியாக இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தன. ஏதோ முக்கியமான விடயம் நடந்திருக்க வேண்டுமென எல்லோரும் கதைத்துக் கொண்டனர். தமிழர்கள் பேயறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களைப்போல் தமது வீடுகள் நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தனர். புதிது புதிதாக வீதிகளில் இராணுவ தடுப்பு நிலைகள் உருவாக்கப்பட்டு தமிழர்கள் மட்டும் மறித்து விசாரிக்கப்பட்டனர். என்ன நடக்கிறதென யாருக்கும் எதுவும் புரியவில்லை. தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் பயந்து விரைந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முகங்களும் இறுகிக் கறுத்திருந்தன. கொஞ்ச நேரத்தில் கொழும்பு நகரமே வெறிச்சோடிப் போய்விட்டது.

வெள்ளவத்தைப் பிராந்தியத்தில் தமிழர்கள் வதியும் வீடுகளில் இராணுவம் புகுந்து யாரும் புதிதாக வந்திருக் கிறார்களாவென சல்லடை போட்டுத் தேடிக் கொண்டிருந் தார்கள்.

தொலைக்காட்சிச் சேவையில் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி ஒளி பரப்பப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த அமைச்சர் ஒரு தமிழர். அரசாங்கத்தின் வெளிநாட்டு அமைச்சராக இருந்து கொண்டு வெளிநாடுகளில் தமிழர் விடுதலைக்கெதிராகப் பிரசாரம் செய்கிறார் என தமிழர் தரப்பால் குற்றம் சாட்டப்பட்டிருந்தார். நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதென்றும் மக்களைப் பயப்பிடத் தேவையில்லையென்றும் செய்திகளில் திரும்பத் திரும்ப கூறிக் கொண்டிருந்தார்கள்.

வெள்ளவத்தையில் ஒரு வீட்டில்தான் சாந்தாவும் இதிகா வும் இருந்தார்கள். சாந்தா மட்டும்தான் வெளியில் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்கள் வாங்குவாள். இதிகா வெளியே வருவதேயில்லை. அமைச்சரின் இறப்புச் செய்தி இவர்களுக்கும் வானொலி வாயிலாக வந்துவிடுகிறது. பயத்தின் உச்சக்கட்டத்தில் இருந்தார்கள்.

சிவகுமாரும் வானொலி வாயிலாக அறிந்து பதட்ட மாகிவிட்டான். சாந்தாவும் இதிகாவும் எங்கிருக்கிறார்கள் என்பது அவனுக்கும் தெரியாது. இந்த நேரம் அவர்கள் அகப் பட்டால் அதோகதிதான். உள்ளுக்குள் நிரம்பவே அழுதான்.

அடுத்த நாள் அமைச்சரின் கொலைதான் தலைப்புச் செய்தியாகவிருந்தது.

தலைப்புச் செய்தி பின்வருமாறு இருந்தது.

வெளிநாட்டு அமைச்சர் கொலை: பெண் உள்பட பன்னிரண்டு தமிழர்கள் கைது- நாளை உடல் அடக்கம்.

சுட்டுக் கொல்லப்பட்ட இலங்கை வெளியுறவு அமைச்ச ரின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சி நாளை நடக்கிறது. இதனில் இந்தியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் கலந்து கொள்கின்றனர். இந்தியாவின் சார்பில் வெளியுறவுத் துறை அமைச்சர் ,பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். அமைச்சரின் கொலை தொடர்பாக ஒரு பெண் உட்பட பன்னிரண்டு தமிழர்களைப் காவல் துறையினர் கைது செய்துள்ளனர். எழுபத்து மூன்று வயது நிரம்பிய இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக்கிழமை இரவு அடையாளம் தெரியாத சில நபர்களால் அவரது வீட்டுக்கு அருகே வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து அரசாங்கம் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்துள்ளது. இராணுவத்தினர் அமைச்சர் வீட்டுக்கு அருகிலுள்ள குடியிருப்பாளர்களின் வீடுகளில் அதிரடிச் சோதனை நடத்தி சிலரைக் கைது செய்துள்ளனர். கைது செய்ப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட வில்லை. தமிழர்தரப்பு தங்களுக்கும் இந்தக் கொலைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என அறிவித்துள்ளது எனவும் இருந்தது.

இன்னுமொரு பத்திரிகையில் இந்தியத் தமிழ்நாட்டின் முதலமைச்சரின் அறிக்கையைப் பிரசுரித்திருந்தனர் அதில்... கடந்த வெள்ளிக்கிழமையன்று இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் படுகொலை செய்யப்பட்டதை அறிந்து நான் மிகுந்த அதிர்ச்சியடைந்தேன். இலங்கையின் மேலும் ஒரு திறமையான அமைச்சர் பயங்கரவாதிகளின் கோழைத்தனமான குண்டுகளுக்குப் பலியாகிவிட் டார். இலங்கையில் அமைதியைக் கொண்டு வர இலங்கை அதிபரின் துணிச்சலான நடவடிக்கைகளுக்கு நான் உறுதுணையாகவிருப்பேன்....

இப்படியிருந்தது.

இவைகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்க பெண்கள் விடுதியில் தங்கியிருந்த அமீனா இந்தச் செய்தி கேட்டுத் திடுக்கிட்டுவிட்டாள். அவளுடைய மனம் இதனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத்தான் இதிகா வந்திருக்கிறாள் என்று முடிவெடுத்து விட்டது.

அவளுக்குள்ள பிரச்சினை இதிகாவின் பெயர் அவளுக்குத் தெரியாது. ஆக அவளின் முகம் மட்டுமே ஞாபகத்தில் உள்ளது. இதிகாவைக் கண்டால் மட்டுமே அடையாளம் காட்ட முடியும். இதைப் காவல் துறையிடம் சொல்லாவிட்டால் அவளுக்கு மண்டை வெடித்து விடும் போலிருந்தது. ஆனால் இதனைக் காவல்துறையிடம் சொல்ல ஏன் தன் அண்ணா ரகீம் தடுத்தான் என்பது அவளுக்குப் புரியவேயில்லை. அன்றே சொல்லி இருந்தால் இப்படி ஒரு கொடூரம் நடந்திருக்காது என்பது அவளின் எண்ணம். ஆதலால் மேலும் எதுவும் நடக்காமலிருக்க இப்பவே தான் சொல்ல வேண்டுமென்று நினைத்து உடுப்பை மாற்றிக் கொண்டு வெளியேவர அவளின் அண்ணன் ரகீம் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதின்மூன்று

கொழும்பு அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்க யாழ்ப்பாணம் இதைவிட மோசமாகவிருந்தது. வீதியால் போவோர் வருவோர் எல்லோரையும் சகட்டு மேனிக்குத் தாக்கியது ராணுவம். மக்களைப் பொறுத்தவரை பரிதாபமான நிலை. இந்த நிலைபற்றி இயக்கத்தாருடன் கதைத்தால் ஒன் றைக் கொடுத்துத்தான் இன்னொன்று வாங்க முடியுமென்ற தத்துவம் வேறு. இளைஞர்களை வைத்திருப்பவர்கள் நெருப்பை மடியில் கட்டி வைத்திருப்பதுபோல் இருந்தார்கள். ஒரு பக்கம் இயக்கம் இளைஞர்களை வலிந்து அழைத்துக் கொண்டி ருந்தார்கள். இன்னொருபக்கம் இராணுவம் இளைஞர்களைக் கண்டால் கடத்திச் சென்று கொல்கிறது. இவ்வளவு காலமும் பெற்றவர்கள் தங்கள் பிள்ளைகளைக் கொழும்புக்கு அனுப்பி வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இப்போ அமைச்சர் கொலையோடு அதுவும் முடியாததாகிவிட்டது.

சுந்தரம் வாத்தியார் காலை எழும்பிக் காலைக் கடன்களை முடித்துவிட்டுப் பத்திரிகையை எடுத்து வாசித்துக் கொண்டி ருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் நிலைமை மோசமாகிக் கொண்டு வருவதை பத்திரிகைச் செய்திகளின் வாயிலாக அறிந்து கவலைப்பட்டார். அப்போது நான்கைந்து இளைஞர்கள் துப்பாக்கிகளுடன் உள்ளே நுழைந்தனர். சுந்தரம் வாத்தியார் இதை எதிர்பார்க்க வில்லை. வந்தவர்கள் எல்லோரும் சிறுவயது இளைஞர்களாகவே இருந்தனர். அவர்களில் ஒருவன் வாத்தியாரிடம் " உங்களை மேலிடம் கூட்டிவரச் சொல்லியிருக்கிறார்கள்" என்று கூறி னான்.

சுந்தரம் வாத்தியாருக்குக் கோபம் வந்து " நான் ஏன் வரவேண்டும்..வரமுடியாது என்று சொல்" என்று சத்தமிட்டார். அவர்கள் விடுவதாயில்லை. " வாத்தியார் மரியாதையாக வந்தால் நல்லது. அல்லது கொறகொறவென்று இழுத்துப் போகவேண்டி வரும்" என்று கூறினான்.

வாத்தியார்பேசாமல் நின்றார். "விசாரித்துவிட்டு விடுவார்கள்" என்று கூற வாத்தியாரும் பேசாமல் சென்று அவர்களின் வண்டியில் ஏறிக்கொண்டார். போகுமுன் தான் வாழ்ந்த மனையை ஒருதரம் கடைசியாகப் பார்த்துக் கொண்டார்.

புறப்பட்ட வாகனம் நெல்லியடிச் சந்தியைத் தாண்டி கொடிகாமம் போகும் பாதையில் சென்று திரு இருதயக் கல்லூரி முன் நின்றது. வாத்தியாரை இறங்கச் சொன்னார்கள்.

அவரும் இறங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பள்ளிக்கூடத்திற்கு அருகிலுள்ள குச்சொழுங் கையால் வருகின்ற தோட்ட வெளியினூடாக அழைத்துச் சென்று அதன் மத்திக்குக் கொண்டு சென்றார்கள். அவரும் அவர்கள் சொன்னபடி நடந்து சென்றார்.

மத்தியை நெருங்கியதும் " வாத்தியார் ஒருக்காத் திரும் புங்கோ" என்றார்கள். வாத்தியார் திரும்ப அவர்களில் ஒருவன் அவரின் நெற்றியைக் குறிபார்த்துச் சுட்டான். அவ்வளவுதான் வாத்தியார் அப்படியே சரிந்து விட்டார்.

அவரின் உயிர் போய்விட்டதாவெனப் பார்த்த நால்வரும் புறப்பட்டபின்பு அருகிலுள்ள வீடுகளைச் சேர்ந்தவர்கள் சம்பவ இடத்திற்கு ஓடினார்கள்.

இனிப் போய்த்தான் என்ன?. எவ்வித சோலி சுரட்டுக்கும் போகாத வாத்தியார் இறந்ததுதான் மிச்சம்.

செய்தி ஊர் முழுக்கப் பரவியது. கனகமக்காவுக்கும் செய்தி போனது. கனகமக்கா அங்கு சென்று அவரை ஒரு வாடகை வண்டி மூலம் வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தாள்.

வாத்தியாரின் மூத்தமகன் 83 கலவரத்தில் வெட்டிச் சாய்க்கப்பட்டான். மகள் இயக்கத்துக்குப் போய் இயக்கத்தை விட்டு வெளியே வந்து எங்கேயோ ஒழிந்திருக்கிறாள். கடைக்குட்டி சந்திரன் ஜெர்மனியில் இருக்கிறான்.

கனகமக்காவுக்கு யாருடைய தொடர்பு இலக்கமும் தெரியாது. சிவகுமார் - அவர் வீட்டில் இருந்த பையன் போன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தால்தான் உண்டு.

அடுத்த நாள் செய்திப் பத்திரிகையில் இந்த நிகழ்வு வந்திருந்தது. அதனைப் படித்ததும் சிவகுமார் ஏங்கிப் போனான். அவன் பாடசாலைக்கு லீவு போட்டுவிட்டு அறைக்கு வந்தான். இதிகாவுக்கு எப்படி அறிவிப்பது? சுவந்தி காவுக்கு எப்படி அறிவிப்பது. யாருடைய தொடர்பு இலக்கமும் அவனிட மில்லை. அவர்கள் இருவரும் மறைந்து வாழ்கிறார்கள்.

சிவகுமார் அறையைவிட்டு வெளியே வந்து கனகமக்காவுக்கு தொலைபேசி எடுத்தான். கனகமக்கா வாத்தியாரின் இறப்பை உறுதி செய்தா.

" தம்பி நீ இதிகாவைப் பார்த்தனீயே?" என்று கேட்டாள். சிவகுமார் உடனேயே " இல்லையக்கா" என்று கூறிவிட்டான். இதிகா கொழும்பில் நிற்பதை அவன் யாருக்கும் சொல்ல விரும்பவில்லை.

" ஆர் தம்பி கொள்ளி வைக்கிறது" என்று கேட்டாள்.

எந்தவிதமான யோசனையுமின்றி

" நீங்களே வையுங்கோ அக்கா" என்றான் சிவகுமார்.

இந்தப் பதிலுக்குக் கனகமக்கா பதில் ஏதும் கூறவில்லை. போனை வைத்துவிட்டா.

சிவகுமார் நிரம்பிய மனக் கவலையுடன் அறைக்குத் திரும்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய நினைவுகளில் வாத்தியார் தன்னைக் காப்பாற்றிய காட்சிகளும் அவர் தன்னோடு பழகிய காட்சிகளும் திரைப்படம் போல் ஓடின. அந்த மனிதரின் நேர்மையும் அவரின் கொள்கையைச் சமரசம் செய்யாத இயல்பும் அவன் மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

துயரத்தோடு அறைக்கு வந்து படுத்துவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதின்நான்கு

அமீனா வெளியில் வந்தபோது எதிரே வந்த சகோதரன் ரகீமைக் கண்டு சிறிது திடுக்குற்றாலும் சமாளித்துக் கொண்டு "என்ன காக்கா இந்தப்பக்கம்?" என்றாள் அமீனா.

" அது சரி.. நீ எங்கை போறாய்?" என்று ரகீம் கேட்டான்.

அமீனா அவனுக்கு மறைக்க விரும்பாமல் அமைச்சரின் சாவுக்கு அவள்தான் காரணம் என்று கூறினாள்.

"யார்?" என்று ரகீம் கேட்டான்.

" அவள்தான் எங்களை எங்கடை வாழ்ந்த இடத்தை விட்டுக் கலைத்தாளே.. அன்றைக்கு பெற்றா பேருந்து நிலையத்தில் கண்டதாகச் சொன்னனே அவள்தான்.. நிச்சயமா அவள் கொழும்புக்கு இதைச் செய்யத்தான் வந்திருக்கிறாள்" என்று அமீனா அடித்துச் சொன்னாள்.

இவள் சொல்வதை அமைதியாகக் கேட்ட ரகீம் சிரித்தான்.

" ஏன் சிரிக்கிறாய்?" என்று பாய்ந்து விழுந்தாள்.

" அமீனா, அவரைக் கொன்றது அவளில்லை." என்றான்.

அமீனா திடுக்கிட்டுவிட்டாள். அவள் மனம் குழம்பி விட்டது. எப்படி அவளில்லையென்று இவனுக்குத் தெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது.. போன்ற கேள்விகளால் குழம்பிப்போய் அவனைப் பார்த்தாள்.

“ அப்பிடியென்றால் நீ....” என்று இழுத்தாள்.

“ உனக்கென்ன விசரே” என்று கூறிச் சமாளித்துவிட்டான்.

அமீனா அவனிலிருந்து சிறிது தள்ளி நின்று கொண்டாள்.

அமீனாவின் சந்தேகம் வலுவடைந்தது.

திரும்பவும் விடுதிக்குள் சென்று கட்டிலில் குப்புறப்ப டுத்துக் கொண்டாள்.

அமீனாவின் இடத்திலிருந்து அகன்ற வல்லவன் பெற்றா வின் எல்லா இடத்திலும் இதிகாவைத் தேடத் தொடங்கினான். சாந்தாவின் சித்தப்பாவின் கடைக்குச் சென்று இதிகாவின் படத்தைக் காட்டி , அவளின் பெயர் கமலினி என்றும் அவள் சிறு பிரச்சினை ஒன்று காரணமாக வீட்டை விட்டு வெளியே வந்து விட்டாளென்றும் அவளைக் கண்டீர்களாவென்றும் கேட்டான். படத்தைப் பார்த்த சாந்தாவின் சித்தப்பா துணுக்குற்றாலும் பெயரை கமலினி என்று கூறுகிறானே என்று அவனைச் சந்தேகத்தோடு பார்த்து தான் காணவில்லை என்று முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைத்தார்.

வல்லவனுக்கு அவர் மேல் எந்தவித சந்தேகமும் ஏற்பட வில்லை.

அவன் அவர் கடையைவிட்டுச் சென்றதும் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரஅவசரமாக வெளியே வந்து தெகிவளை செல்லும் பேருந்துசில் ஏறிக் கொண்டார்.

நேராக இதிகாவும் சாந்தாவும் தங்கி இருந்த வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினார்.

உள்ளே இருந்த இதிகாவும் சாந்தாவும் மேல் யன்னலால் எட்டிப் பார்த்து யாரென்பதை உறுதி செய்தபின் வந்து கதவைத் திறந்தனர்.

அவர்களைத் தள்ளிக் கொண்டு சாந்தாவின் சித்தப்பா உள்ளே நுழைந்தார். அவர்களுக்கு அவரது இந்தச் செய்கை ஆச்சரியத்தையும் பயத்தையும் கொடுத்தது.

கதவைப் பூட்டச் சொல்லிவிட்டு இதிகாவைப் பார்த்து " அம்மா உன்ரை பெயர் என்ன?" என்று கேட்டார்.

" இதிகா.." என்று அவள் சொன்னாள்.

" அப்ப கமலினி என்றது யார்?" என்றார் அவர்.

" அதுவும் நான்தான். நான் இயக்கத்திலை இருக்கேக்கை என்ரை பெயர் கமலினிதான்" என்றாள் இதிகா.

இதற்குப் பிறகு அவர் தன் கடைக்கு வல்லவன் வந்தது பற்றியும் அவன் கூறிய விடயங்களையும் ஒன்றுவிடாமல் கூறினார்.

இருவருக்கும் திக்கென்றது.

இயக்கம் தன்னைத் தேடத் தொங்கிவிட்டதென இதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவுக்கு விளங்கியது. அதுவும் கொழும்புவரை வந்துவிட்டார்கள் என்றதும் இருவருக்கும் புரிந்தது.

இதிகா இப்போது அமீனாவின் கண்ணிலும் படக்கூடாது. இயக்கத்தின் கண்களிலும்படக்கூடாது. இராணுவத்தின் கண்களிலும்படக்கூடாது. மூன்று முனைகளில் தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது என்பதுமட்டும் இதிகாவுக்குப் புரிந்தது. இப்படிக் கதைத்துக் கொண்டிருந்தபோது தற்செயலாக சாந்தாவின் சிறிய தகப்பனின் கையிலிருந்த பேப்பரில் தகப்பனின் படம் தெரிந்தது. ஆம் சுந்தரம் வாத்தியாரின் படம்தான்.

சட்டென்று பாய்ந்து அந்தப் பேப்பரை இழுத்தெடுத்து அந்தச் செய்தியை வாசித்தபடியே சத்தமாக அழத் தொடங்கி விட்டாள்.

இவளின் அழுகையைப் பார்த்த சாந்தா ஓடிப்போய் பத்திரிகையைப் பார்த்தாள். அதில் சுந்தரம் வாத்தியார் இயக்கத்தால் சுடப்பட்ட செய்தியும் அவரின் படமும் இருந்தது. அவளும் அழுதுவிட்டாள்.

ஒன்றுமே புரியாமல் சாந்தாவின் சித்தப்பா முழி முழியென்று முழித்தார். அவரின் நிலையைப் பார்த்த சாந்தா விடயத்தை விவரமாகக் கூறினாள். அதற்குப் பின் அவருக்கும் இதிகாவைப் பார்க்க அழுகை வந்தது. சத்தமாக அழவேண்டாம் என்று அவர்களிடம் கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பனின் மறைவிற்குத் தானே காரணம் என்று நினைத்து நினைத்து அழுதாள்.

அவளைத் தேற்றிய சாந்தா " நடந்தது நடந்து விட்டது. இனி அடுத்த காரியத்தைப் பார்க்கவேணும். உனக்கு எல்லாப் பக்கத்தாலையும் பிரச்சினை. இதிலிருந்து தப்புவது எப்படி என்றுதான் யோசிக்கவேணும். என்னைக் கேட்டால் நீ நாட்டை விட்டுப் போறதுதான் புத்திசாலித்தனமாகப் படுகுது. ஆனால் எங்கை போறதெண்டதுதான் பிரச்சினை. இந்தியாவுக்கும் போகேலாது. அங்கை போனால் இயக்கத்திலை அகப்படுவாய். இப்ப ஜேர்மனிக்குப் போறதுதான் உசிதம். ஏனென்றால் அங்கை உன்ரை தம்பியும் இருக்கிறார். ஆனால் எப்படி ஜேர்மனிக்குப் போறது?" என்று கூறிவிட்டு இதிகாவைப் பார்த்தாள்.

இவள் சொல்வதை அவதானமாகக் கேட்ட இதிகா " முந்தி தம்பியை ஜேர்மனிக்கு அனுப்பி வைச்சதும் அண்ணி சுவந்திகா தான். அவவைத்தான் தொடர்பு கொள்ளவேண்டும்" என்று கூறினாள்.

"இப்ப சுவந்திகாபற்றி அறியிறதெண்டால் சிவகுமாரோடைதான் கதைக்கவேணும். நாளைக்கு அவரின்ரை பள்ளிக்கூடத்திற்குத்தான் போன் பண்ணவேணும். அதுவும் அவசரமாய்ச் செய்யவேணும். இஞ்சையும் நிலைமை பாதுகாப்பாய் இல்லை. எந்த நேரம் என்ன நடக்குது எண்டு தெரியேல்லை." என்று சாந்தா கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தா இப்படிக் கூற " இயக்ககாரரும் மோப்பம் பிடிச்சு கொழும்புக்கு வந்திட்டாங்கள். அவங்களிற்றையிருந்தும் தப்பேலாது. உன்ரை சித்தப்பாவின்ரை கடைவரை வந்திட்டாங்கள் எண்டால் எங்களிட்டை விரைவாய் வந்திடுவாங்கள்" என்று சொல்லி இதிகா கவலைப்பட்டாள்.

" சரி இனிப்படுப்பம். நாளைக்கு மிச்சத்தைப் பார்ப்பம்" என்று இதிகா கூற இருவரும் படுக்கைக்குச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினைந்து

பாடசாலைக்குச் சென்ற சிவகுமாருக்கு இருப்புக் கொள்ளவில்லை. சுந்தரம் வாத்தியாரின் மரணம் அவனை உலுப்பிவிட்டது. இந்த செய்தியை எப்படியாவது இதிகாவுக்கும் சுவந்திகாவுக்கும் தெரியப்படுத்த வேண்டு மென்று துடியாய்த் துடித்தான்.

பாடசாலையின் கந்தோருக்குச் சென்று அங்கிருந்த அலுவலகப் பெண்ணிடம் தனக்கு இன்றைக்கு அவசரமான தொலைபேசிவருமென்றும் வந்தால் உடனே அறிவிக்கச் சொல்லிவிட்டு வகுப்புக்குச் சென்றுவிட்டான்.

வகுப்பறையில் நிம்மதியாகப் படிப்பிக்க முடியவில்லை. கரும்பலகையில் அவனால் ஒழுங்காக எழுத முடியவில்லை.

இதிகாவையும் சுவந்திகாவையும் இலங்கையில் வைத்திருப்பது பாதுகாப்பான ஒன்றல்ல என்று அவன் மனம் சொல்லிக் கொண்டிருந்தது. எப்படி அவர்களை வெளியே அனுப்புவதென்றும் புரியவில்லை. சக ஆசிரியர்கள் கதைக்கும்போது இன்றைய நிலையில் தமிழ் அகதிகளை வரவேற்பதில் ஜெர்மனிதான் முன்னணியில் நிற்கிறது என்று கூறுவதை நினைவு கூர்ந்தான். ஆனால் ஜேர்மனிக்கு எப்படி அனுப்புவது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பில் பிள்ளைகளுக்கு வேலையைக் கொடுத்துவிட்டு ஜெர்மனிக்கு அனுப்புவதுபற்றியே சிந்தித்துக் கொண்டிருந் தான்.

இப்படி அவன் சிந்தித்துக் கொண்டிருந்தபோது அலுவலக அறையில் வேலைசெய்து கொண்டிருந்த பெண்வந்து சிவகுமாருக்குத் தொலைபேசி வந்திருப்பதாகச் சொல்ல பிள்ளை களை கதைக்காமல் இருந்து வேலை பார்க்கும்படி கூறிவிட்டு விரைவாக நடந்து போனான்.

மறுமுனையில் சாந்தாதான் எடுத்திருந்தாள். சாந்தா நிலைமையின் அவசரத்தை மிகச் சுருக்கமாகச் சொன்னாள். அத்தோடு சுந்தரம் வாத்தியாருக்கு நடந்தவிடயமும் தெரி யுமென்று கூறினாள். எப்படியாவது இதிகாவை வெளிநாட் டுக்கு அனுப்பவேண்டுமென்றும் அதுவும் ஜெர்மனி நல்ல தென்றும் கூறினாள். அத்தோடு முன்பு இதிகாவின் தம்பி சந்திரனை சுவந்திகாதான் ஜெர்மனிக்கு அனுப்பி வைத்ததா கவும் கூறினாள்.

இந்தச் செய்தி சிவகுமாருக்கு சந்தோசத்தைக் கொடுத் தது. அவன் சாந்தாவிடம் நீங்கள் பத்திரமாக இருங்கோ நான் மிச்சத்தைப் பார்க்கிறன் என்றான். சாந்தாவிடம் வெள்ளிக் கிழமை எடுக்கும்படி கூறிவிட்டு போனை வைத்தான்.

இப்போ அவனுக்கு முன்னால் உள்ள பிரச்சினை எப்படி யாவது சுவந்திகாவைத் தொடர்பு கொள்ளவேண்டும். திரும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் அலுவலகத்திற்குச் சென்று தனது நண்பனுக்குக் கோல் எடுத்து சுவந்திகா அங்கை வந்தால் தன்னுடைய பாடசாலை எண்ணைக் கொடுத்து அவசரமாக இன்றைக்கு அல்லது நாளைக்கு தொலைபேசி எடுக்கும்படி கூறச் சொன்னான்.

இப்படிக் கூறிவிட்டு வகுப்பறைக்கு வந்த அவன் மிகவும் குழம்பிப்போய் இருந்தான்.

பாடசாலை முடிவதற்கு அரை மணித்தியாலம் முன்பு திரும்பவும் அவனுக்கு அழைப்பு வந்திருந்தது. வேகமாக அலுவலகத்தை அடைந்தவன் மறுபக்கத்தில் சுவந்திகா என்பதைக் கேட்டு மிகவும் சந்தோசப்பட்டு அதற்குள்ளாகவா? என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

தொலைபேசியில் வந்தவள் சுவந்திகா. எல்லாம் சொல்லி வைத்தாற்போல் நடைபெறுவது அவனது பதட்டத்தைக் குறைத்தது.

தொலைபேசியின் மறுபக்கத்தில் வந்த சுவந்திகா அவசர அவசரமாக தன்னுடைய பிரச்சினைகளைக் கூறிக் கொண்டிருந்தாள். தன்னுடைய பிரச்சினைகள் வேறுவடிவ மெடுத்து விட்டதால் தான் வெளிநாட்டுக்குச் செல்ல முடிவெடுத்து விட்டதாகக் கூறினாள். ஒரு அரசியல்வாதியின் உதவியோடு தான் செல்கிறேன் என்றும் கூறினாள்.

சிவகுமார் சுந்தரம் வாத்தியார் மரணமானதையும் இதிகா இயக்கத்தைவிட்டு வெளியே வந்துவிட்டதையும் இனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிகாவை இங்கு வைத்திருக்க முடியாது என்றும் சந்திரனை அனுப்பியதுபோல் அவளையும் அனுப்ப முடியுமா என்று கேட்டான்.

அதற்கு சுவந்திகா தானும் ஜெர்மனிக்குத்தான் செல்வதாகவும் இதிகாவையும் கூட்டிச் செல்ல முயற்சிப்பதாகவும் கூறிவிட்டு நாளை இதே நேரம் தொலைபேசி எடுப்பதாகவும் கூறிவிட்டு தொலைபேசியை வைத்துவிட்டாள்.

மீண்டும் வகுப்பறைக்கு வந்து பதட்டம் தணிந்து பாடத்தைத் தொடங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினாறு

சிவகுமாருடன் தொலைபேசி கதைத்துவிட்டு வந்த சுவந்திகா முன்பு சந்திரனை ஜெர்மனிக்கு அனுப்பி வைத்த தன் நண்பரோடு தொடர்பு கொண்டாள். அந்த நண்பரோடு இதிகாவின் விடயத்தையும் கூறி தானும் போக விரும்புவதாகக் கூற அவர் இப்போ நிலைமை கொஞ்சம் கடினமாக உள்ளது. முயற்சிக்கிறேன். நீங்கள் நாளை தொடர்பு கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு போனை வைத்துவிட்டார்.

பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்த சிவகுமாருக்கு இதிகாவையும் சுவந்திகாவையும் எப்படியாவது எவ்வித பிரச்சினையும் இல்லாமல் அனுப்பிவிடவேண்டுமென்ற பதட்டம் மனதை நிம்மதியாக இருக்கவிடவில்லை.

சிவகுமாருடன் கதைத்த சாந்தா அதன்பின் அறைக்குச் சென்று இதிகாவிடம் முழுவிடயங்களையும் கூறி ஜெர்மனிக்குப் போவதற்குத் தயாராகுமாறு கூறினாள்.

இதிகாவுக்கு எப்படியாவது சிவகுமாரோடு ஒரு தடவை கதைத்துவிடவேண்டு மென்ற ஆசை உருவாகி இருந்தது. தன்னுடைய விருப்பத்தைச் சாந்தாவிடம் கூறினாள்.

அவளின் நிலையைப் பார்க்கச் சாந்தாவுக்குப் பாவமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. " சரி நாளைக்கு முயற்சிப்பம்" என்று கூறினாள்.

அடுத்த நாள் சிவகுமாருக்குத் தொலைபேசி எடுக்க புறப்பட்ட சாந்தா இதிகாவையும் வரச் சொல்லி இருவருமாகச் சென்றனர். தொலைபேசி இருக்குமிடம் அவர்களுடைய வீதியிலிருந்து இரு வீதிகளுக்கு அப்பாலிருந்தது. மெல்ல மெல்ல இருவரும் நடந்து சென்றனர். இதிகாவைப் பொறுத்தவரை இயக்கத்தின் கண்களிலும் அமீனாவின் கண்களிலும் படக் கூடாதென்பதே. வேகமாக நடந்து சென்று தொலைபேசிஉள்ள இடத்திற்குச் சென்றுவிட்டனர்.

சாந்தா ரெலிபோனை எடுத்து சிவகுமாரின் பாடசாலை இலக்கத்தைச் சுழற்றினாள்.

சிறிது நேரத்தில் சிவகுமார் தொலைபேசியில் வந்தான். அவன் சாந்தாவிடம் சுவந்திகாவோடு கதைத்த விடயங்களைக் கூறி சுவந்திகாவும் ஜெர்மணிக்குப் போவதாகக் கூறி அவவோடு இதிகாவும் போகட்டும் என்று கூறினான்.

கொஞ்சம் பொறுங்கோ என்று கூறிய சாந்தா தொலை பேசியை இதிகாவிடம் கொடுத்தாள்.

இதிகா கணநேரம் எதுவும் கதையாமல் அவன் குரலைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் தொடர்ச்சியாக கலோ.. கலோ என்று சொல்லிக் கொண்டேயிருந்தான்.

"நான் இதிகா கதைக்கிறன்" என்றாள் இதிகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமார் சிறிது நேரம் ஸ்தம்பித்துவிட்டான். நீண்ட நாட்களாகக் கேட்காத குரல். ஒருமாதிரிச் சமாளித்துக் கொண்டு " ஒண்டுக்கும் பயப்பிடாதை இதிகா. எல்லாம் ஒழுங்காய் நடக்கும். நாளைக்கு இந்த நேரம் சாந்தாவைப் தொலைபேசி எடுக்கச் சொல்லு" என்று கூறிவிட்டு தொலைபேசியை வைத்து விட்டான்.

தொலைபேசியை வைத்த இதிகா அவன் கூறியதை சாந்தாவுக்குக் கூறிவிட்டு நிமிர்ந்தபோது தொலைபேசிபெட்டிக்கு வெளியே அமீனா யாரோடோ கதைத்துக் கொண்டிருப்பதை அவதானித்தாள். மெதுவாக அதனை சாந்தாவுக்குக் கூறிவிட்டு அடுத்து என்ன செய்வதென்று இருவரும் யோசித்தனர். சாந்தா மெதுவாக வெளியில் வந்து ஓட்டோ ஒன்றைக் கைகாட்டி மறிக்க அது தொலைபேசிபெட்டிக்குப் பக்கமாக நின்றது. இதிகா வேகமாக வெளியே வந்து ஓட்டோவுக்குள் ஏறிவிட்டாள்.

ஆனால் இதிகா ஏறும் போது அமீனாவும் கவனித்து விட்டாள். அமீனா நகர்ந்து ஓட்டோவுக்கு அருகில் வர ஓட்டோ உறுமிக்கொண்டு புறப்பட்டுவிட்டது.

அமீனா கதைத்துக் கொண்டு நின்றது அவளின் சகோதர னுடன்தான். அவன் உசாரடைந்து " யார் அந்த ஓட்டோவில்?" என்று கேட்க " அது அந்தப் பெட்டைதான்" என்று அமீனா கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அடச் சீ அவளைத்தானே நானும் தேடிக் கொண்டி ருக்கிறன்" என்று வாய் தவறி ரகீம் என்கின்ற வல்லவன் கூற அவனை மீண்டும் தீவிர ஐயத்தோடு பார்த்தாள் அமீனா.

" ஏன் நீ அவளைத் தேடிறாய்?" சந்தேகத்தோடை சகோதரனைப் பார்த்து அமீனா கேட்டாள்.

அவனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. கடை சியில் அவன் உண்மையைக் கூறவேண்டியதாகப் போயிற்று. அமீனா அவனைப் புழுவைப் பார்ப்பதுபோல் பார்த்தாள்.

" எங்கடை இனத்தை 24 மணித்தியாலத்திற்குள் வெளி யேறச் சொன்னவங்களோடை ஆள்தானா நீ?" என்று அவனைப் பார்த்து இளக்காரமாகக் கூறினாள்.

அவளைச் சமாதானப்படுத்திய அவன் இதிகா யார் என்பதையும் ஏன் அவளைத் தேடுகிறேன் என்பதையும் விளக்கமாகக் கூறினான். அத்தோடு அவள் பெயர் கமலினி என்றும் கூறினான்.

அவன் சொல்வதைக் கேட்டு சிரித்த அமீனா " இனி அவளைக் கண்டுபிடிக்க நான் உதவமாட்டன். உன்னைவிட அவள் எவ்வளவோ மேல். நீ ஒரு இனத்துரோகி" என்று கத்தி னாள் அமீனா.

" மெல்லமாய்க் கதை. அவள் ஒரு துரோகி. அவளை வெளியிலை விட்டால் இயக்கம் பற்றிய எல்லாச் செய்திக ளையும் காட்டிக் குடுத்திடுவாள். விடுதலைப் போராட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிசுபிசுத்துப் போய்விடும்." என்று அவன் கூற

" அவள் செய்ததுதான் சரி. உங்கடை இயக்கம் அங்கை உள்ளுக்குள்ளை எத்தனைபேரைக் கொலை செய்யுது. எங் களை எந்தக் காரணமுமில்லாமல் உடுத்த துணியோடை வெளியேற்றிச்சுது. அவளுக்கு இதுகள் பிடிக்காமல் இருந்திருக் கலாம். அதுதான் அவள் தப்பி வந்திருப்பாள்." என்று அமீனா அவளுக்காக வாதிட்டாள்.

" அவளை எப்பிடியும் பிடிக்கச் சொல்லி தலைமை கூறியிட்டுது" என்று அவன் கூற " அண்ணனென்றும் பார்க்க மாட்டன். அந்தப் பெண்ணை நீ இனிப் பின் தொடர் ந்தால் காவல் துறையிலை உன்னைக் காட்டிக் குடுப்பன்" என்று அவள் கூறியதும் ரகீம் என்கின்ற வல்லவன் திடுக்கிட்டுவிட்டான்.

நிலைமையின் தீவிரம் அவனுக்குப் புரிந்தது தான் தெரியாத்தனமாக எல்லாவற்றையும் தங்கையிடம்கூறிய தவறைப் புரிந்து கொண்டான். தன் தங்கைக்கு யாவும் தெரியும் என்றால் முதல் வேலையாகத் தன் தங்கையைப்போட்டுத் தள்ளிவிடுவார்கள். அத்தோடு தன்னுடைய இந்தப் பொறுப்பற்ற செயலால் தன்னையும் போட்டுத் தள்ளி விடுவார்கள் என்று எண்ணிய வல்லவன் என்ன செய்வதென்று அறியாது குழம்பினான். இயக்கத்தைச் சேர்ந்த பலர் இங்கு ஒற்றர்களாக உலவுகிறார்கள் என்பது அவனுக்குத் தெரியும் ஆனால் அவர்கள் யாரையும் அவனுக்குத் தெரியாது. அதே போல் அவர்களுக்கும் அவனைத் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை வரும்போது அவர்களில் ஒருவருக்கு அவன் படம் அனுப்பப்பட்டுத் தண்டனையும் கூறப்படும்.

தண்டனை உடனே போட்டுத் தள்ளும்படி இருக்கும் அல்லது கைது செய்யப்பட்டு களத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணையின் பின் மரண தண்டனை விதிக்கப்படும்.

இப்போ என்ன செய்வது?

அமீனா அவனை எச்சரித்துவிட்டு புறப்பட்டுவிட்டாள். அமீனா போவதை தூரத்தில் உள்ள ஓட்டோ ஒன்றிலிருந்து இரண்டு கண்கள் அவதானித்துக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினேழு

சிவகுமாருடன் கதைத்துவிட்டு அமீனாவின் கழுகுப் பார்வையிலிருந்து தப்பி வந்த இதிகாவும் சாந்தாவும் நேரே வீட்டுக்குப் போகாமல் அப்படியே ஓட்டோவில் கொட்டாஞ்சேனையிலுள்ள சிவன் கோயிலுக்குச் சென்றனர்.

நேரே வீட்டுக்குப் போனால் சிலவேளை அமீனா தொடர்ந்து வந்தாலும் என்று நினைத்து அவளுக்குப் போக்குக் காட்டுவதற்காகச் சிவன் கோயிலுக்குச் சென்றிருந் தனர்.

கருங்கல்லால் முழுமையாக அமைக்கப்பட்ட அந்தச் சிவன் ஆலயம் மிக அழகானது. பெரும்பாலான கொழும்புத் தமிழர்கள் வெள்ளிக் கிழமைகளில் இங்கு வருவார்கள். சக்திமிக்க ஆலயம் என்று கூறுவார்கள்.

அவர்கள் சிவன் கோயில் வாசலில் இறங்கும்போது "இதிகா" என்ற குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள் இதிகா.

சாந்தாவும் பயந்துவிட்டாள். பயத்தோடு திரும்பிய இதிகாவுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. எதிரே நின்றது அவளின் அண்ணி சுவந்திகாதான். சாந்தாவும் அவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்கண்டு கொண்டாள்.

இருவரும் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு சுவந்திகாவை நெருங்கினர். சுவந்திகா இதிகாவைக் கட்டிப்பிடித்து ஆசுவா சப்படுத்தினாள்.

இதிகாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. சுவந்திகா வும்தான் அழுதாள். இருவரையும் பார்த்துக் கொண்டிருந்த சாந்தாவுக்கு வியப்பிற்குமேல் வியப்பாக இருந்தது.

“ சிவகுமார் எல்லாம் சொன்னவர். ஜெர்மனிக்குப் போற ஒழுங்குகள் செய்து கொண்டிருக்கிறன். எந்த நேரமும் புறப்படத் தயாராக இரு. அது சரி என்ன இந்தப் பக்கம்." என்று கேட்டு விட்டுச் சாந்தாவைப் பார்த்து “ இது சாந்தாதானே .." என்றாள். சாந்தா மௌனமாகத் தலையாட்டினாள்.

இதிகா நடந்தவிடயங்களை மிகச் சுருக்கமாகச் சொல்லி அமீனா பற்றியும் கூறி அவளிடமிருந்து தப்பிக் கொள்ளவே இங்கு வந்ததாகவும் கூறிவைத்தாள்.

“ அது சரி.. உன்னட்டைப் பாஸ்போட் இருக்கா?" என்று கேட்டாள் சுவந்திகா.

“ஓம் எடுத்திட்டன். எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை" என்று கூறினாள் இதிகா.

“சரி கனநேரம் இங்கை நில்லாமல் கெதியா வீட்டுக்குப் போங்கோ “ என்று கூறிவிட்டுச் சுவந்திகா சடுதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்துவிட்டாள்.

இதிகாவும் சாந்தாவும் ஆலயத்திற்குள் சென்று வணங்கினார்கள். இதிகா மட்டுமே கும்பிட்டாள். சாந்தாவுக்கு இதிலெல்லாம் நம்பிக்கையில்லை. ஒரு ஓரமாக நின்று இதிகா சுற்றிக் கும்பிட்டு வரும்வரை காத்திருந்தாள்.

அப்போது அங்கு வந்த ஒரு இளைஞனை எங்கோ பார்த்ததுபோல் இருந்தது. அவன் ஒரு போட்டோவைக் கையில் வைத்துக் கொண்டு யாரையோ தேடிக் கொண்டிருந்தான். அப்போது கும்பிட்டுவிட்டு வந்த சாந்தாவை இடைமறித்து தன்னிடமுள்ள போட்டோவைக் காட்டி " இந்தப் பெண்ணை எங்காவது கண்டிருக்கிறீர்களா?" என்று அவன் கேட்டான். போட்டோவை உற்றுப்பார்த்த சாந்தா மனதிற்குள் திடுக்கிட்டு விட்டாள். அவன் காட்டிய போட்டோ இதிகாவினுடையது என்பதைக் காட்டிக் கொள்ளாமல் "இல்லை" எனக் கூறி, அவனை விட்டு நகர்ந்து இதிகா நிற்குமிடத்திற்கு விரைந்தாள். அவளின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு கோயிலை விட்டு வெளியேறினாள் சாந்தா.

அவளின் செய்கைகளால் குழம்பிப்போன இதிகா "என்ன நடந்தது? ஏன் என்னை இழுக்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே போனாள். சாந்தா எந்தப் பதிலும் கூறாமல் வெள்ளவத்தை போகும் பேருந்தில் ஏறிய பின்புதான் பெருமூச்சு விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நல்லவேளை தப்பியிட்டம். அந்தக் கோயிலிலை அந்த வாலிபன் ஒரு போட்டோவைக்காட்டி இவவைத் தெரியுமா? என்று கேட்டான். அவன் காட்டின போட்டோ உன்ரைதான் இதிகா." என்றாள் சாந்தா.

இதிகா கலங்கிப்போனாள்.

"இயக்கம் கொழும்பிலை என்னைத் தேடத் தொடங்கி யிட்டுது. இனிக் கவனமாக இருக்கவேணும்" என்று இதிகா சொன்னாள்.

"அதுக்கிடையிலை நீ ஜேர்மனிக்குப் போயிட்டியெண் டால் எல்லாப் பிரச்சினையும் முடிஞ்சிடும்." என்றாள் சாந்தா.

வெள்ளவத்தையில் இறங்கிய இருவரும் வேகமாக அறையை நோக்கி நடக்கத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினெட்டு

சுவந்திகாவை எப்படியும் கைது செய்துவிட வேண்டுமென்பதில் காவல்துறையினர் வேகமாகச் செயற்பட்டார்கள். இதையறிந்து கொண்ட சுவந்திகாவின் தாய் அது பற்றிய செய்திகளை மகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தாள்.

சுவந்திகாவின் தாய்க்குக் கணவன் நடந்து கொண்ட செய்கைகள் எதுவுமே பிடிக்கவில்லை. தந்திரமாகச் சுவந்திகாவையும் சுதந்திரனையும் அழைத்து வந்து தங்கள் கண் எதிரிலேயே சுதந்திரனைக் கொன்றதை அவள் தாயுள்ளம் ஏற்க மறுத்தது. தனது ஒரே பெண்ணான சுவந்திகாவின் வாழ்க்கையைச் சீரழித்தமையை அந்தத் தாயுள்ளம் ஏற்றுக் கொள்ளாமல் தவித்தது. அவளைப் பொறுத்தவரை சுவந்திகா செய்தது சரி என்பதே முடிவாக இருந்தது.

காவல்துறையினர் அவளைக் கேட்டபோது சுவந்திகா கொல்லவில்லை என்றே கூறினாள். ஆனால் அரசியலில் சுவந்திகாவின் அப்பாவின் இடத்திற்கு வர இருந்த அவந்திகாவின் மாமனார் தான் காவல் துறையினரிடமும் ஊடகங்களிடமும் சுவந்திகாதான் கொலை செய்தாள் என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் புத்திசாலித்தனமாகச் சுவந்திகா யாழ்ப்பாணம் சென்றமையால் யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

சுவந்திகாவின் மாமனார் பியசேன சுவந்திகாவை இயக்கத் தோடு தொடர்புடையவள் என்று கூறி அவளைக் கைது பண்ணுவதில் மிகவும் வேகமாகச் செயற்பட்டார். இதன் மூலம் சிங்களமக்களின் வாக்குகளை சுலபமாகப் பெற்று விடலாம் என்பது அவரது கனவாக இருந்தது. இதற்கு அவர் சில புத்த பிக்குகளையும் தன் பக்கம் சேர்த்துக் கொண்டார்.

இயக்கங்களின் உளவியல் பிரிவைச் சேர்ந்தவர்களும் கொழும்புப் பிரதேசங்களில் உலவித் திரிந்த காலம்.

இந்தக் காலம் 1993 ஆம் வருசம். இலங்கையின் பிரபலமான ஒரு அமைச்சரால் இனரீதியான செயற்பாடுகளும் தமிழ்ப் பகுதிகளில் பெரும் அழிவுகள் ஏற்பட்டமையும் இயக்கங்களின் மத்தியில் கோபத்தை உருவாக்கி இருந்தது.

எண்பதுகளிலும், தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் தமிழ், சிங்கள மக்களால் அதிகமாக உச்சரிக்கப் பட்ட பெயர்களில் பிரபலமாகவிருந்த பெயர்தான் அந்த அமைச்சரின் பெயர்.. 1977-1988 வரை இலங்கை அரசியலில் மிகவும் சக்தி மிக்க அமைச்சர்களில் இவரும் ஒருவர்.

1980 களில் அப்போதைய ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர். அடுத்த ஜனாதிபதியாக வரவேண்டும் என்ற ஆசையில் இருந்தவரும் இந்த அமைச்சர்தான். பாதுகாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் பதவியில் இருந்து, தமிழரின் போராட்டத்தை நசுக்கப் பாடுபட்டவர். அதனால் பல ஆயிரம் தமிழர்களின் இரத்தம் இவரின் கைகளை நனைத்திருந்தது. இயக்கங்களின் தோற்றத்திற்கும் அவற்றின் வளர்ச்சிக்கும் இவரும் ஒரு முக்கிய காரணியாக இருந்தார்.

1988இல் அந்த அமைச்சரின் கணவான ஜனாதிபதிப் பதவி கைகூடாமல் வேறு ஒருவர் ஜனாதிபதியானவுடன் கட்சியைவிட்டு வெளியேறி புதிய கட்சியை உருவாக்கிக் கொண்டார்.இது நடந்தது 1991 ஆம் ஆண்டு. ஜனாதிப தியுடனான முரண்பாடு உச்சக் கட்டத்தை எட்டியிருந்த காலமும் இதுதான். இவர்களின் புது கட்சியின் உருவாக்கத் தையும், அவர்களின் அசுர வளர்ச்சியையும் ஜனாதிபதி மட்டுமல்ல தமிழர் தரப்பும் மிகவும் உன்னிப்பாக அவதானித்து கொண்டிருந்தனர். இந்த அமைச்சர் யாழ் நூலக அழிப்பின் சூத்திரதாரி என்பதும் நாடறிந்த விடயமே. அன்று பொர ளையில் மாலை கூட்டம் ஒன்றை முடித்த பின், அடுத்த கூட்டம் கிருலப்பனையில் நடைபெற இருந்தது. முதலில் பொரளையில் தாக்குதலுக்கான முயற்சி கைகூடாத நிலையில், கிருலப்ப னையில் முயற்சிக்கத் தீர்மானிக்கப்பட்டது. அங்கு இரவு 8.00 மணிபோல் கூட்டம் நடந்து கொண்டிருந்த நேரம் இயற்கையும் அவர்களுக்கு கை கொடுத்தது.

ஆம் ! திடீர் என பெரும் மழை ஒன்று பெய்ய ஆரம் பித்ததும் மக்கள் மேடையை நோக்கி நகரத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைச் சாதகமாகக் கொண்டு அவன் மேடையை நோக்கி மக்களோடு மக்களாக நகர்ந்தான். 15 மீற்றர் இடைவெளியில் இலக்கை நெருங்கியதும், கண்ணிமைக்கும் நேரத்தில் தனது கைத் துப்பாக்கியை எடுத்த அந்த வீரன் எந்தவித பதட்டமும் இல்லாது மூன்று குண்டுகளை அந்த முன்னாள் அமைச்சரின் நெஞ்சில் துல்லியமாக இறக்கிய பின், தன்னைப் பிடிக்க வந்த, மெய்ப் பாதுகாவல் அதிகாரியை தாக்கி விட்டுத் தப்பி வெளி யில் ஓடினான்.

சுவந்திகாவின் மாமன் பியதாச கொல்லப்பட்ட முன்னாள் அமைச்சரின் வலது கையாகவே இருந்தார். இந்தச் செல்வாக்கை வைத்துக் கொண்டு சுவந்திகாவை எப்படியும் சிக்கவைத்து விடவேண்டு மென்று துடித்துக் கொண்டிருந்தார். இவர்கள் இப்படி நினைத்தாலும் காலம் வேறுமாதிரிக் காய்களை நகர்த்தத் தொடங்கியிருந்தது.

யாருமே எதிர்பார்க்கவில்லை. கொழும்பு மக்கள் பதட்டத் தில் நடுங்கிக் கொண்டிருந்தனர்.

மக்கள் அங்குமிங்கும் சிதறி ஓடிக் கொண்டிருந்தனர். ஒரே அழுகைச் சத்தமாக இருந்தது. இராணுவச் சிப்பாய்களும் பொலிசாரும் மக்களை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தனர்.

அடுத்தநாள் பத்திரிகைச் செய்திகளில் முன்னாள் அமைச் சர் படுகொலை செய்யப்பட்ட செய்தி தலைப்புச் செய்தியாக இருந்தது. இந்தச் செய்தி வந்தபின் சாந்தாவும் இதிகாவும் அறையைவிட்டு வெளியே வரவில்லை. சுவந்திகா சிங்களப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாதலால் அவள் வெளியே சென்று இந்தக் களேபரத்தில் எப்படியாவது நாட்டைவிட்டுப் போய்விட வேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டாள். வேறு ஒரு பெயரில் கடவுச் சீட்டும் எடுத்துவிட்டாள். வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கும் தன் நண்பரைத் தொடர்பு கொண்டு இதிகாவைப்பற்றிக் கூறி இருவரும் மிக விரைவாகச் செல்ல ஒழுங்கு செய்யுமாறு கேட்டுக் கொண்டாள்.

காரியம் வேகமாக நடந்து கொண்டிருந்தது.

மேமாதம் முதலாம் திகதி செல்லலாம் என்ற செய்தி அவளுக்கு வந்தபின்பு இதை எப்படியாவது சிவகுமாருக்குத் தெரிவித்து இதிகாவைத் தயார் செய்ய வேண்டுமென்று மனதுள் நினைத்துக் கொண்டாள்.

தற்போது வெளியில் போவதும் சிவகுமாரைத் தொடர்பு கொள்வதும் இலகுவாக இல்லை. அந்த நிகழ்வுக்குப் பின் இரு நாட்கள் கொழும்பு நகரத்துப் பாடசாலைகளை மூடுவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. அதனால் சிவகுமாரின் பாட சாலையும் மூடப்பட்டுவிட்டது. இனி சிவகுமாரைத் தொடர்பு கொள்வதென்றால் சிவகுமாரின் நண்பன் வேலை செய்யும் இடத்திற்குத்தான் செல்லவேண்டும்.

மறுநாள் காலை துணிந்து புறப்பட்டாள் சுவந்திகா.

காரியாலயத்திற்குச் சென்று சிவகுமாரிடம் கொடுக்குமாறு கடிதத்தைக் கொடுத்துவிட்டு வேகமாகத் தங்கியிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திற்கு வந்துவிட்டாள். அந்தக் கடிதத்தில் தன்னைத் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டிருந்தாள்.

பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டிலிருந்த சிவகுமாருக்கு பொழுது போக மறுத்தது. வானொலியைத் திருப்பிவிட்டுச் செய்திகளைக் கேட்டுக் கொண்டிருந்தான். இன்று மாலை ஆறு மணி தொடக்கம் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்திருப்ப தாக மணிக்கொரு தடவை கூறிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அவசரஅவசரமாக அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தான் அவன் நண்பன்.

" மச்சான் வெளியிலை சரியான பிரச்சினை. தமிழாக்க ளைத் தேடித் தேடிப் பிடிக்கிறாங்கள். வீடு வீடாய் தேடுதல் நடத்திறாங்களாம். சிலவேளை இங்கையும் வருவாங்கள்." என்று மூச்சு இரைக்க இரைக்கக் கூறிவிட்டு அமர்ந்தான்.

" அவ்வளவுக்கு நிலைமை மோசமே?" என்று கேட்டான் சிவகுமார்.

" மச்சான் மறந்து போனன். இண்டைக்கு இந்த அமளி துமளியுக்கை சுவந்திகா கந்தோருக்கு வந்திருந்தாள். உன்னட் டைக் குடுக்கச் சொல்லி ஒரு கடிதத்தையும் தந்துவிட்டு வேகமாகப் போயிட்டாள்" என்றான் சிவகுமாரின் நண்பன்.

கடிதத்தை வாங்கிய சிவகுமார் அவசரஅவசரமாக அதைப் படித்தான். அந்தக் கடிதத்தில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அன்புள்ள சிவகுமார்,

நாட்டின் நிலைமை மிகவும் மோசமாகிக் கொண்டு செல்கிறது. கொலைகள் சர்வ சாதாரணமாக இரு பக்கங்களிலும் தாராளமாக நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு பக்கமும் உயிர்களின் பெறுமதியை உணர்வதாகத் தெரியவில்லை. இப்படியான நிகழ்வுகளால் தமிழ் மக்களின் போராட்டமானது ஒரு பயங்கரவாதப் போராட்டமாக அரசாங்கத்தால் பிரசாரப் படுத்துகிறது. இந்தப் பிரச்சாரம் உள் நாட்டில் மட்டுமல்ல வெளி நாடுகளிலும் மேற்கொள்ளப்படுகிறது. ஒரு நியாயமான போராட்டம் இப்படிக் கொச்சைப்படுத்தப்படுவதற்கு நடை பெறும் நிகழ்வுகள் சாட்சியமாகின்றன. அப்பாவித் தமிழ் மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படப் போகிறார்கள். 1983 இல் நடந்ததுபோல் அரச பயங்கரவாதம் மீண்டும் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் நிரம்ப உண்டு. நீங்கள் கவனமாக இருக்கவேண்டும்.

ஜெர்மனிக்குப் பயணமாவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. மேமாதம் முதலாந்திகதி செல்வதற்கான ஒழுங்கினை எனது நண்பரும் பயண முகவருமான மனிதர் ஒழுங்கு செய்துவிட்டார். இதிகாவுக்கும் சேர்த்தே இவ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆதலால் இந்த விடயத்தை இதிகாவுக்குத் தெரியப்படுத்தி அவ இருக்கும் இடத்தின் முகவரியையும் எனக்குத் தெரியப்படுத்தவும். நான் அங்கு சென்று இதிகாவை அழைத்துச் செல்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கடிதத்தை படித்ததும் எரித்து அழித்துவிடவும்.

சுவந்திகா

என்றிருந்தது.

அப்போது கதவு தட்டிச் சத்தம் கேட்டது. சிவகுமார் உடனே கடிதத்தைக் கசக்கி உருண்டையாக்கி வாயிலிட்டு விழுங்கிக் கொண்டான்.

நண்பன் சென்று கதவைத் திறந்தான்.

அவர்கள் எதிர் பார்த்ததுபோல் இராணுவமே வாசலில் நின்றது.

அவர்களைப்பற்றி விசாரித்தார்கள்.

அவர்கள் தாங்கள் பொலிசில் பதிந்த பதிவைக் காட்டினார்கள். சிவகுமார் தான் ஆசிரியராக இருப்பதாகவும் அவன் நண்பன் அரசாங்க காரியாலயத்தில் வேலை செய்வதாகவும் கூறினார்கள்.

உள்ளே நுழைந்த இராணுவத்தினர் அறையை சல்லடை போட்டுத் தேடினர். அவர்களுக்கு எதுவுமே அகப்படவில்லை.

போய்விட்டார்கள். சிவகுமாருக்கும் நண்பனுக்கும் போன உயிர் திரும்பி வந்ததுபோல் இருந்தது.

" என்ன மச்சான் கடிதத்திலை இருந்தது. அப்பிடியே விழுங்கிப்போட்டாய்." என்று நண்பன் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அவங்கள் வரேக்கை வைச்சிருந்தனெண்டால்.. இப்ப நாங்கள் அவனின்ரை ஜீப்பிலைதான் இருந்திருப்பம்." என்றான் சிவகுமார்.

சிவகுமார் தொடர்ந்தான். " அது மச்சான், சுவந்திகா ஜெர்மனிக்குப் போக எல்லாம் தயாராம். அதைத்தான் சொல் லியிருக்காள்" என்று இதிகா சுவந்திகாவோடு போகப் போறதை மறைத்து விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தொன்பது

அமைச்சரின் (முன்னாள்) கொலை கொழும்பு நகரை ஒரு உலுப்பு உலக்கிவிட்டது என்பதே உண்மை. தமிழர்களின் விடுதலை இயக்கங்கள் கொழும்பு நகரில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டன என்பதற்கு இது ஒரு சான்றாக விருந்தது.

இதனால் கெடுபிடி அதிகமாகவே இருந்தது.

கொழும்பு நகரில் வெளிநாடு செல்வதற்கு விடுதிகளில் தங்கியிருந்த பல அப்பாவி வாலிபர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு ஆளாகினர். இத்தகைய பின் விளைவுகளைப்பற்றி எந்த இயக்கமும் கருத்தில் கொண்டதாகவே தெரியவில்லை. அவர்களைப் பொறுத்தளவில் தாங்கள் நினைத்தவற்றை நிறைவேற்றுவதும் அதைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கொள்வதும்தான். மக்களின் துன்பங்கள் அவர்களுக்குத் தெரிவதில்லை. " உங்களுக்காகத்தானே உயிரைக் கொடுக்கிறோம்" என்ற உணர்ச்சிக் கொந்தளிப்பு நிறைந்த வசனங்களைப் பேசுவதோடு அவர்களின் கடமை முடிந்துவிடுவதாக அவர்கள் கருதிக் கொண்டனர்.

இரு தினங்களாக ஊரடங்கு தொடர்ந்தது. இதிகாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தாவும் வெளியில் வரவேயில்லை.

அன்று அமீனாவும் வல்லவனும் கதைத்துக் கொண்டிருந்தபோது வேறு இரு கண்கள் அவர்களை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தன என்பது உங்களுக்குத் தெரியும்.

அந்தக் கண்களுககுரிய இளைஞனும் இயக்கத்தின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவனே. அவன் அவர்களைத் தொடர்ந்து கொண்டேயிருந்தான்.

வல்லவன் பற்றிய விடயம் அமீனாவுக்கும் தெரிந்து விட்டதென்ற செய்தியை அவன் மேலிடத்திற்கு அனுப்பியிருந்தான். மேலிடம் ரகீம் என்ற வல்லவனை விசாரணைக்காக அழைத்திருந்தார்கள்.

அதற்குள் முன்னாள் அமைச்சரின் கொலையால் கொழும்பின் சூழல் தலைகீழாகிவிட்டது.

இதிகாவும் சாந்தாவும் மனப்பயத்தோடு அறைக்குள் முடங்கிக்கிடந்தனர்.

" இப்ப ஏன் அமைச்சரை கொலை செய்தவங்கள்." என்றாள் இதிகா.

" ஏதும் காரணம் இல்லாமல் செய்யினமே?" என்றாள் சாந்தா. சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தனர்.

" மெய்யே இதிகா எங்கடை போராட்டம் சரி என்று நினைக்கிறியளே?" என்று கேட்டாள் சாந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நான் இயக்கத்துக்குள்ளை போக முதல் சரியென்றுதான் நினைச்சன்." என்று சலிப்புத் தட்டினாள் இதிகா.

" அப்ப இப்ப பிழையென்று நினைக்கிறீரோ?" என்று சாந்தா கேட்க, சிறிது நேரம் யோசித்த இதிகா

" பிழை என்று சொல்ல மாட்டன். ஆரம்பிச்சவிதமும் நடக்கிற முறையும் பிழையென்றுதான் நினைக்கிறன். சிங்கள ஏகாதிபத்தியம் எந்தவிதமான இரக்கமும் இல்லாமல் பௌத் தத்தை முன்னிலைப்படுத்தி தமிழ்மக்களை இரண்டாம் நிலைக்குத் தள்ளும்போது பார்த்துக் கொண்டிருக்க முடியாது. போராடித்தான் அவர்களைத் தடுக்க முடியும்." என்று இதிகா சொன்னதும் " புதுப்புதுச் சொல்லெல்லாம் பாவிக்கிறீர். அப்ப ஆயுதப் போராட்டம் பிழையே?" என்று சாந்தா கேட் டாள்.

" உந்தச் சொல்லெல்லாம் சிவகுமாரிட்டையிருந்து கள வாடினதுதான். ஆயுதத்தாலை அடக்குமுறை செய்யிறவைக்கு முன்னாலை காந்திமாதிரி வெறுங்கையோடை எப்பிடிப் போறது.?" என்று இதிகா கேட்டாள்.

சாந்தா மெல்லச் சிரித்தபடி " காந்தி போனவர்தானே!" என்றாள்.

" சரி, இறுதியில் காந்திக்கு என்ன நடந்தது. எந்த ஆயு தத்தை வெறுத்தாரோ அதே ஆயுதத்தால்தானே உயிரிழந்தார். சாந்தா நான் இயக்கத்தைவிட்டு வெளியே வந்தது நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயந்ததால் அல்ல. பயம் என்ற ஒன்றுக்கு அடிமையாக இருந்திருந்தால் நிச்சயம் இயக்கத்திற்குப் போயிருக்கமாட்டேன். ஆனால் போனபின் நான் பயந்தேன். என் உயிர் போய்விடும் என்பதற்காகவல்ல. எந்த மக்களை நீயும் நானும் நேசிக்கிறோமோ அந்த மக்களின் உயிர்கள் தவறான நடவடிக்கைகளால் போய்விடுமே என்கின்ற பயம். சாந்தா உமக்குத் தெரியுமா பயம்தான் ஒரு சாதாரணனை வீரனாக்குகிறது. காட்டில் ஒரு கொடிய விலங்கைக் கண்டதும் முதலில் பயம்தான் வருகிறது. ஆனால் தப்புவதற்கு வேறு வழியில்லை என்றதும் அதற்கு எதிராகப் போராடவேண்டுமென்ற துணிவு வருகிறது. அவன் வீரனாகிறான். என்னினத்தை என்னினமே வீரம் என்ற பெயரில் தம்மைத் தாமே காப்பாற்ற வேண்டுமென்ற சுயநலத்தால் கொலை செய்கிறபோது அதற்கு நான் சாட்சியாக இருந்து விடுவேனோ என்கின்ற பயம் எனக்கு வந்தது. துணிந்து வெளியேறினேன். கணம் தப்பினால் எனக்கு மரணம் சம்பவிக்கும் என்பதும் எனக்குத் தெரியும்" என்று கூறிவிட்டு சிறிது அமைதியாகவிருந்தாள் இதிகா.

இதிகாவை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள் சாந்தா.

"நாங்கள் ஏன் இப்ப இப்பிடிக் கதைக்கிறம். எல்லாம் தொடங்கியாச்சு. இனிக் காந்தியாக முடியாது." என்று கவலையாகக் கூறினாள் இதிகா.

" அமைச்சரை ஏன் கொன்றவங்கள்?" என்று நீர்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினனீர். அதுக்கு நிச்சயமாய் ஏதும் காரணம் இருக்கத்தானே செய்யும்." என்றாள் சாந்தா.

" அப்படி இருக்காது. அதுக்குள்ளை இருந்துதானே வெளியிலை வந்தனான். அவர்களைப் பொறுத்தவரை மக்களை எப்போதும் அருட்டின நிலையிலை வைச்சிருக்வேணும். அதற்கு அவ்வப்போ ஒரு சம்பவம் நிகழவேணும். அதை ஆரும் உள்ளுக்கையோ வெளியிலையோ எதிர்த்துக் கேட்டால் அவர்கள் முடிஞ்சினம். இதுதான் எனக்கு வெறுப்பை உண்டு பண்ணிச்சு" என்றாள் இதிகா.

தொடர்ந்து " எங்கடை இயக்கங்கள்.. வெறுமனே ஆயுதத்தை மட்டுமே நம்பிச்சினம்" கூறினாள் இதிகா.

" ஏன் அவை அரசியற்பிரிவு எண்டு வைச்சிருக்கினம் தானே!" சாந்தா இப்படிச் சொன்னதும் இதிகா சிரித்தாள்.

" ஏன் சிரிக்கிறீர்?" என்று சாந்தா கேட்டாள்.

" அங்கை அரசியற்பிரிவு அரசியல் படிக்க இல்லை. புதிசு புதிசா வலுக்கட்டாயமாக ஆக்களைச் சேர்க்கத்தான்." என்று இதிகா கூறினாள். சாந்தா வியப்போடு பார்த்தாள்.

" நீர் அமைச்சரை ஏன் கொலை செய்தவை என்று கேட்டீரெல்லே. நான் அறிஞ்ச வரையிலை, யாழ்ப்பாணத்திலை பொது வாசகசாலை எரிக்கப்பட்டதற்கு பின்னாலை காரணமாயிருந்தவையிலை இப்ப செத்துப்போன முன்னாள் அமைச்சர்தான் காரணம் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாலை அவருக்குமுடிவு கட்டியிருக்கலாம் என்று நினைக்கிறன்" என்றாள்.

" உமக்குக் கனவிசயம் தெரியும்." என்றாள் இதிகா.

" வெளியிலை இருக்கிற எங்களுக்குத் தெரியிற விசயங்கள்.. இயக்கத்துக்குள்ளையிருக்கிறவைக்கு தெரியாது என்பதுதான் உண்மை"

சரி இந்த அரசியலை விடுவம்.

" இதிகா நீர் சிவகுமாரை விரும்புறீரோ?" என்று கேட்டாள் சாந்தா.

" இதற்கு எப்பிடிப் பதில் சொல்லிறதென்று தெரியெல்லை. நான் இயக்கத்துக்கு போக முந்தி, அவரின்ரை நேர்மை, ஒவ்வொரு வேலையையும் செய்யிற நேர்த்தி என்னைக் கவர்ந்தது என்னவோ உண்மைதான். அப்பாகூட வெளிப்படையாகக் கேட்டவர். சிவகுமாருக்கும் விருப்பம் இருந்திருக்கலாம். ஆனால் நான் என்ரை விருப்பத்தையோ அல்லது அவர் தன்ரை விருப்பத்தையோ என்றைக்கும் வெளிப்படையாய்ச் சொன்னதில்லை. அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவுமில்லை.அதற்கிடையிலை நான் எல்லாவற்றையும் தூக்கி எறிஞ்சு போட்டுப் போயிற்றன்." என்று சொல்லும்போது இதிகாவின் குரல் தழதழத்தது.

சாந்தா எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபது

இரண்டு நாட்களுக்குப் பின் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்து கொழும்பில் மக்கள் நடமாட்டம் வழமைக்குத் திரும்பியிருந்தது. என்னதான் வழமைக்குத் திரும்பி இருந்தாலும் தமிழ் மக்களின் முகங்களில் மகிழ்ச்சியைக் காணமுடியவில்லை.

இராணுவத்தின் நடமாட்டம் கூடுதலாக இருந்தது. பரிசோதனைச் சாவடிகள் ஆங்காங்கு புதிதாக அமைக்கப்பட்டு பரிசோதனைகள் கடுமையாக்கப்பட்டிருந்தன.

பெரும்பாலும் தமிழ் மக்களே பரிசோதிக்கப்பட்டனர். இளம் வயதினர் சில சமயம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இவை இப்படியிருக்க ரகீம் என்ற வல்லவன் இயக்கத் தலைமையினால் உடனடியாக வரும்படி அழைக்கப்பட்டிருந்தான். வல்லவனுக்குப் புரிந்து விட்டது. விசாரணை என்று அழைக்கப்பட்டாலும் அது தண்டனை கொடுப்பதற்கான அழைப்பே என்பது புரிந்தது. அவனுடைய நண்பர்கள் பலர் இயக்கத்தை விட்டு வெளியேற முயற்சித்து பிடிபட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் ரகசிய முகாமில் அடைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டார்கள் என்பதை நன்கு அறிவான். தன்னை இன்னுமொரு உளவியலாளன் தொடர்கிறான் என்பதும் அவனுக்குப் புரியும். ஆதலால் இரவோடு இரவாக வீட்டைவிட்டு வெளியேறிவிட முடிவு செய்தான். இந்த முடிவைத் தன் தங்கையிடம் தெரிவிக்க அவள் இருக்கும் பெண்கள் விடுதிக்குச் சென்றான். அவன் அங்கே சென்றபோது நேரம் மாலை ஏழு மணியாகவிருந்தது. வெளியே வந்த அமீனாவுக்கு வியப்பாக இருந்தது. இந்த நேரத்தில் அண்ணன் ஏன் வந்திருக்கிறார். புரியாமல் அவனையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

அவன் அவளைப் பார்த்து " நான் நிரந்தரமாகப் புத்தளம் போகலாம் என்றிருக்கிறன்" என்றான்.

புத்தளத்தில்தான் அவர்களின் உறவினர்கள் இருக்கிறார்கள். அவன் புத்தளம் போவதாக அதுவும் நிரந்தரமாகப் போகப்போவதாகக் கூறியபோது வியப்படைந்து அவனையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள். அவனது முகத்தில் கலவரரேகை ஓடுவதையும் அவள் அவதானிக்கத் தவறவில்லை.

"ஏன் ஏதும் பிரச்சினையே?" என்று கேட்டாள். அவன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு " நான் யார் என்ற விடயம் உனக்குத் தெரிந்துவிட்டதென்பது மேலிடத்திற்குத் தெரிந்துவிட்டது. இனிமல் அவர்கள் என்னை உயிரோடு வைத்திருக்க மாட்டினம்"

என்று அவன் கூறி முடிக்கவில்லை ....அவன் தலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிக் குண்டு ஒன்று பாய்ந்துவந்து தாக்க அவன் அலறிக் கொண்டு கீழே விழுந்தான். அமீனா உள்ளே ஓடிவிட்டாள்.

சத்தம் கேட்டுப் பல வீடுகளின் யன்னல்கள் திறக்கப் பட்டன. ஆனால் திறந்த வேகத்திலே யன்னல்கள் பூட்டவும் பட்டன.

உள்ளே ஓடி வந்த அமீனா கத்திக் கொண்டே கட்டிலில் விழுந்துவிட்டாள்.

விடுதியில் இருந்தவர்கள் "என்ன..என்ன" என்று ஓடி வரும்போது " கதவைச் சாத்துங்கோ.. கதவைச் சாத்துங்கோ.. என்று சத்தமிட்டாள் அமீனா. கதவுகள் படபடவென்று சாத்தப்பட்டன. விடுதியினுள் மயான அமைதி. அமீனா மயங்கிப் போயிருந்தாள்.

அவர்களுடைய விடுதிக்கு முன்னால் படுகொலை நடந்தமையால் விடுதிப் பொறுப்பாளர் காவல் துறையின ருக்குப் தொலைபேசியில் சொன்னார்.

மிகக் குறைந்த நேரத்தில் காவல்துறை, ராணுவம் என்று ஒரு பட்டாளமே அங்கு வந்துவிட்டது. வீதிகள் மூடப்பட்டன. துப்பாக்கிகளுடன் இராணுவத்தினர் அந்தப் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். யாரும் வெளியே போகக் கூடாது என்று ஒலிபெருக்கியில் அறிவித்தார்கள். யாரும் அந்தவீதியினுள் வருவதற்கும் அனுமதி மறுக் கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதிக்கு முன் தலை சிதறிய நிலையில் உயிரிழந்து கிடந்தான் ரகீம் என்கின்ற வல்லவன். வெள்ளைச் சீலை ஒன்றால் பிரேதத்தை மூடினார்கள்.

விடுதியின் தலைவி வெளியில் வந்து அமீனா கதறிக் கொண்டு வந்தது பற்றியும் அதன் பின் தான் அறிவித்தது பற்றியும் கூறினாள்.

அமீனா வரவழைக்கப்பட்டாள். நடுங்கிக் கொண்டே அமீனா வெளியில் வந்தாள். விசாரணை ஆரம்பமாகியது. சிங்களத்தில் கேள்வி கேட்கப்பட்டது. அவளுக்குப் புரிய வில்லை. தமிழ் தெரிந்த காவல்துறையினர் வரவழைக்கப் பட்டனர்.

" நீ எப்போ கொழும்புக்கு வந்தாய்?"

"நான் நான்கு மாதத்துக்கு முன் வந்திருந்தேன்" என்று கூறிய அமீனா தான் வந்தபோது பொலிசில் பதிந்த துண்டைக் காட்டினாள். அது பரிசீலிக்கப்பட்டது.

" எதற்காக கொழும்பிற்கு வந்தாய்?" கேட்டார்கள்.

அமீனா தாங்கள் 24 மணித்தியாலத்திற்குள் யாழ்ப்பாணத் திலிருந்து கலைக்கப்பட்டதையும் தன் குடும்பத்தின் அங்கத் தவர்கள் புத்தளத்திற்குப் போனதையும் தான் வேலை செய்யும் நோக்கில் கொழும்பிற்கு வந்ததாகவும் கூறினாள்.

இயக்கத்தால் அவர்கள் கலைக்கப்பட்ட செய்தியைச் சொன்னதும் காவல் துறையினுடைய விசாரணை முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியது. கடுமையிலிருந்து மெதுமையாகியது.

"கொழும்பில் உனக்குத் தெரிந்த யாரும் இருக்கிறார்களா?"

"ஓம். காக்கா இருந்தவர்"

"அவர் இப்ப எங்கை?" கேட்டார்கள்.

அமீனா அழுதபடி கீழே பிணமாகக் கிடந்த ரகீமைக் காட்டினாள்.

"ஓ..இவன் உன்ரை காக்காவா?" என்று காவல்கேட்டது.

"அவர் இங்கை வந்து பத்து வருசமாகுது." என்றாள். உண்மையில் அப்படியில்லை என்பது அவள் மனதுக்குத்தான் தெரியும்.

"நானும் காக்காவும் வெளியிலை கதைச்சுக் கொண்டு நிற்கேக்கை அங்கையிருந்து யாரோ சுட்டவை. யாரென்று தெரியேல்லை. இருட்டாயிருந்தது" என்றாள் அமீனா.

"உன்ரை காக்கா பயங்கரவாதியா?" என்று உறுக்கிக் கேட்டார் அவர்.

"எனக்குத் தெரியாது" என்றாள் அமீனா.

"இண்டைக்கு ஏன் வந்தவன்"

"தான் புத்தளம் போப்போறனெண்டும். இனி இஞ்சை இருக்க மாட்டனெண்டும் சொல்லிக் கொண்டிருக்கேக்கை சுட்டுப் போட்டாங்கள். அவர் கொஞ்சம் பதட்டமாகத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர்." என்றாள்.

" புத்தளத்திலை ஆர் இருக்கினம்?" கேட்டார்கள்

" உம்மாவும் வாப்பாவும்" சொன்னாள்.

சிறிதுநேரம் யோசித்த அந்தப் காவல்அதிகாரி அவளை விட்டுப் பார்ப்பம் என்று தனக்குள் முடிவு செய்துவிட்டு " சரி நீ போகலாம். கூப்பிடிற நேரம் விசாரணைக்கு வரவேணும்" என்று கூறி அவளை அனுப்பினார்.

அமீனா உள்ளுக்குப் போனதும் விடுதிக் காப்பாளரைக் கூப்பிட்டு அந்தப் பெண்ணிடம் சற்று அவதானமாக இருக்கும் படியும் அவளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் படியும் கூறிவிட்டு புறப்பட்டார். இதற்கிடையில் குற்றவியல் பிரிவினர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்து இறந்து கிடந்தவனின் உடலை அனுப்பவேண்டிய இடத்திற்கு அனுப்பி விட்டு அவர்களும் புறப்பட்டனர்.

இராணுவத்தினர் மாத்திரம் அங்கு நின்றிருந்தனர். தங்களுடைய இடத்திற்கு வந்து இப்படிச் செய்துவிட்டார்களே என்ற கோபத்தில் இருந்தார்கள்.

அந்த இராணுவ அதிகாரி மைக்கை எடுத்துஅந்த வீதியிலுள்ள சகலரையும் வெளியில் வரும்படி பணித்தார். அந்த வீதியில் இருபத்து நான்கு வீடுகள் இருந்தன.

எல்லோரும் வெளியே வந்தனர். வந்தவர்களில் சிங்கள இனத்தவரை ஒரு பக்கத்திலும் தமிழர்களையும் முஸ்லீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் இன்னொரு பக்கத்திலும் நிறுத்தினார்கள்.

பின்பு இராணுவத்தினர் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் நுழைந்து தேடுதல் நடத்தினர். அவர்களின் தேடுதல் முடிந்ததும் சிங்களவர்களை அவர்களின் வீடுகளுக்குள் செல்ல அனுமதித்தனர். தமிழர்களை இளையவர்கள் வேறாகவும் முதியவர்களை வேறாகவும் நிற்க வைத்தனர்.

அவர்களில் முதியவர்களை உள்ளே போகும்படி கூறினர். அவர்களில் சிலர் தங்கள் பிள்ளைகளைவிட்டுப் போகமுடியாதெனக் கூற அவர்களை வலுக்கட்டாயமாக உள்ளே அனுப்பினர்.

மீதமுள்ள இளசுகளில் பெண்களும் ஆண்களும் இருந்தனர். விசாரணை ஆரம்பமாகியது. அவர்கள் பெண் பிள்ளைகளை விசாரணை செய்த முறையை பேனா கொண்டு எழுதமுடியாது. அவ்வளவு மனிதாபிமானமற்ற முறைகளாக இருந்தது.

இறுதியில் நால்வரைத் தவிர மற்ற எல்லாரையும் உள்ளே போக அனுமதித்தனர். அந்த நால்வரின் பெற்றார்களை மட்டும் கூப்பிட்டு மேலதிக விசாரணைகள் முடிந்ததும் அனுப்பி வைப்போம் என்று கூறி அழைத்துச் சென்றுவிட்டனர்.

அவர்களின் பெற்றார்கள் மனம் வெதும்பி,

" அவங்கள் ஆரோ செய்ய எங்கடை பிள்ளையள் ஏன் அனுபவிப்பான். நாசமாய்ப் போனவங்கள் அனுபவிப்பாங்கள்" என்று தமிழ் இயக்கங்களைத் திட்டிவிட்டு அழுதபடி வீட்டிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் சென்றனர்.

கொண்டு செல்லப்பட்ட இளைஞர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. இதுவரை அப்படி நடக்கவுமில்லை. அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டு விடுவார்கள் என்பதுதான் இதுவரையில் நடந்துவரும் செயற்பாடு.

இதற்கு விடுதலைக்குப் போராடும் யாரும் எவ்விதமான விளக்கமும் கொடுக்கவுமில்லை. செயற்பாடுகளை நிறுத்தக்கூடிய திட்டங்களும் முன்வைக்கப்படவுமில்லை.

அமீனா தன் கண்ணுக்கு முன்னால் தன் அண்ணன் சுடப்பட்ட அந்த அதிர்விலிருந்து மீள முடியாமல் தவித்தாள். இதிகா பற்றி பொலிசாருக்குச் சொல்லி விடுவோமா என்றும் நினைத்தாள்.

அவளைப்பற்றிச் சொல்லி பின்பு தானும் பிரச்சினையில் அகப்பட்டுவிடக் கூடாது என்று நினைத்து அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிட்டாள். அத்தோடு இதிகா பற்றி தமையன் சொன்ன செய்தியும் அவள் மீதுள்ள கோபத்தைத் தணித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபத்தொன்று

சுவந்திகா கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போன பின் சிவகுமார் அதனை எப்படியாவது சாந்தாவுக்குத் தெரியப்படுத்தி இதிகாவை ஜெர்மனிக்கு அனுப்பிவிட வேண்டு மென்பதில் பதட்டமாக இருந்தான்.

அன்று பாடசாலைக்குப் போன நேரம் தொடக்கம் சாந்தாவின் தொலைபேசி வராதா என்று எதிர்பார்த்து எதிர் பார்த்துத் தன் பாடங்களை சரிவரச் செய்யாமல் மாணவர்க ளின் கவனத்திற்கும் ஆளாகியிருந்தான்.

நேரம் பன்னிரண்டாகி இருந்தது.

மத்தியான உணவுக்குப்போக தயாரானபோது சாந்தாவின் தொலைபேசி பற்றிய அழைப்பு வர வேகமாகச் சென்று தொலை பேசியை எடுத்தான். மறுமுனையில் சாந்தாதான்.

தங்களுக்குப் பயமாயிருப்பதாகவும் எந்த நேரத்திலும் தங்கள் வீட்டைப் பரிசோதிக்க இராணுவம் வரலாமென்றும் அவள் பதட்டத்தோடு கூறினாள்.

சிவகுமார் அங்குமிங்கும் பார்த்துவிட்டு சுவந்திகா சொன்ன செய்தியைக் கூறி மேமாதம் முதலாந்திகதி ஜெர்மனிக்குச் செல்லத் தயாராக இருக்கும்படியும் சுவந்திகா உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பிடத்திற்கு வந்து அழைத்துச் செல்வாள் என்றும் கூறி அவர்கள் தங்கியிருக்கும் விலாசத்தைக் கேட்டான். அவள் விலாசத்தைக் கூற அருகிலிருந்த பேப்பரை எடுத்து எழுதிவிட்டு அங்கு நின்ற பெண்ணுக்கு நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டான்.

அங்கிருந்து அவன் புறப்பட்ட சிறிது நேரத்தில் திரும்பவும் அவனுக்கொரு தொலைபேசி வந்தது.

அதனை அவன் எடுத்தபோது மறு கரையில் சுவந்திகா.

தன்னுடைய கடிதம் கிடைத்ததா என்று கேட்டாள்.

கடிதம் கிடைத்ததையும் சற்றுமுன் சாந்தா கதைத்ததையும் கூறி சாந்தா, இதிகா தங்கியிருந்த வீட்டு விலாசத்தையும் கொடுத்தான். பிறகு எடுப்பதாகக் கூறி தொலைபேசியை வைத்துவிட்டாள் சுவந்திகா.

இதற்கிடையில் சிவகுமாருக்குப் போன் பண்ணவந்த சாந்தாவும் இதிகாவும் அந்த இடத்தைவிட்டு நகர எத்தனித்த போது யாரோ ஒரு பெண் அவர்களைக் கூப்பிடுவது கேட்கத் திரும்பினவர்கள் அதிர்ந்து போய்விட்டார்கள். கூப்பிட்டவள் வேறுயாருமில்லை அமீனாதான். ஓடுவதா இல்லை நின்று கதைப்பதா என்று யோசித்த இருவரும் வேகமாக நடக்கத் தொடங்கினர். அவர்கள் திரும்பியே பார்க்கவில்லை. பக்கத்தில் இருந்த சந்து ஒன்றினில் நுழைந்தனர்.

நுழைந்த பின் துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டதையும் ஒரு பெண் அலறுவதையும் கேட்டுத் திடுக்கிட்டுவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லமாகச் சந்திலிருந்து வெளியே வந்து எட்டிப் பார்த்தனர். அமீனா இரத்தவெள்ளத்தில் விழுந்து கிடந்தாள்.

அங்கு நின்ற எல்லோரும் ஆளுக்கொரு திசையில் சிதறி ஓடினர். சாந்தாவும் இதிகாவும் அவர்களோடு சேர்ந்து ஓடினர்.

வீட்டடிக்கு வந்ததும் வேகத்தைக் குறைத்து மெதுவாக வீட்டில் நுழைந்து கதவைச் சாத்தினர்.

இருவருக்கும் ஒரே குழப்பமாக இருந்தது. யார் சுட்டது? எதற்காக அமீனாவைச் சுட்டார்கள்? ... எதுவுமே புரியாமல் இருவரும் சிறிது நேரம் அறை விளக்கையும் போடாமல் அப்படியே இருந்தனர்.

சிவகுமார் கூறியபடி ஆயத்தங்கள் செய்ய வேண்டு மென்று இருவரும் எழும்பியபோது கதவு தட்டிச் சத்தம் கேட்டது. இருவரும் பதகழிச்சுப் பேசாமல் இருந்தனர்.

" அம்மா சாந்தா நான்தான் சித்தப்பா" என்று சித்தப்பாவின் குரல் கேட்டதும் சாந்தா எழுந்துபோய் கதவைத் திறந்தாள். அவசரஅவசரமாக கதவைப் பூட்டிவிட்டு " உங்களுக்கு விசயம் தெரியுமே அடுத்த றோட்டிலை ஒரு முஸ்லிம் பெட்டையைச் சுட்டுப் போட்டாங்கள்" என்று களைச்சுக் களைச்சுச் சொன்னார்.

" யார் சுட்டது?" என்று இதிகா கேட்டாள்.

" வேறை யார்! இயக்கம்தான்" திடுக்கிட்டுவிட்டாள் இதிகா. அவளுக்கு ஒரு விடயம் விளங்கியது. இயக்கம் தன்னைத் தேடி மிக அருகில் வந்து விட்டது என்பதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இயக்கம் என்னண்டு உப்பிடிப் பகிரங்கமாக கொழும் பிலை சுடுகிறாங்கள்?" சாந்தா கேட்டாள்.

"அவங்கள் கனபேர் உலவுறாங்கள். முந்த நாள் இன்னொரு முஸ்லீம் பொடியனை அவன் அவளின்ரை சகோதரியோடை கதைச்சுக் கொண்டு நிற்கேக்கை சுட்டுப் போட்டாங்கள். அவனும் இயக்ககாரனெண்டு கதைக்கிறாங்கள். சிலவேளை இண்டைக்குச் செத்த பெட்டையும் அவனின்ரை சகோதரமோ என்னமோ ஆருக்குத் தெரியும்" என்று அவர் சொன்னபோது இதிகா இன்னும் குழப்பமடைந்தாள்.

"எதுக்கும் நீங்கள் கவனமாய் இருங்கோ" என்றார் அவர்.

இதிகாவுக்கு யாவும் குழப்பமாகவே இருந்தது.

சாந்தாவின் சித்தப்பா போய் சில மணி நேரங்களில் அவர்களின் வீட்டுக் கதவு மீண்டும் தட்டப்பட்டது. சாந்தா பயந்து பயந்து போய்க் கதவைத் திறந்தாள்.

வெளியே நின்றவரைப் பார்த்ததும் திடுக்கிட்டு வியப்போடும் மகிழ்வோடும் அவரை உள்ளே வரவிட்டுக் கதவைப் பூட்டினாள்.

வந்தவரைப் பார்த்த இதிகா சிறிது நேரம் மலைத்துப் போய் நின்றாள். அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. தன் மனதிற்குள் தான் ஜெர்மனி போகமுன் யாரை ஒரு தடவையாவது பார்த்து விடவேண்டுமென நினைத்தாளோ அவர் அவள் முன்னே நின்றாள். சந்தோசம் அவள் முகங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துலாம்பரமாகத் தெரிந்தது.

வந்தது சிவகுமாரேதான்.

சிவகுமாரை இருக்கச் சொல்லிவிட்டு இருவரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிவகுமாரே மௌனத்தைக் குலைத்தான்.

" நீண்ட நேரம் நிற்கமுடியாது. வந்த வேலையை முடித்து விட்டுக் கிளம்புகிறேன். நாட்டு நிலைமை மிக மோசமாகி விட்டது. கொழும்பு கூடப் பாதுகாப்பான பிரதேசமாக இல்லை. ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு கொலை நடக்கிறது. ஒவ்வொரு சிங்களவரும் சாக பத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் காணாமலாக்கப்படுகினம். இயக்கங்களுக்குள்ளையான சகோதரப் படுகொலைகள் எல்லையில்லாமல் நடக்குது. அன்றைக்குக் கொலையுண்ட முஸ்லீம் பொடியனும் இயக்கத்தின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவனாம். சுட்டதும் இயக்கம்தானாம். எதுவுமே புரியவில்லை. இண்டைக்கு ஒரே அல்லோல கல்லோலமாக இருக்குது. யாரோ ஒரு முஸ்லிம் பெட்டையையும் சுட்டிட்டாங்களாம். ஒரு மாதிரிச் சமாளிச்சுக் கொண்டு வந்திட்டன். சரி இதிகா கவனமாகக் கேளுங்கோ. உங்களை அழைத்துச் செல்ல சுவந்திகா வாகனத்தோடு வருவா. மேமாதம் முதலாந் திகதி அதாவது நாளைக்கு மாலை 6 மணிக்கு வருவா. அவ உள்ளுக்கை வரமாட்டா. இரவு பத்து மணிக்கு விமானம். சில வேளை இதை ஒழுங்கு செய்யிறவர் வேறை கடவுச் சீட்டு தருவார் என்று நினைக்கிறன். விமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்திலை சோர்ந்து போகாமல் உசாராய் நில்லுங்கோ. ஜெர்மனியிலை இறங்கினாப்பிறகு எனது பாடசாலைக்குப் போன் பண்ணுங்கோ. நீங்கள் போகப் போறது கிழக்கு ஜெர்மனி. பிறகு கிழக்கினூடாக மேற்கு ஜெர்மனிக்குள் நுழைந்ததும் புகையிரதம் மூலமாக போய் ஒரு ஸ்ரேசனிலை இறங்குவியள் அங்கு உங்களை அழைத்துச் செல்லச் சந்திரன் நிற்பார். இலங்கை விமான நிலையத்தைவிட்டுப் புறப்பட்டால் போதும். கவனம். நான் புறப்படப் போறன்." என்று சொல்லிவிட்டு சிவகுமார் புறப்பட்டான். புறப்பட்டுவிட்டான்.

சிவகுமார் போகும்போது இதிகாவின் கண்களில் கண்ணீர்வழிந்தது. சிவகுமார் அதனை அவதானித்திருந்தாலும் அவதானியாதவன்போல் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டு புறப்பட்டான். சிவகுமார் போனபின்பு நாளை புறப்படுவதற்கான காரியங்களில் இருவரும் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தியிரண்டு

மறு நாட்காலை பொலபொலவென்று விடிந்தது. மே மாதம் முதலாந்திகதி. உலகத் தொழிலாளர்களுக்கான தினம். கொழும்பு நகரம் தன் வழமைக்குத் திரும்பி இருந்தது. மே தினம் என்றபடியால் ஆங்காங்கு சிவப்புக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

மாலை வேளையில் நடைபெறப்போகும் கட்சிகளின் மேதின ஊர்வலங்களுக்கான தயாரிப்புகளும் ஆங்காங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அன்று பொது விடுமுறையாதலால் அலுவலகங்கள் பாடசாலைகள் எல்லாம் மூடப்பட்டிருந்தன. மக்கள் தங்களின் அன்றாடக் கடமைகளில் மூழ்கி இருந்தனர்.

சிவகுமார் இதிகாவின் பயணத்தையிட்டு பதட்டமாக இருந்தான். அவனால் ஒரு இடத்தில் நிலையாக இருக்க முடியவில்லை. இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தான்.

இதிகாவும் சாந்தாவும் காலை எழும்பி மாலைப் பயணத் திற்காக தயார் நிலையில் இருந்தனர். இதிகாவின் இதயமும் டிக்.. டிக் என அடித்துக் கொண்டிருந்தது. தற்செயலாகப் பயணம் தோல்வியில் முடிந்தால் தன்னுடைய வாழ்க்கைக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவும் எழுதப்பட்டுவிடும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

" சாந்தா, நான் போனபிறகு நீங்கள் என்ன செய்வியள்?" என்று இதிகா கேட்டாள்.

" நீங்கள் போனபிறகு நான் சித்தப்பா வீட்டுக்குப் போயி டுவன். இங்கை கொழும்பிலை ஏதும் வேலைக்கு முயற்சிப்பன். அவ்வளவுதான்." என்றாள் சாந்தா.

" அப்ப எனக்காகத்தான் இங்கை இருந்தீங்களா?"

" ஓம்" என்றாள் சாந்தா. இதிகா அவளை நன்றியோடு பார்த்தாள்.

" நான் போன பின், நீங்கள் சிவகுமாரைத் திருமணம் செய்யலாமே!" என்றாள் இதிகா.

சாந்தா சிரித்தாள். தொடர்ந்து...

" அப்பிடியான எண்ணம் எனக்கு இல்லை" என்ற சாந்தா தொடர்ந்து, " ஏன் இதிகா நீங்கள் சிவகுமாரைக் காதலிக்கிறியள் தானே"

சாந்தாவின் இந்தக் கேள்விக்கு இதிகாவால் உடனே பதில் கொடுக்க முடியவில்லை. சிறிது நேரம் யோசித்துவிட்டு " இதற்கு எப்படிப் பதில் சொல்வதென்று தெரியேல்லை. சிவகுமார் எங்கடை வீட்டை வந்தபோதுதான் முதலில் சந்தித் தேன். பார்த்தவுடனே பிடிக்கவேண்டும் என்று சொல்வார்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படித்தான் அவரை எனக்குப் பிடித்திருந்தது. அதற்குப் பிறகு அவரின் நேர்மையான போக்கு எனக்குப் பிடித்தது. பிறகு அவர் யார் என்று தெரிந்த போது அவர்மேல் ஒரு இரக்கம் உருவாகிப் பிடித்தது. அவர் ஒவ்வொரு விடயத்தையும் அலசிப் பார்க்கும் முறையும் அறிவார்ந்த பூர்வமாக அணுகும் முறையும் என்னைக் கவர்ந்தது. ஆனால் இவை எதையும் நான் அவரிட்டை எப்பவும் சொன்னதில்லை. தமிழருடைய விடு தலைப் போராட்டத்தை பிழையான வழி முறை என்று கூறியபோது எனக்குப் பிடிக்காமலும் போனது. அவரைமீறி அவருக்கும் தெரியாமல்தான் நான் இயக்கத்திற்குப் போனேன். இன்றைக்கு அன்று அவர் சொன்னது எவ்வளவு உண்மை என்பதை அறிந்து அவரைப் பிடிக்கும் போதும் இன்று அவரை விட்டுப் போகப் போகிறேன்." என்று கூறிவிட்டு அழ ஆரம் பித்தாள் இதிகா.

சாந்தா எழும்பிச் சென்று அவளை ஆற்றுப்படுத்திவிட்டு

" இதற்கு ஏன் கவலைப்படுகிறியள். நீங்கள் என்ன நிரந்தரமாக அங்கை இருக்கப் போறியளே. எப்படியும் ஒரு நாள் திரும்ப வருவியள். அப்ப அவரை மணமுடித்தால் போயிற்று" என்று கூறிவிட்டு நேரத்தைப் பார்த்தாள்.

நேரம் 5.30 மாலையாக இருந்தது.

இன்னும் அரைமணியில் சுவந்திகா வந்துவிடுவாள் என்று வீதியை எட்டிப் பார்த்தாள். வீதி வெறிச்சோடிப்போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. மாலை 5 மணிக்குப் பிறகு யாரும் வீட்டைவிட்டு வெளியில் வருவதில்லை.

வீதியின் தொங்கலில் ஒரு வாகனம் வந்து கொண்டிருந்தது. அது சுவந்திகாவினுடையதுதான். அவர்கள் வீட்டின் முன் நின்றதும் தாமதமில்லாமல் இதிகா சென்று ஏறிக் கொண் டாள்.

வாகனத்தின் சாரதி தன் நண்பர் ஒருவரையும் கூட்டிச் செல்வதற்காக பொரள்ளை பக்கம் வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான்

அன்றையதினம், நாட்டின் பிரதான கட்சியின் மேதினப் பேரணி, இரண்டு வழிகளில் வந்துகொண்டிருந்தது. மெசஞ்சர் வீதி பேரணியில் பெரும் எண்ணிக்கையிலான ஆதரவாளர்கள் திரண்டிருந்தனர்.

நேரம் மாலை ஆறு மணியை அண்மித்திருந்தது.

அப்போதய ஜனாதிபதி தனது மெய்ப்பாதுகாவலர்களுடன் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்தார். இதனால் வீதிகள் சில மூடப்பட்டும் இருந்தன. அவரது மெய்ப்பாதுகாவலன் கூட்டம் நடைபெறும் மைதானம் நிரம்பி வழிவதாகக் கூறினான். ஜனாதிபதிக்குச் சந்தோசமாக விருந்தது.

ஜனாதிபதியின் வாகனம் சுகததாஸ உள்ளரங்கத்துக்கு அண்மையிலுள்ள வீதியொன்றில் சென்று கொண்டிருந்தது. அந்த வீதி வழியாக சுவந்திகா, இதிகா வந்த வாகனமும் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது.

சுவந்திகா வந்த வாகனத்தின் சாரதி தன்னுடைய நண்பர் ஒருவரை பொரளையில் ஏற்றிச் செல்வதற்காக இந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்திருந்தான்.

சுவந்திகா வந்த வாகனமும் இந்த நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டது. ஊர்வலம் போகுமட்டும் வாகனத்தைப் காவல்துறையினர் நிறுத்தி இருந்தனர்.

சுகததாஸ, விளையாட்டரங்குக்கு அருகில் வாகனத்தி லிருந்து இறங்கிய ஜனாதிபதி ஆமர் வீதிவரை நடந்தே வந்தார்.

ஜீப்பில் ஏறுவதற்கு ஜனாதிபதி தயாராகிக் கொண்டி ருந்தார். மெசஞ்சர் வீதியிலிருந்து வந்துகொண்டிருந்த மக்களுக்கு தன் வாகனத்திலிருந்து கொண்டே கையசைத்தார்.. ஆனால் ஏற்கனவே திட்டமிட்டிருந்த அந்தக் கொலையாளி சந்தர்ப்பத்தை இலகுவாகப் பயன்படுத்திக் கொண்டான்.

மெசஞ்சர் வீதியின் ஊடாக வந்துகொண்டிருந்த பேரணி, முன்னோக்கி நகர்கையிலே குண்டு வெடித்தது. அந்த இடத்தில் நின்ற யாருமே தப்பவில்லை. ஜனாதிபதி உள்ளடங்கலாக பலர் இறந்தனர்.

குண்டு வெடித்த சத்தம் கேட்டதும் சுவந்திகா வந்த வாகனத்தின் சாரதி வேறு திசைக்கு வாகனத்தைத் திருப்பி விமான நிலையத்தை நோக்கிச் செலுத்தினான்.

வானொலியில் திடீரெனப் பாட்டு நிறுத்தப்பட்டு அவசர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஒலிபரப்பப்பட்டது. செய்தி சிங்களத்தில் இருந்த மையால் இதிகாவுக்குப் புரியவில்லை. அவள் கேள்விக் குறியு டன் சுவந்திகாவைப் பார்த்தாள்.

மேதினக் கூட்டத்திற்குச் சென்று கொண்டிருந்த இலங்கை ஜனாதிபதி அவர்கள் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளார் என சுவந்திகா இதிகாவுக்கு விளக்கிக் கூறினாள்.

வாகனம் விமான நிலையத்தை நெருங்கிக் கொண்டி ருந்தது. இவர்கள் பயப்பட ஆரம்பித்தனர். சாரதி அவர்களைப் பயப்பிட வேண்டாமென்றும் இப்படியான தருணத்தில்தான் சுலபமாகச் செல்லலாம் என்று தன் அனுபவத்தைக் கூறினான். இந்தநேரம் விமான நிலையத்தில் பெரிதாகக் கவனிக்கமாட் டார்கள் சுலபமாக உள்ளே விட்டுவிடுவார்கள். நான் சொன்ன தெல்லாவற்றையும் உங்கள் நண்பிக்கும் சொல்லுங்கள். உங்கள் ஒறிஜினல் கடவுச் சீட்டைத் தாருங்கள். நான் ஏற்கனவே தந்த கடவுச் சீட்டை உங்கள் நண்பிக்கும் கொடுங்கள்" என்று கூறி னான்.

அவன் சொன்னபடியே சுவந்திகா கடவுச் சீட்டுகளை மாற்றவும் வாகனம் விமான நிலையத்திற்கு முன்னால் போய் நின்றது.

விமான நிலையம் பரபரப்பாக இருந்தது.

இருவரும் இறங்கி வாசலுக்குச் சென்று அங்கு காவலுக்கு நின்ற இராணுவச் சிப்பாயிடம் கடவுச் சீட்டையும் பயணச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீட்டையும் காட்டினர். அவன் உள்ளே அனுமதிக்க மெதுவாக உள்ளே ஜெர்மனுக்குச் செல்லும் விமானக் கவுண்டருக்குச் சென்று தங்கள் விபரங்களைக் காட்ட அவர்களும் நுழைவுச் சீட்டை வழங்கினார்கள்.

இனிமேல்தான் முக்கிய கட்டம். விமான நிலையத்தில் அதிகாரிகள் தொடக்கம் ஊழியர்வரை படுகொலை பற்றியே கதைத்துக் கொண்டிருந்தார்கள். நிலைமை பதட்டமாகவும் இருந்தது.

இறுதியான பரிசோதிக்கும் இடத்திற்குச் சென்று காட்டுகி றார்கள். இவர்களுடைய கடவுச் சீட்டைப்பார்க்கும்போது மற்ற அதிகாரி படுகொலைபற்றி விசாரிக்க அந்தக் கதையோடு இவர்களின் கடவுச் சீட்டில் முத்திரையிட்டு அனுப்பி விடு கிறான் அந்த அதிகாரி. எந்தவிதத் தொந்தரவும் இல்லாமல் உள்ளே நுழைகிறார்கள். இதிகாவுக்கு இப்பாதுதான் நிம்ம தியாக இருந்தது.

சந்தோசத்தோடு இருவரும் உள்ளே வந்து ஒரு கோப்பிக் கடையில் கோப்பி அருந்திவிட்டு விமானத்தில் ஏறுவதற்காக நடக்கத் தொடங்கினார்கள். காலம் அவர்களை கடத்திச் சென்று கொண்டிருந்தது

**இரண்டாம் பாகம் முற்றிற்று**

A. KUGAN
72, 2nd LANE
ANANDA PURI
TRINCO

மகுடம் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முப்பது வருடங்களாக நடந்த யுத்தத்தில் நேரடியாகப் பாதிக்கப்படாமல் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டவர்கள். இதிகா, சாந்தா, சிவகுமார், சுவந்திகா, சந்திரன், கனகம், சுந்தரம் வாத்தியார் ஆகியோரில் சிலர் மறைந்தவர்கள் சிலர் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இவர்கள் ஈழ வரலாற்றோடு அசைந்து கொண்டிருப்பவர்கள். போர்க்கால இலக்கியங்கள் இதுவரை யாழ் குடா நாட்டுக்குள் நடந்த நிகழ்வுகளின் தொகுப்பாகவே வெளிவந்துள்ளன. யுத்தத்தைச் சாடியவையும் இயக்கங்களை தாம் போன போக்கில் விமர்சித்தவையுமாகவே இருந்ததை அவதானிக்கலாம். உண்மையில் வரலாற்றோடு அசையும் ஆதாரங்கள் களத்திற்கு வெளியே அல்லது வெளியே செல்லத் தயாராக இருந்தவர்களின் மத்தியில்தான் இருந்தனர். இதிகாவில் கூடுமானவரை பிரச்சினைகளையும் பாத்தி ரங்களையும் இயங்கவிட்டு வரலாற்றை அசைய வைக்க முயற்சித்திருக்கிறேன்.

**மு.தயாளன்**

மகுடம்

ISBN: 978-624-5849-34-5

9 786245 849345

800.00

Wanasinghe Printers, Batticaloa. 065-2227170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org